




# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 418 பிலவ வருடம், மார்கழி மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை
(03.01.2022) ஹிஜ்ரி - 1443, ஜமா அத்துல் அவ்வல் - 29, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30







## தமிழ்க்கட்சிகளின் வரைவை தமிழரசுக் கட்சி நிராகரிப்பு



### அது அரசியல் குழுவின் முடிவு என்கிறார் சிறிதரன் எம்.பி.

02 பக்கம்

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்



நாடு முழுவதும் உள்ள அரச மற்றும் அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளும் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவிக்கின்றது.

சுகாதார வழிகாட்டல்களுக்கமைய, பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது குறித்து உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் குறிப்பிடுகின்றது.

02 பக்கம்

## மாணவர் வாகன போக்குவரத்து கட்டணம் இன்று முதல் அதிகரிப்பு



எரிபொருள் விலையேற்றத்தை அடுத்து, பாடசாலை போக்குவரத்து சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கான கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து சேவை சங்கங்கள் தெரிவிக்கின்றன. 02 பக்கம்

## உஷ்



பின்னவல யானைகள் சரணாலயத்தில் பிறந்த யானைக்குட்டி ஒன்றுக்கு வனவிலங்கு இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் பெயரை சூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

அந்த யானைக்குட்டிக்கு திஸா என்று சுருக்கமாக பெயர் வைக்கப்படவுள்ளதாம்.

***

புதுவருடத்தை முன்னிட்டு இன்று கட்சித் தலைமை அலுவலகத்தில் நடக்கவிருந்த விருந்து நிகழ்வுகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இரத்துச் செய்துள்ளாராம்.

அம்பாந்தோட்டையில் மக்கள் சந்திப்புகளை நடத்திவரும் சஜித், மக்கள் இப்போது படும் துயரங்களை கருத்திற்கொண்டு கேளிக்கை நிகழ்வுகள் மற்றும் வீண் செலவுகளை செய்யவேண்டாமென கட்சி உறுப்பினர்களை பணித்துள்ளாராம்.

## எரிவாயு வால்வுகள் அல்ல: மாறியது அரசாங்க வயர்களே

### அரசாங்கத்தை விரட்டி அடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்கிறார் சஜித்



வால்வு மாற்றத்தினால் எரிவாயு பிரச்சினை இன்னும் சில வாரங்களுக்கு தீர்க்கப்படாது என அரசாங்கப் பிரதிநிதிகள் கூறுவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, உண்மையில் மாறியது எரிவாயு வால்வுகள் அல்ல, அரசாங்க வயர்களே என்றும் அவர் தெரிவித்தார்.

எனவே, வால்வுகளை மாற்றியுள்ள அரசாங்கத்தை விரட்டி அடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமல்லவா எனவும் மக்களிடம் வினவினார். 02 பக்கம்

## பச்சை மிளகாய் கிலோ ரூ.1500



சந்தையில் பச்சை மிளகாய் விலை கணிசமாக உயர்ந்துள்ளது.

நேற்று கம்பஹா பிரதேசத்தில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 1000 – 1500 ரூபா வரை விற்பனையாகியுள்ளது.

மரக்கறிகள் தட்டுப்பாடு காரணமாக வியாபாரிகள் தன்னிச்சையாக விலை நிர்ணயம் செய்வதாக மக்கள் கூறுகின்றனர்.

## சிலிண்டர் விநியோகத்தில் பண மோசடி

## சமையல் எரிவாயு பெற மக்கள் அவதி



சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவும் வேளையில், வீட்டு உபயோக சிலிண்டர்களை வீட்டுக்கு கொண்டு வந்து தருவதாக கூறி பண மோசடி நடப்பது தங்களுக்கு தெரியவந்துள்ளதாக லிட்ரோ மற்றும் லாவ்ஸ் ஆகிய இரு எரி வாயு நிறுவனங்களின் அதிகாரிகள் தெரி வித்தனர்.

'ஹோம் டெலிவரி' சேவைகள் என்று கூறுபவர்கள் கொழும்பில் உள்ள வீடுகளுக்கு எரிவாயு சிலிண்டர் வழங்குவதற்கு 4ஆயிரத்து 100 முதல் 4ஆயிரத்து 500 ரூபாவும், கொழும்புக்கு வெளியே மொரட்டுவ, மஹரகம, கம்பஹா, பாணந்துறை மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளுக்கு எரிவாயு சிலிண்டர் வழங்க 5ஆயிரம் ரூபாவும் வசூலிப்பதாக மக்கள் தெரிவித்துள்ளனர். 02 பக்கம்

## 3 மாவட்டங்களில் ஒமிக்ரொன் பரவல்

•யோ.தர்மராஜ்

நாட்டில் ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக சுகாதாரத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி, இதுவரை 48 ஒமிக்ரொன் நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன், அவர்கள் கொழும்பு, கம்பஹா மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலிருந்தும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக விசேட வைத்திய நிபுணர் மல்காந்தி கல்ஹேன தெரிவித்துள்ளார்.

வீட்டின் பராமரிப்பிலுள்ளவர்களிடையேயும் எதிர்காலத்தில் ஒமிக்ரொன் தொற்று உள்நுழையலாம் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வாரங்களில், ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதுவரை, 48 ஒமிக்ரொன் நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். முக்கியமாக கொழும்பு, கம்பஹா மற்றும் அநுராதபுரம் மாவட்டங்களிலிருந்தும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 02 பக்கம்

## திருமலை எண்ணெய்க் குதங்களை வழங்குவதற்கான தீர்மானம் இன்று

### அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்கிறார் கம்மன்பில

•யோ.தர்மராஜ்



திருகோணமலை சீனத்துறைமுகப் பகுதியிலுள்ள 61 எண்ணெய்த் தாங்கிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் இந்தியன் ஓயில் கோர்ப்பரேஷனும் இணைந்து அபிவிருத்தி செய்வதற்கு உருவாக்கப்பட்டுள்ள ரின்கோ பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் என்ற புதிய நிறுவனம் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் இன்று... 02 பக்கம்

## அரச ஊழியர்கள் அனைவரும் இன்று தொடக்கம் கடமையில்

அனைத்து அரச ஊழியர்களையும் இன்று முதல் வழமைபோன்று கடமைக்கு திரும்புமாறு பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது. சுகாதார நடைமுறைகளை பின்பற்றி, அனைத்து அரச ஊழியர்களையும் இன்று பணிக்கு சமுகமளிக்குமாறு அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார். 02 பக்கம்

## எரிவாயு தட்டுப்பாடு நீங்க மூன்று வாரங்களாகும்

### லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவிப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிவாயு தட்டுப்பாடு நீங்குவதற்கு மேலும் மூன்று வாரங்கள் செல்லும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

சந்தையில் காணப்படும் சிலிண்டர்களை மீளப் பெற்றுக்கொள்ளல் மற்றும் புதிய தரப்படுத்தல் செயற்பாடுகளால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக நிறுவனத்தின் தலைவர் தெஷார ஜயசிங்க தெரிவித்தார். எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்காக, புத்தாண்டு தினமாகிய நேற்றுமுன்தினமும் பல்லாயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு 900 மில்லியன் அமெரிக்க டொலர்களை கையளிக்கிறது இந்தியா

டொலர் நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கைக்கு 900 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க இந்தியா தீர்மானித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இவற்றில் 400 மில்லியன் அமெரிக்க டொலர்களை பரிமாற்ற ஒப்பந்தமாகவும் மிகுதி 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை எரிபொருள் கொள்வனவுக்காக கடனாகவும் வழங்கப்படவுள்ளதாக தெரியவந்துள்ளது. அத்தியாவசிய உணவு மற்றும் மருந்து களை வாங்குவதற்காக கடனாக மேலும் 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை பின்னர் வழங்குவதற்கும் இந்தியா தீர்மானித்திருப்பதாகவும் மேலும் தெரியவந்துள்ளது.

## கமெண்ட் கந்தர்..



பச்ச மிளகா கடிச்சாதான் கண்கலங்கும்...

இப்பலாம் வாங்க நெனச்சாவே கண்ணு கலங்குது...






ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நேற்று பிற்பகல் ஸ்ரீலங்காதீஸ்வர பத்ம விபூஷண விருது ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே மகா விகாரையின் ஸ்ரீ கல்யாணி சமகிரிதர்ம மகா சங்க சபையினால் வழங்கப்பட்டது.

# குவைத் எயார்வேஸ் சேவையின் இலங்கைக்கான பயணச் செயற்பாடுகள் அதிரடியாக நிறுத்தம்

குவைத் எயார்வேஸ் இலங்கைக்கான போக்குவரத்து நடவ டிக்கைகளை திடீரென இடைநிறுத்தியுள்ளதுடன் மற்றுமொரு முக்கிய விமான நிறுவனம் இலங்கைக்கான தனது நடவடிக்கைகளை இடைநிறுத்துவது குறித்து பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாரத்துக்கு ஒருமுறை மட்டுமே இயங்கி வந்த குவைத் பயணிகள் சேவை திடீரென இடைநிறுத்தப்பட்டுள்ளது. தரையிறங்கும் செலவுகள் அதிகரித்துள்ளமை, அந்நிய செலாவணி பிரச்சினையின் காரணமாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் உரிய தாய் நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்தாத நிலை ஏற்பட்டுள்ளதாக போன்ற பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குவைத் எயார்வேஸ் ஒப்பீட்டளவில் குறைந்த கட்டண விமான சேவையாக காணப்படுகிறது. இந்த விமான சேவை மூலம் கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளும் இலங்கைக்கு வந்து செல்கின்றனர்.

உள்ளூர் முகவர்களிடமிருந்து செலுத்த வேண்டிய கட்டணத்தை உரிய நேரத்தில் செலுத்தப்படாமையினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

டொலரைப் பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட சிரமமே இந்த நிலைக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

## உரம் திருடிய ஒன்பது பேர் கைது

பெல்வத்த சீனி நிறுவனத்துக்கு சொந்தமான உரக் கடையொன்றிலிருந்து 60 உர மூடைகள் திருடப்பட்டுள்ளன.

பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய இந்த திருட்டு தொடர்பாக 9 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 25 உர மூடைகளை பொலிஸார் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், உரம் ஏற்றிச் செல்ல பயன்படுத்தப்பட்ட முச்சக்கர வண்டி மற்றும் டிப்பர் ரக வாகனம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

பெல்வத்த சீனி நிறுவனத்துக்குச் சொந்தமான கோனகங்கர, தியகிரித்த பிரதேசத்தில் உள்ள உரக் களஞ்சியசாலையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அங்கு பணிபுரிந்த காவலர்களை மிரட்டி, பதுக்கி வைத்திருந்த யூரியா உள்ளிட்ட இரசாயன உரங்கள் திருடப்பட்டுள்ளன.



இதற்கிடையில், நாட்டின் பல பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் பயிர்களுக்கு இரசாயன உரங்கள் இல்லை என்று தொடர்ந்து புகார் கூறி வருகின்றனர்.

அநுராதபுரம், மஹாவிலச்சிய விவசாயிகள் இயக்கத்தின் தென்கரையில் மஹாசென் விவசாயிகள் அமைப்புக்கு சொந்தமான சுமார் 2ஆயிரத்து 500 ஏக்கர் வயல் நிலங்கள் உரம் இன்றி அழிவடைந்து வருவதாக விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

## அரச ஊழியர்கள்...

நாடு பொருளாதார ரீதியில் பாரிய பின்னடைவை சந்தித்துள்ள இந்த தருணத்தில், அரச ஊழியர்களின் பங்களிப்பு அத்தியாவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந் நிலையில், அரச ஊழியர்களை வழமை போன்று பணிக்கு அமர்த்தும் அறிவிப்பை, அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் பிரதானிகளுக்கு அனுப்பி வைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் பரவிய கொவிட் வைரஸ் காரணமாக அரச ஊழியர்களை வீடுகளிலிருந்து பணியாற்றும் நடைமுறையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருந்ததுடன், அத்தியாவசிய ஊழியர்கள் மாத்திரம் பணிக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவ்வாறான பின்னணியில், இன்று முதல் அரச ஊழியர்கள் வழமை போன்று பணிக்கு சமுகமளிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவுக்கு அனுப்பவுள்ள ஆவணம்: இன்னும் ஓரிரு தினங்களில் நிறைவுறும்

## தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை முக்கியம் என்கிறார் சம்பந்தன்



இந்தியாவுக்கு அனுப்பவுள்ள ஆவணம் கைச்சாத்திடப்படும் என்பதில் எந்த விவாதமும் இல்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

அந்த ஆவணம் தொடர்பிலான செயற்பாடுகள் இன்னும் ஓரிரு தினங்களில் நிறைவடையும் என எதிர்பார்ப்பதாக அவர் கொழும்பில் ஊடகமொன்றிடம் தெரிவித்தார்.

தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மிகவும் முக்கியமானது என்பதனால் அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கும்போது அது தொடர்பில் அதிக கரிசனை செலுத்துவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கூறினார்.

வடக்கு, கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்பதில் தாம் உறுதியாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

முஸ்லிம் மக்களின் சகல விடயங்களும் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டு இந்த செயற்பாடு முன்னெடுக்கப்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்ளன சம்பந்தன் மேலும் தெரிவித்தார்.

## 3 மாவட்டங்களில் ஒமிக்ரொன்...

ஆகவே, ஒமிக்ரொன் திரிபு குறித்து நாங்கள் அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும். மீண்டும் நாட்டை முடக்குவதற்கு யாரும், இடமளிக்க வேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், 2021 ஜூன் 7 முதல் டிசம்பர் 31ஆம் திகதி வரை ஒரு இலட்சத்து 30ஆயிரத்து 72 நோயாளிகள் வீட்டில் வைத்து சிகிச்சையளிப்பதற்காக பதிவு செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை 2ஆயிரத்து 148 ஆக காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, சமூகத்தில் கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் இல்லையென்றாலும், எல்லா இடங்களிலும் சுகாதார விதிமுறைகளை முறையாக கடைபிடிப்பது குறித்து அவதானம் செலுத்த வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

## சிலிண்டர் விநியோகத்தில்...

ஹோம் டெலிவரி என செயற்படுவோர் சிலிண்டர் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாவை மேலதிகமாகவும் விநியோகமென 500 ரூபாவையும் வசூலிப்பதாகவும் நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர். லிட்ரோ எரிவாயு 12.5 சிலிண்டர் ரூ.2ஆயிரத்து 750 ஆகவும், 12.5 சிலிண்டர் லாவ் எரிவாயு ரூ.2ஆயிரத்து 840 ஆகவும் உள்ளது. கொழும்பு நகரம் உட்பட நாட்டின் பகுதிகளில் எரிவாயு பெற மக்கள் நீண்ட வரிசையில் நிற்பதை நேற்றும் காண முடிந்தது.

## மாணவர் வாகன போக்குவரத்து...

இதன்படி, பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் இன்றைய தினம் முதல் போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக அனைத்து மாகாண பொது பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்கம் தெரிவிக்கின்றது.

இதன்படி, பாடசாலைகளுக்கு மாணவர்களை அழைத்துச் செல்வதற்கான கட்டணத்தை 20 வீதத்தினால் அதிகரிக்க வேண்டும் என சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, எரிபொருள் விலையேற்றத்துக்கு அமைய, சாதாரண கட்டண அதிகரிப்பை மேற்கொண்டு, மாணவர்களை பாடசாலைகளுக்கு அழைத்து செல்லுமாறு தமது உறுப்பினர்களுக்கு அறிவித்துள்ளதாக அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் மல்ஸ்ரீ டி சில்வா குறிப்பிட்டுள்ளார்.

எனினும், பெற்றோர் பொருளாதார ரீதியில் பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ள இந்த தருணத்தில், கட்டண அதிகரிப்பு மேற்கொள்வது சிறந்தது அல்லவென அகில இலங்கை அனைத்து மாவட்ட பாடசாலை மாணவர் போக்குவரத்து சேவை சங்கத்தின் தலைவர் என்.என்.கே.ஹரிச்சந்திர கூறுகின்றார்.

## பாடசாலைகள் இன்று ஆரம்பம்...

நாட்டில் பரவிய கொவிட் பெருந்தொற்று காரணமாக, சுமார் 6 மாத காலம் பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

இதனால், 2021ஆம் ஆண்டின் இறுதி பாடசாலை விடுமுறை நாட்களை 10 நாட்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது. இவ்வாறான நிலையில், அனைத்து பாடசாலைகளினதும் கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை எண்ணெய்க்...

இடம்பெறவுள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில, 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

எண்ணெய்த் தாங்கியின் பெரும்பகுதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்கீழ் பொறுப்பேற்பதற்கு புதிய நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, இந்த எண்ணெய்த் தாங்கிகளை இந்தியன் ஓயில் கோர்ப்பரேஷனிடம் வழங்குவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் உரிய அமைச்சரான உதய கம்மன்பில சமர்ப்பிக்கவுள்ளார்.

அதன்படி, சீனத் துறைமுகப் பகுதியிலுள்ள 61 எண்ணெய்த் தாங்கிகளையும் புதிய நிறுவனம் ஒன்றை அமைத்து 50 ஆண்டுகளுக்கு இந்தியன் ஓயில் கோர்ப்பரேஷனிடம் (ஐ.ஓ.சி.) ஒப்படைக்க அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

திருகோணமலை சீனத்துறைமுகப் பகுதியிலுள்ள 99 எண்ணெய்த் தாங்கிகளில் 14 தாங்கிகள் தற்போது வரை இந்தியன் ஓயில் கோர்ப்பரேஷனிடமே உள்ளது. அத்தோடு, 24 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமானதாகவும் காணப்படுகின்றது.

எஞ்சிய 61 தாங்கிகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இந்திய நிறுவனமும் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள ட்ரிங்கோ பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் என்ற புதிய நிறுவனத்தின் ஊடாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்த அபிவிருத்தித் திட்டத்தில் 51 வீதத்தை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கும் எஞ்சிய 49 வீதத்தை இந்திய எண்ணெய் நிறுவனத்துக்கும் வழங்குவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதற்காக, எண்ணெய்த் தாங்கியின் பெரும்பகுதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்கீழ் பொறுப்பேற்பதற்காகவே ட்ரிங்கோ பெற்றோலியம் டெர்மினல் லிமிடெட் என்ற புதிய நிறுவனம் ஒன்றையும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடைபெறவுள்ள இந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. இந்தக் கூட்டத்துக்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் திறைசேரி செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிக்கல ஆகியோரும் அழைக்கப்பட்டுள்ளதாக நம்பகரமான தகவல்கள் தெரிவித்தன.

நாடு எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார நெருக்கடிகள் மற்றும் நாட்டின் முன்னேற்றத்துக்கான வழிகள் குறித்து இன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவுகள் எடுக்கப்படவுள்ளன.

அத்துடன், இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதா, இல்லையா? என்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் ஆராய்ந்து முடிவெடுக்கப்படவுள்ளது. மேலும், நாடு தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி மற்றும் பிரச்சினைகள் குறித்து இதில் விவாதித்து தீர்மானம் எடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அறிய முடிந்தது.

## எரிவாயு வால்வுகள் அல்ல:...

ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இணை ஊடகப் பேச்சாளருமான எஸ்.எம்.மரிக்காரின் கொலன்னாவ தேர்தல் தொகுதியின் வாக்களிப்பு நிலையங்களின் தலைவர்கள் நியமனம் நேற்று பதில் சொல்லாமல் தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

வீடுகள் வெடித்துச் சிதறும், சமையல் அறைகள் எரியும், உயிர் பலியாகும் பாரிய அவலத்தை உருவாக்கியவர்கள், விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர்கள் இருவர் என்றும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், அன்று இருவரும் பொய் உள்ளது எனவும் தெரிவித்தார்.

மக்களின் கண்ணீரின் வலியை அரசாங்கம் பொருட்படுத்தவில்லை என்றும் கூறிய அவர், ஈஸ்டர் தாக்குதல் போன்ற நிகழ்வுகளின் மூலம் பிணங்களின் மீது ஆட்சிக்கு வந்த இந்த அரசாங்கம், மக்களின் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் அக்கறை காட்டவில்லை என்றும்





எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எரிவாயு அனர்த்தம் தொடங்கிய நாள் முதல் எதிர்க்கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி அனைத்து தகவல்களையும் நாட்டுக்கு அம்பலமாகியுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், விடயத்துக்குப் பொறுப்பான இரண்டு அமைச்சர்கள் உட்பட முழு அரசாங்கமும் சொன்னதாகவும் இன்று எரிவாயு நிறுவனத்தின் தலைவர், அவர்கள் சார்பாக பொய் சொல்ல முன்வந்துள்ளதாகவும் கூறினார்.

அரசாங்கம் என்ற ஒன்று அமைக்கப்படுவது மக்களைக் காக்கவே எனவும் துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசாங்கம் மக்களைக் கொல்லாமல் கொல்கிறது எனவும் தெரிவித்த அவர், இவ்வாறு நோக்கும்போது தற்போதைய அரசாங்கம் இனப்படுகொலை செய்யும் அரசாங்கமாகவே அவர் கூறினார். தாங்க முடியாத அழுத்தத்தை எதிர்கொண்டு நாட்டை ஆளாக்குபவர்கள் மீது கூச்சல் போட்டு மக்கள் தங்கள் கோபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வெட்கக்கேடானது என்பதற்கு காரணம், அவர்களைப் பின்தொடர்ந்து குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வரவழைக்கப்படும் அளவுக்கு கீழ் மட்டத்துக்கு விழுந்து விட்டமையே என்றும் அவர் கூறினார்.

## தமிழ்க்கட்சிகளின் வரைவை...

தமிழ்ப் பேசும் தரப்புகளின் சார்பில் நேற்றுமுன்தினம் இறுதியாகத் தயாரிக்கப்பட்ட வரைவில் முன்பிருந்த பல விடயம் நீக்கப்பட்டிருப்பதனால் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு அதனை முழுமையாக நிராகரித்துள்ளது என கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்தார்.

தமிழ்ப் பேசும் கட்சிகள் இணைந்து தமிழ்ப் பேசும் மக்களின் பொதுவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் ஆவணம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பில் நேற்று யாழ். ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

1987இல் யாருக்காக ஒப்பந்தம் எழுதப்பட்டதோ அவர்களோடு போரிடுவதாகவே இறுதியில் அந்த ஒப்பந்தம் அமைந்தது. அதனால் இந்த 13ஆம் திருத்தச் சட்டத்தால் எமக்கு எந்த முன்னேற்றமும் கிடையாது. இந்தியா எப்போதும் இலங்கையில் பூகோள ரீதியில் கரிசனையாக இருந்தாலும், ஆட்சி அதிகாரத்தில் இந்திய மாநில அதிகாரத்துக்கு மேலதிகமாக இங்கு இருக்க கூடாது என்பதை உறுதிப்படுத்துவதிலும் குறியாக இருக்கின்றது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் அடிப்படையில் சூழலில் வேறுபாடு உண்டு.

கூட்டாட்சி தொடர்பில் சிந்தியுங்கள் என 6 ஆண்டுகளுக்கு முன்பே பாரதப் பிரதமர் நரேந்திர மோடியே கூறிய நிலையில், நாம் இன்றும் அந்த 13ஐ கோரப் போகின்றோமா என்ற பெரும் கேள்வியும் உள்ளது.

ஜெயலலிதா தமிழக சட்டசபையில் நிறைவேற்றிய கண்டனத் தீர்மானத்தைக் குறைக்கும் வகையிலான ஓர் கோரிக்கையினையா நாம் தற்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் முன்வைக்கப்போகின்றோம்? இதனை ஏன் கட்சியில் இன்னும் விரிவாகப் பேசவில்லை?

அரசியல் தீர்வு தொடர்பில் தெளிவான பார்வை இருந்திருக்க வேண்டும். இவ்விடயத்தில் தெளிவாகப் பயணிக்க வேண்டிய கூட்டமைப்பும் குழம்பியிருக்கின்றதோ என்ற எண்ணம் பலரிடம் தோன்றுகின்றது.

முதலில் எழுதிய கடிதத்தில் சமஷ்டி வடிவில் எமது கோரிக்கைகளை உள்ளடக்கிய பல விடயங்கள் இருந்தன. ஆனால், தற்போது இரண்டாவதாக எழுதிய வரைவில் பல விடயங்கள் நீக்கப்பட்டிருக்கின்றமையால் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு அதனை முழுமையாக நிராகரித்துள்ளது.

மாகாணசபைத் தேர்தலை நடத்த வலியுறுத்துமாறு கோரி பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுத வேண்டிய அவசியமோ நியாயமோ இல்லை. ஏனெனில், இந்த அரசு போன்று நாம் தேர்தலைக் கண்டு பயப்படவில்லை. தேர்தலுக்கு கூட்டமைப்பு தயாராகவே இருக்கின்றது. வெளியில் ஒரு மாயை உண்டு. அதாவது ரெலோ கொண்டு வந்த நல்ல விடயத்தை தமிழரசுக் கட்சி எதிர்ப்பதாக எண்ணுகின்றனர். இந்த 13ஐ கோருவதுதான் அந்த நல்ல விடயமாம்.

இந்தியாவின் கொல்லைப்புறம் வரையில் இன்னுமோர் நாடு வந்த பின்பும், அயல் நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என இந்தியா தொடர்ந்தும் கூறப்போகின்றதா என்பதனை இந்தியாதான் சிந்திக்க வேண்டும்.

இதனால் வரைவு தொடர்ந்தும் தயாரிக்கும் பணியில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லை என்பதே நிலைப்பாடு. நேற்றைய வரைவு எமது அபிலாஷையினையோ தீர்வையோ கொண்டிருக்கவில்லை என்பதனைப் பகிரங்கமாக கூறுகின்றேன். ரவூப் ஹக்கீமைப் பொறுத்தமட்டில் அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களே அவரது கட்டுப்பாட்டில் இல்லாத நிலையில் தமிழர்களின் தீர்வு விடயத்தில் அவர் எவ்வாறு தீர்வை முன்வைப்பது?

எங்களுடைய கொள்கையோடு நில்லுங்கள் என நாம் அவர்களை நிர்ப்பந்திக்க முடியாது. அதேபோல், தமது நிலைப்பாட்டுடன் ஒத்துபோக வேண்டும் என்ற எண்ணத்தை அவர்கள் எம் மீது திணிக்கவும் முடியாது.

2015 இலங்கை வந்திருந்த பாரதப் பிரதமர் என்னுடைய 13 வருட முதலமைச்சர் கால அனுபவத்தில் ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தீர்வுக்கு கூட்டு சமஷ்டி முறையே பொருத்தமானதென இலங்கை நாடாளுமன்றத்தில் தெளிவாக ஒரு கருத்தை சொன்னார். அவ்வாறு கூறுபவரிடம் 13ஆம் திருத்தத்தை அமுல்படுத்த கோரி நாம் கடிதம் எழுதுவது எந்தளவு தூரம் ஏற்றுக்கொள்ளக்கூடியது.

யார் பெரியவர் யார் சிறியவர் என்ற ஏற்றத்தாழ்வு பிரச்சினை காரணமாகவே அமெரிக்காவுக்கு ஒரு தரப்பு செல்ல இன்னொரு தரப்பு 13 ஐ அமுல்படுத்துங்கள் என்று சொல்லி விடுதிகளில் கூட்டங்களை நடத்துகிறார்கள். இதன்போது முஸ்லிம் தரப்புகள் மற்றும் மலையகத்தைச் சேர்ந்த சகோதரர்களும் இணைந்துள்ளனர்.

முஸ்லிம்களின் அபிலாஷைகள் வித்தியாசமானது. அதேபோல மலையக தமிழர்களது அபிலாஷைகள் வித்தியாசமானவை. வடகிழக்கில் வாழ்கின்ற தமிழர்களது அரசியல் அபிலாஷைகள் வித்தியாசமானது.

ஒரு வாரத்துக்கு முன்னர் ஒரு வரைவு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஒரு வாரத்துக்கு முன்னர் தயாரிக்கப்பட்ட வரைவை ஏற்றுக் கொள்கிறோம். இது தொடர்பாக நேற்றைய தினம் இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய உயர்மட்டக்குழு கூட்டத்தில் அது பற்றிய விளக்கம் அளிக்கப்பட்டது. இரண்டாவது வரைவு பற்றியும் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது. முதலாவது வரைவில் உள்ள பல விடயங்கள் இல்லாமலாக்கப்பட்டு வெறும் கண்துடைப்புக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துங்கள் என்று கூறுவதாக அந்த வரைவு காணப்பட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் உயர்மட்டக்குழு ஏற்றுக்கொள்ள முடியாது என்பதை தீர்மானித்துள்ளது. தமிழ்த் தேசிய இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வை எட்டுவதற்கு சமஷ்டியையே முன்வைக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

நாங்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டாம் என கூறவில்லை. அதேபோல நாங்கள் மாகாண சபைத் தேர்தலை நடத்தவும் கூறத் தேவையில்லை. தேர்தல் சட்டங்களின் படி நடத்தியிருக்க வேண்டும். இந்தியப் பிரதமரிடம் தேர்தலை நடத்துங்கள் என்று கட்சிகள் கோருவதில் நியாயம் இல்லை. அதைக் கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. வெளியில் ஓர் மாயை உண்டு. அதாவது ரெலோ கொண்டு வந்த நல்ல விடயத்தை தமிழரசுக் கட்சி எதிர்ப்பதாக எண்ணுகின்றனர் அது தவறு.

இந்தியாவின் கொல்லைப்புறம் வரையில் இன்னுமோர் நாடு வந்த பின்பும் அயல் நாட்டின் உள் விவகாரத்தில் தலையிட மாட்டோம் என இந்தியா தொடர்ந்தும் கூறப்போகின்றதா என்பதனை இந்தியாதான் சிந்திக்க வேண்டும் என்றார்.

# இன்றைய ராசி பலன்

03.01.2022 திங்கட்கிழமை மார்கழி 19

**ஜோதிடர் நற்பவி**

தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141

**நட்சத்திரம்: பூராடம்**
பிற்பகல் 1.33 வரை
**உத்தராடம்**
பி.ப 1.33 - 04.01.2022
காலை 10.57 வரை

**யோகம்: வியாகாதம்**
அ.கா 5.30 - 04.01.2022
அதிகாலை 1.25 வரை

**திதி: பூர்வ பட்ச பிரதமை**
இரவு 8.31 வரை
**பூர்வ பட்ச துவிதீயை**
இரவு 8.31 - 04.01.2022
மாலை 5.19 வரை

**முற்கரணம்: கிம்ஸ்துக்னம்**
அ.கா 12.02 - காலை10.15
**பிற்கரணம்: பவம்**
காலை 10.15 -இரவு 8.31

**சுப நேரங்கள்**
காலை 6.23 - 7.50

**அசுப நேரங்கள்**
**ராகு காலம்**
காலை 7.51 - 9.19
**குளிகை காலம்**
பிற்பகல்1.43 - 3.11

**எமகண்ட காலம்**
காலை 10.47- பி.ப. 12.15
**துர் முகூர்த்தம்**
பிற்பகல் 12.39 -1.26
பிற்பகல் 2.59 - 3.46

**லோகநாயகி ஸஹஷ்ர சீர்ஷ வதனா அன்னை பிரத்யங்கிராவின் கருணையாலே நற்பவி நற்பவி நற்பவி**

**மேஷம்:** பணிகளை தேடுவோருக்கு வேலை கிடைக்க பெறலாம். இன்று தொழிலில் உற்சாகம் அதிகரிக்கும். ஆன்மீக வழிபாடுகள் ஏற்படலாம். உங்கள் நல்ல வருங்காலத்திற்கு வயதில் மூத்தவர்களின்ஆசி கிடைக்கலாம்.

**ரிஷபம்:** தம்பதியரிடையே சகிப்புத்தன்மை தேவைப்படலாம். சில வேலைகள் தடைப்படுவதால் கவலை தோன்றலாம். உங்கள் உணர்வுகளை மதிக்காதவர்களிடம் எண்ண பகிர்தலை தவிர்ப்பது நல்லது. பணிகளிலும் கவனம் செலுத்த இயலாமை ஏற்படலாம். இறைதியானம் மனஅமைதி தரும்.
**சந்திராஷ்டமம்:மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 1/2க்கு காலை 8.15-மாலை 6.52**

**மிதுனம்:** சர்ச்சைக்குரிய சூழலிலிருந்து ஒதுங்கியிருப்பது நன்மை. பணிகளின் சூழ்நிலை சாதகமாக அமையலாம். இயற்கை மாற்றத்தால் காய்ச்சல் சிறிய அளவில் உண்டாகலாம். வீட்டைத் தவிர்ந்த வெளி உணவு விடயங்களில் சிறிய கவனம் தேவைப்படலாம்.
**சந்திராஷ்டமம்:மிருகசீரிடம் நட்சத்திரம் பாதம் 3/4க்கு மாலை 6.52 -04.01.2022அதிகாலை 5.34 வரை**

**கடகம்:** வாழ்க்கைத்துணையின் ஆலோசனையால் உங்கள் துறை சார்ந்தவெற்றி கிடைக்கலாம்.வணிகத்தில் உற்சாகம் மேம்படும். வேலைகளில் உயர்பதவியில் இருப்பவர்களுக்கு உங்கள் முயற்சித் திறனால் திருப்தி ஏற்படலாம். சில தவறுகளை உணர்ந்து பிறரை அனுசரிப்புசெய்வது மதிப்பை மேம்படுத்தும்.

**சிம்மம்:** நண்பர்களுடன் பயணம் ஏற்படலாம். காதலில் திருமண எண்ணம் தோன்றலாம். குடும்பப் பிரச்சினையால் உணர்ச்சி வசப்படுதல் உண்டாகலாம். உறவுகளை சீர்படுத்தும் முயற்சியும் ஏற்படலாம்.

**கன்னி:** வாழ்க்கைத்துணையின் உடல்நலத்தில் அக்கறை ஏற்படலாம். வணிகத்தில் பொருளாதார இலாபங்கள் குறையலாம்.
அறிவார்ந்த நட்பு கிடைக்கப் பெறலாம்.சொத்து சம்பந்தப்பட்ட வருவாய் உண்டாகலாம்.

**துலாம்:** திறமைகளைமே ம்படுத்துவதால், அதிக காலத்திற்கு பயனளிக்கும் நேர்மறைமுடிவுகள் உங்களுக்குக் கிடைக்கலாம். சுபசெய்திகள் கிடைக்கக்கூடும். பணிகளில் உரிமைகள் அதிகரிப்பு அல்லது பதவி உயர்வு கிடைக்கலாம். இன்று நல்ல நாளாக அமையலாம்.

**விருச்சிகம்:** புதிய திருமண தம்பதியருக்குவீடு மற்றும் தேவைகளின் திட்டங்கள் உருவாகலாம். சில வேலைகளில் தடைகள் ஏற்பட்டாலும் பொறுமையாக இருப்பதால், நல்ல முறையில் நிறைவேறுவதைக் காணலாம். பண வருவாய்க்கான நல்ல நிலையும் உண்டாகலாம்.

**தனுசு:** புதிய தொழில் உறவுகள் ஏற்படலாம்.உடல்நலம் சீராகும். பணிகளுடன், சமூக முக்கியத்துவ பணிகளும் உங்களால் செய்யப்படலாம். இல்லற வாழ்வில் மகிழ்ச்சியும், உறவில் நெருக்கமும் மேம்படும். இன்றைய நாள் இறையருளால் நல்ல நாளாக அமையலாம்.

**மகரம்:** கோபத்தைக் கட்டுப்படுத்துவது நல்லது. நிர்வாகம் சம்பந்தப்பட்ட பணிகளில் இருப்பவர்களுக்கு பிரச்சினை ஏற்படலாம். பிறரின் பணிகளை இன்று பொறுப்பேற்க வேண்டாம். இறைவணக்கம் செய்து உங்கள் வழியில் செல்வது நல்லது.

**கும்பம்:** பழைய முதலீடுகளின் பலனாக பணவரவு கிடைக்கலாம்.பணிகளில் சம்பளஉயர்வு ஏற்படலாம். பிள்ளைகளின் சாதனைகளிலும் பெருமை உண்டாகலாம். வீட்டின்ஆடம்பரம் அல்லது செல்வ வளங்களுக்கான செலவு ஏற்படலாம்.

**மீனம்:** அனைத்து பணிகளும் தாமதமின்றி நிறைவேறும். இன்று புதிய தொழில் தொடங்கினாலும் அல்லது புதிய பணி தேடினாலும் வெற்றி கிடைக்கலாம். மாணவர்களுக்கும் வேலைவாய்ப்புகள் உருவாகலாம். அன்புக்குரியவர்களின் அன்பு மற்றும் விருந்தும் கிடைக்கப் பெறலாம்.

# 14 ஆண்டுகளில் 55 நிறுவனங்கள் 1.5 பில்லியன் ரூபாவை துவம்சம் செய்தன

## புதிய தகவல் வெளியானது

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வடிகாலமைப்புச் சபை மற்றும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனம் உட்பட 55 அரச நிறுவனங்கள் கடந்த 14 வருடங்களில் சுமார் 120,000 மில்லியன் ரூபா நஷ்டத்தைச் சந்தித்துள்ளன.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மட்டும் வருடத்திற்கு 7 பில்லியன் ரூபாவை இழக்கின்றது என கணக்காய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, பெறப்பட்ட எரிபொருளுக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன 16 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது.

இதில், இலங்கை மின்சார சபை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 96 பில்லியன் ரூபாவையும், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் 65 பில்லியன் ரூபாவையும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதத்தில் மட்டும் எரிபொருள் விலை அதிகரிப்பினால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நஷ்டம் 1 பில்லியன் ரூபாவிற்கும் அதிகமாகும்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மக்கள் வங்கி மற்றும் இலங்கை வங்கி ஆகியவற்றிற்கு சுமார் 36 பில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது என கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, 2015-2019 காலப் பகுதியில் மாத்திரம் கூட்டுறவு மொத்த விற்பனவு கூட்டுத்தாபனத்திற்கு சுமார் 2000 மில்லியன் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக கணக்காய்வு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

2014ஆம் ஆண்டு வரை இலாபமீட்டும் நிறுவனமாக இருந்த கூட்டுறவு மொத்த விற்பனவு கூட்டுத்தாபனத்திற்கு நல்லாட்சியினால் ஏற்பட்ட பாரிய நஷ்டம் தொடர்பில் ஆழமான கணக்காய்வை மேற்கொண்டு வருவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சமீபகாலமாக உணவுப் பொருட்கள் உள்ளிட்ட பல்வேறு பொருட்களுக்காக விநியோகஸ்தர்களுக்கு கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனம் 800 கோடி ரூபா பாக்கி வைத்துள்ளமை தெரிய வந்துள்ளது.

# அரசாங்க உரத்தை பயன்படுத்தாத விவசாயிகளுக்கு நஷ்டஈடு இல்லை

## விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அறிவிப்பு



பெரும்போகத்திற்காக அரசாங்கம் வழங்கிய உரத்தை பயன்படுத்தாத விவசாயிகளுக்கு விவசாய நஷ்டஈடு வழங்கப்பட மாட்டாது என விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

உரப் பற்றாக்குறையினால் விவசாயிகள் எதிர்நோக்கிய சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்குவது தொடர்பில் கண்டியில் நேற்று (02) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் கூறியதாவது ,

அரசாங்கம் வழங்கிய இயற்கை உரங்களைப் பயன்படுத்தாத விவசாயிகளுக்கு அரசாங்கம் இழப்பீடு வழங்காது. இழப்பீடு வழங்கும்போது , அரசு வழங்கிய உரத்தை விவசாயி பயன்படுத்தியுள்ளாரா என்பது குறித்து அரசு ஆராயும்.

அரசாங்கம் நான்கு வகையான உரங்களை வழங்கியது. விவசாயி எந்த உரத்தையும் பயன்படுத்தாவிட்டால் இழப்பீடு வழங்க முடியாது. அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து நஷ்டஈடு வழங்கப்படும் .

கரிம உரம், உயிர் திரவ உரம், பொட்டாசியம் குளோரைட் மற்றும் நானோ நைட்ரஜன் போன்றவற்றை அரசாங்கம் வழங்கியது. விவசாயிகள் நான்கு வகையான உரங்களையும் பயன்படுத்தியிருக்க வேண்டும் .

நான்கு வகையான உரங்களையும் பயன்படுத்தி விவசாயிகள் உற்பத்தியைக் குறைத்தால் அரசாங்கம் இழப்பீடு வழங்கும். உரம் வழங்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது. அரசாங்கம் வழங்கும் உரம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டால் இழப்பீடு வழங்கப்படும்.

விவசாய அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தயங்கப் போவதில்லை. இரசாயன உரத் தொழில் ஒரு மாஃபியா. அமைச்சின் அதிகாரிகள் எனக்கு போதிய ஆதரவை வழங்கவில்லை என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

உரத்தை விநியோகம் செய்தல், இறக்குமதி செய்தல் மற்றும் தரம் குறித்து மோசடி செய்துள்ளனர்.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் தரமற்ற உரத்தை இறக்குமதி செய்து 8 பில்லியன் ரூபா மோசடி செய்துள்ளனர்.இருப்பினும் இதுபோன்ற விடயங்களை வெளிப்படுத்த அதிகாரிகள் தயங்குவதாகவும் அவர் கூறினார்.

## பொலிஸ் உயர் பதவிகளில் செய்யப்பட்ட திடீர் மாற்றம்

மேல் மாகாண குற்றத்தடுப்புப் பிரிவுக்கு பொறுப்பான புதிய பிரதிப் பொலிஸ் மா அதிபராக ரொஹான் பிரேமரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இதற்கு முன்னர் சி.ஐ.டியின் பணிப்பாளராக பணியாற்றியிருந்தார்.

ரொஹான் பிரேமரத்ன சுமார் 10 மாதங்கள் சி.ஐ.டியின் பணிப்பாளராக பணியாற்றியிருந்தார்.மேலும், போக்குவரத்துப் பிரிவுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபராக இந்திக்க ஹபுகொட நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இதற்கு முன் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளராக பணியாற்றியிருந்தார்.

# தற்போதைய நெருக்கடியை தீர்ப்பதற்கு ஒன்றிணைந்த வேலைத்திட்டம் தேவை

## நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு



தற்போதைய சவால்களை எதிர்கொள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து நீண்டகால வேலைத்திட்டத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், நாட்டில் விவசாயத்திற்கு உரமில்லாத நிலையில் பால் மா, எரிவாயு மற்றும் அரிசிக்கு பொதுமக்களின் வரிசைகள் காணப்படுகின்றன. 2022 பல பிரச்சினைகளுடன் உதயமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக தியாகங்களைச் செய்யுமாறு அரசாங்கம் பொதுமக்களையும் அறிவித்ததாக அவர் கூறினார்.

தற்போதைய நிலையிலிருந்து நாட்டை உயர்த்துவதற்கு அரசாங்கம் விரும்பினால், அனைத்து அரசியல் கட்சிகளுடனும் கூட்டு வேலைத்திட்டத்தை நோக்கி நகருமாறு அவர் வலியுறுத்தினார்.

# மக்களின் நன்மை அறிந்து ஜனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்து



"அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக ஜனாதிபதிக்கு சர்வ பலமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, மக்களின் நன்மைக்காக அவர் அந்த அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்." - இவ்வாறு அரச பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பொதுச்செயலாளர் இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர கூறியதாவது:-

"நாம் மக்களின் தேவையறிந்து அதற்கேற்ற வகையில் செயற்பட்டால், மக்கள் எமக்கு எதிராக ''ஹூ'' என்று சத்தம் எழுப்பமாட்டார்கள்.

நாட்டில் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. சமையல் எரிவாயுவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மக்கள் அரசு மீது அதிருப்தியில் உள்ளனர். மறுபுறத்தில் சிலிண்டர் வெடிப்பும் இடம்பெறுகின்றது.

இவற்றுக்குத் தீர்வு வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டம் ஊடாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனை அவர் பயன்படுத்த வேண்டும்" - என்றார்.

# கொவிட் மரண எண்ணிக்கை நேற்று 15 ஆயிரத்தை கடந்தது



நாட்டில் மேலும் 24 கொவிட் மரணங்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் (01) இந்த மரணங்கள் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, இலங்கையில் இதுவரை பதிவான மொத்த கொவிட் மரணங்களின் எண்ணிக்கை 15,019 ஆக பதிவாகியுள்ளது.இதேவேளை, கொரோனா தொற்றிலிருந்து மேலும் 224 பேர் பூரணமாக குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.இதற்கமைய, இதுவரை கொரோனா தொற்றிலிருந்து பூரணமாக குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 560,949 ஆக அதிகரித்துள்ளது. இந்நிலையில், நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 587,596 அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


## பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
## அறிவிப்பு

**2020 ஆம் ஆண்டு க.பொ.த (உயர்தர) பரீட்சையின் மீள்ஆய்வு பெறுபேறுகள் அடிப்படையில் பரீட்சை முடிவுகள் மாறிய விண்ணப்பதாரர்கள் மற்றும் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க முடியாமல்போன மேன்முறையீட்டு விண்ணப்பதாரர்களிடமிருந்து 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அழைக்கிறது.**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC), டிசம்பர் 29, 2021 அன்று வெளியிடப்பட்ட 2020ஆம் ஆண்டுக்கான (உயர்தர) பரீட்சையின் மீள்ஆய்வு பெறுபேறுகள் அடிப்படையில் பெறுபேறுகள் மாறிய விண்ணப்பதாரர்களிடமிருந்து மற்றும் 2020/2021 கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் விண்ணப்பிக்க முடியவில்லை என்று மேன்முறையீடு செய்தவர்களிடமிருந்து இணையவழி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. அத்தகைய விண்ணப்பதாரர்கள் 2020/2021 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்காக 03 ஜனவரி 2022 முதல் 10 ஜனவரி 2022 வரை இணையவழி மூலம் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பத்தை சமர்ப்பிப்பது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் (www.ugc.ac.lk) ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ள விண்ணப்பம் பெற்றுக் கொள்ளல் பற்றிய செய்தித்தாள் விளம்பரத்தைப் பார்க்க முடியும்.

**முக்கியம்**

**2020/2021 கல்வியாண்டிற்கு செல்லுபடியாகும் பல்கலைக்கழக அனுமதி கைநூலில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற தேவைகளை பூர்த்தி செய்து, இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பித்த பிறகு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி அல்லது தெளிவான புகைப்படத்தை பதிவு தபால் மூலம் அனுப்புவதுடன் apply2020@ugc.ac.lk. எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியது கட்டாயமாகும் என்பதை நினைவில் கொள்க.**

**மேலும், மேற்கூறிய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும் 2020/2021 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான இந்த வாய்ப்பு, சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகத்தால்/வளாகம்/ நிறுவனத்தால் ஏற்கனவே நடத்தி முடிக்கப்பட்ட திறன்/நடைமுறைத் தேர்வுகள் கொண்ட கற்கை நெறிகளுக்குப் பொருந்தாது என்பது குறிப்பிடத்தக்கது.**

*தலைவர்*
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
03.01.2022


# தடுப்பூசி அட்டையில் புதிய மென்பொருள்

## குறியீட்டு எண்ணை அறிமுகப்படுத்த நடவடிக்கை

தடுப்பூசி அட்டைகளை கட்டாயமாக்குவதுடன்புதிய மென்பொருள் மற்றும் குறியீட்டு எண்களை அறிமுகப்படுத்தவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்தப் பணி நிறைவடைந்ததும், முழுமையாக தடுப்பூசிகளை செலுத்திக்கொண்டவர்களுக்கு மாத்திரமே பொது இடங்களில் சஞ்சரிக்க அனுமதி வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இம்மாத இறுதிக்குள் இந்த நடவடிக்கை நிறைவு செய்யப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.







ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மானின் நிதி ஒதுக்கீட்டில் நிர்மாணிக்கப்பட்ட கெத்தாராம ஸ்ரீ சித்தார்த்த அறநெறிப் பாடசாலையின் "யஸஸ்சி பியச" கட்டடத்தை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (02) திறந்து வைத்தார்.

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஜனவரி 03ஆம் திகதி, திங்கட்கிழமை

# சமூக ஊடகங்களும் சமுதாய மேம்பாடும்

சமூக ஊடகங்கள் நாளுக்கு நாள் வன்மம் நிறைந்த தளங்களாக மாறிக்கொண்டிருக்கின்றன. ஆளுக்காள் பழிவாங்கும் இடமாகவும் வஞ்சம் தீர்த்துக்கொள்ளும் களமாகவும் அவற்றை பார்க்க முடிகிறது.

சமூகப் பிரச்சினைகளை பொதுவெளியில் விவாதிக்காமல், சமூக ஊடகங்களில் விவாதிக்கும் போக்கு அண்மைக்காலமாக தீவிரமாக அதிகரித்துள்ளது. சமூகப் பொருளாதார வளர்ச்சியில், தகவல் தொழில்நுட்பத்தின் பங்கினை எவரும் குறைத்து மதிப்பிட முடியாது. ஆனால், இணையதளம் மற்றும் சமூக ஊடகங்களில் நடைபெற்று வருகின்ற இணையதளக் குற்றங்கள், வெறுப்புப் பேச்சுகள் மற்றும் போலிச் செய்திகள் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் மிகப் பெரிய சவாலாக உருவாக்கியுள்ளது.

சர்வதேச அளவில் 138 நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில், கொவிட்-19 பற்றிய தகவல்களை தவறாக இணையதளம் மற்றும் சமூக வலைதளங்களில் பகிர்ந்த நாடுகளில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக அமெரிக்கா, பிரேசில், ஸ்வீடனில் அதிக அளவு கொவிட்- 19 பற்றிய தவறான தகவல்கள் சமூக வலைத்தளங்களில் பரப்பப்பட்டதாக தெரியவந்துள்ளது. இலங்கையிலும் இதற்கு குறைச்சல் இல்லை. கொரோனா நோயாளர்களுக்கு மருந்து விபரங்கள் சொல்வது முதல் அவர்கள் மன அழுத்தம் அதிகரிக்கும்வரை தகவல்கள் கண்டபடி பரப்பப்படுகின்றன.

நோய்த்தொற்றுப் பரவல் காலகட்டத்தில் நோய் மற்றும் தடுப்பூசி பற்றிய தவறான தகவல் அதிகளவில் சமூக வலைத்தளங்களில் பகிரப்படுவதால் பொதுமக்களிடையே குழப்பம் ஏற்படுகிறது. எனவே, சமூக ஊடகங்கள் மற்றும் இணையதளங்களில் நடந்து வருகின்ற வெறுப்புப் பிரசாரங்கள் மற்றும் போலித் தகவல்களை கட்டுப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

ஜெர்மனி, பிரிட்டன், அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் தவறான தகவல்கள் சமூக ஊடகங்களில் பகிர்வதை தடுப்பதற்காக பல்வேறு சட்டங்களை அந்நாடுகள் நிறைவேற்றியுள்ளன. ஜெர்மனியில் ஆதாரமற்ற தகவல்களை சமூக ஊடகங்களிலோ இணையதளத்திலோ பகிர்ந்தால், சிறைத் தண்டனையும் 60 மில்லியன் யூரோ அபராதமும் விதிக்க சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

இலங்கையிலும் ஆதாரமற்ற, உண்மைக்குப் புறம்பான செய்திகளை இணையதளத்தில் வெளியிட்டால், அவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சமீபத்தில் வட்ஸ்அப் நிறுவனம் 30 இலட்சத்துக்கும் மேற்பட்ட போலிக் கணக்குகளை நீக்கியது. இலட்சக்கணக்கான உண்மைக்குப் புறம்பான கருத்துகள் மற்றும் வீடியோக்களை நீக்கியது. அது, இந்தப் பிரச்சினையின் தாக்கத்தினை நாம் புரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

இலங்கை அரசியலமைப்பின்படி, மக்களுக்கு கருத்துகளை வெளியிடுவதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது. அதேசமயம், இச்சுதந்திரத்தின் மீது சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இருந்து செயல்படக்கூடிய சமூக வலைதளங்கள் மற்றும் நிறுவனங்களை கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரம் அரசுக்கு உண்டு. ஆனால், நாட்டின் வெளியிலிருந்து செயல்படக்கூடிய சமூக வலைத்தள நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இலங்கை அரசுக்கு இல்லை. அந்நாட்டு அரசாங்கம் உதவிக்கரம் நீட்டினால்தான் அது சாத்தியம்.

பொதுமக்களும் சமூக ஊடகங்களில் தங்களால் வெளியிடப்படும், பகிரப்படும் செய்திகளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அதன்பின் வெளியிட வேண்டும். தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, வாய்ப்புகளை சமுதாயத்தின் ஆக்கப்பூர்வ முன்னேற்றத்துக்கு மட்டுமே மக்கள் பயன்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக இணையதளத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தக்கூடிய விழிப்புணர்வை பொதுமக்களிடையே அரசாங்கம் மற்றும் தொடர்பு நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும். ஏனென்றால், இலட்சக்கணக்கான மக்கள் தங்களுடைய அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இணையதளத்தை நாடுவது தவிர்க்க முடியாததாக இன்று உள்ளது.

இணையதளம் மற்றும் சமூக ஊடகங்களைப் பற்றிய அடிப்படையான புரிதல் எங்கெல்லாம் இல்லையோ அங்கெல்லாம்தான் குற்றங்கள் பெருமளவில் நடக்கின்றன. எனவே சமூக ஊடகங்கள் ஆக்கபூர்வ சமுதாய மேம்பாட்டுக்கே என்ற மனப்பாங்கு பொதுமக்களிடையே ஏற்பட வேண்டும்.

பொதுவெளியில் விவாதிக்காமல் இணையதளத்தில், சமூக ஊடகங்களில் விவாதிக்கக்கூடிய பிரச்சினைகள், ஆக்கபூர்வமான தீர்வுக்கு இட்டுச்செல்லாமல், மற்றொரு பிரச்சினையைத்தான் உருவாக்கும். உதாரணமாக, விவசாயிகள் உரப் பிரச்சினை, பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள், இயற்கை சீற்றத்தால் ஏற்படுகின்ற பேரழிவுகள் போன்ற மக்களை பாதிக்கக்கூடிய பிரச்சினைகள் குறிப்பிட்ட காலத்துக்குப் பிறகு சமூக ஊடகங்களில் விவாதிக்கப்படுவதில்லை.

அறிவார்ந்த சமூகம், இப்படிப்பட்ட வெறுப்பு, போலிப் பிரசாரங்களுக்கு இடமளிக்கக்கூடாது. இதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகள், பொருளாதார, சமூக வளர்ச்சியை பாதிப்பதோடு, சமூக, மத நல்லிணக்கத்தை சீருலைத்து, நாட்டின் முன்னேற்றத்துக்கும் பெரும் தடையாக அமைந்துவிடும்.

சமூக ஊடகங்களில் நல்ல பல விடயங்கள் வலம் வருகின்றன. அவற்றின்பால் அறிவை வளர்த்துக்கொள்வதும் நல்ல உறவுகளை உருவாக்கிக்கொள்வதும் தவறாகாது. இருப்பினும், சமூக ஊடகங்களின் பயன்பாட்டில் உள்ள அபாயங்களும் பாதுகாப்புடன் அதனைப் பயன்படுத்துவது தொடர்பான அறிவும், விழிப்புணர்வும் இளமைப் பருவத்தினருக்கு வழங்கப்படுவது அவசியமாகும். அது பெற்றோரினதும் ஆசிரியர்களினதும் சமூக ஆர்வலர்களினதும் பொறுப்பாகக் கொள்ளப்படுவதும் முக்கியமாகும்.

## தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாஉல்லாவுடனான உரையாடல்

# சிலர் எங்களுக்கே படம் காட்டுகின்றனர்!



**கேள்வி: தமிழ்ப் பேசும் கட்சிகளின் கூட்டம் தொடர்பில்?**

சர்வதேச நிகழ்ச்சி நிரலுக்குள் கைக்கூலிகளாக எந்த முஸ்லிம் தலைவர்கள் அன்றிலிருந்து மாட்டிக் கொண்டார்களோ அவர்கள் இன்னும் அந்த இடத்திலிருந்து விடுபடவில்லை. அதனால் வடக்கு, கிழக்கு இணைப்பை சாத்தியப்படுத்த கைக்கூலிகளாக இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களிடத்தில் நாங்கள் அவதானமாக இருக்கிறோம். கூட்டம் கூடுவதும், அவர்கள் பேசுவதும், கையெழுத்திட நினைப்பதும் இவர்கள் எங்கோ இருந்துவந்து கிழக்கு மக்களை இணைக்க பார்க்கிறார்கள். இதன் உண்மைநிலை என்ன? வெளிப்படையாக கூறப்போனால், வெளிநாட்டு சக்திகளின் கைக்கூலியாக இயங்குகின்ற தமிழ்த் தலைமைகளுக்கு முஸ்லிம் தலைவர்களாக இவர்கள் தான் இருக்கவேண்டும் என்று தீர்மானிக்கிறார்கள். முஸ்லிம்களின் தலைமை கிழக்கில் யாரென்பதை தீர்மானிப்பது ஒருபுறமிருக்க, எங்கோ இருக்கும் ஹக்கீமை முஸ்லிம் தலைவராக தமிழ்த் தலைவர்கள் கூறுகிறார்கள். நாங்கள் தமிழர்களின் தலைவர்களாக யாரிருக்க வேண்டும் என்று கூறவில்லை. தமிழ் அரசியல்வாதிகள் எங்களுக்கு திணிக்கிறார்கள்.

**கேள்வி : கிழக்கில் வாழும் தமிழ் முஸ்லிம் ஒற்றுமை பற்றி?**

வடக்கு, கிழக்கில் வாழ்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் ஒரே வயிற்றில் பிறந்த குழந்தைகள் போன்று ஒற்றுமையாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எங்களுக்குள் பிளவுகள் இல்லை. பொது நிகழ்வுகளின் போதும் விளையாட்டுகளின்போதும் நாங்கள் ஒன்றிணைந்தே இருக்கிறோம். வெளிநாட்டவர்களின் தேவைகளுக்காக நமது மாகாணங்களை ஒன்றிணைப்பதும், வெளிநாடுகளின் தேவைகளுக்காக ஆயுதங்களை கொடுத்து தமிழ், முஸ்லிம், சிங்கள கலவரங்களை உண்டாக்கி தமிழீழ விடுதலைப் புலிகள் என்றும் மற்றும் பல்வேறு பெயர்களில் அமைப்புகளை உண்டாக்கி தமிழர்கள், முஸ்லிம்களை என ஆளைஆள் சுட்டுக்கொண்ட வரலாறுகள் இருக்கின்றன. இவைகளெல்லாம் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பதை அறியாமல் நாம் வாழவில்லை.

**கேள்வி : வடக்கு கிழக்கு இணைப்பு, பிரிப்பு தொடர்பில்?**

யாரோ ஒருசிலரின் தேவைக்காக தனித்தனியாக இருந்த வடக்கு, கிழக்கு அன்று இணைக்கப்பட்டது. அதனால்தான் தலைவர் அஷ்ரப்புக்கு ஆணைகொடுத்து அதிகாரத்தை வழங்கினோம். அதுதான் தலைவர் அஷ்ரப்பின் அரசியல் தேவைக்கான காரணங்களில் ஒன்றாக அன்று இருந்தது. சிறுபான்மை மக்கள் வடகிழக்கில் வாழும் சிறுபான்மையின பெரும்பான்மையினரை எதிர்த்து யுத்தம் செய்யவேண்டிய நிலைவரும் என்பதையெல்லாம் பற்றி தலைவர் சிந்தித்தார். தமிழ் சகோதரர்களின் அவா அதுவாக இருந்தால் வாருங்கள் பேசுவோம் என்று தமிழ்த் தலைமைகளான சம்பந்தன், சிவசிதம்பரம், அமிர்தலிங்கம், நீலம் திருச்செல்வனின் மகன் போன்றோர்களுடன் பல பேச்சுவார்த்தைகளை தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் மேற்கொண்டார். நாங்களும் அதில் இருந்தோம். நாடாளுமன்றத்தில் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் தன்னுடைய இறுதிக்காலப்பகுதியில் ஒன்றை பேசினார். இணைந்த வடகிழக்கினுள் ஏதாவது அதிகாரம் என்று பேசும் கடைசி குரல் என்னுடையதாகவே இருக்கும். இதற்கு நீங்கள் செவிசாய்க்காவிட்டால் என்னுடைய சமூகம் வடக்கையும் கிழக்கையும் பிரிக்க கோரும் என்றார்.

வடகிழக்கு விவகாரம் நீண்ட வரலாற்றை கொண்டது. பிரபாகரனை நாங்கள் சந்தித்தபோது அவரிடம் நான் பேரினவாதம் உங்களை அடக்குவதானால் தானே நீங்கள் தனியதிகாரம் கேட்கிறீர்கள். ஆனால், நீங்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் முஸ்லிம்களை அடக்க ஆரம்பித்தால் எதிர்காலத்தில் முஸ்லிம்களையும் ஆயுதம் தூக்கச் சொல்கிறீர்களா என்று கேட்டு அந்த நிலை வேண்டாம் என்றேன். அந்த சந்திப்பில் கலந்துகொண்ட ரவூப் ஹக்கீம் சாட்சியாக இருக்கிறார். காணிகளை பறிகொடுத்து, உரிமைகளை இழந்தவர்களாக நாம் இருந்தோம். கிழக்கு தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் கலாசாரம், வாழ்க்கை முறை வேறு. வடக்கு தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் கலாசாரம், வாழ்க்கை முறை வேறு. கண்டி மக்களின் கலாசாரம் வேறு. சமஷ்டி, தனி ஈழம் பெறுவதாக இருந்தால் இங்கு வாழும் மக்களின் நிலையை முதலில் அறிந்திருக்க வேண்டும். அதனால் தான் ஒற்றுமையாக இருக்கும் மக்களின் நிம்மதிக்காக வடக்கையும் கிழக்கையும் பிரிக்கக்கோரி தேசிய காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்தோம். எங்களை கிழக்கு அரசியல்வாதிகள் பைத்தியம் பிடித்தவராக பேசிக்கொண்டார்கள். தமிழ் சகோதரர்களும் அதை இனவாதமாக பார்த்தனர். காலவோட்டத்தில் அதாஉல்லா சொன்னதை தமிழ் மக்களும் புத்திஜீவிகளும் சரியென ஒத்துக்கொண்டார்கள்.

மட்டக்களப்பில் தமிழர்கள் மத்தியில் ஒரு காலத்தில் "யாழோட்டி கழகம்" என்ற கழகமே உருவாக்கப்பட்டது. கிழக்கில் வாழும் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளாக வாழ்கிறோம். எங்களை நிம்மதியாக வாழவிடுங்கள். அதுபோன்றே வடக்கிலும். வடக்கும் கிழக்கும் இணைந்து நாங்கள் இருக்க விரும்பவில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தினால் சதிசெய்து இரவோடிரவாக நாங்கள் இணைக்கப்பட்டோம். எங்களின் போராட்டத்தினால் பிரிவு சாத்தியமானது. ஆங்காங்கே சில தவளை சத்தங்கள் கேட்டாலும் இப்போது தமிழர்களும் முஸ்லிம்களும் கிழக்கில் சந்தோஷமாக வாழ்கிறோம். சர்வதேச நாடுகளின் கைக்கூலிகளின் சத்தம் இப்போது வெளிவந்து கொண்டிருக்கிறது. பாதையிலும் தமிழர் பாதை, முஸ்லிம் பாதை என்று வருகிறது. அப்படி ஒன்று இங்கில்லை. அப்படி ஒருநிலையை இனவாதம் பேசி உருவாக்குகிறார்கள்.

**கேள்வி : மாகாண சபை முறைமை, காணி பிரச்சினைகள் தொடர்பில்?**

இரண்டு மாகாணசபைகள், இரண்டு சமஷ்டி ஏன் இருக்கக் கூடாது? கிழக்கை முஸ்லிம்களும் தமிழர்களும் இணைந்து ஆளமுடியாதா? பிள்ளையானை நாங்கள் முதலமைச்சராக உருவாக்கி காட்டியுள்ளோம். கிழக்கின் முதலமைச்சராக முஸ்லிம்களும் இருந்திருக்கிறார்கள். இங்கு இனவாதம் இல்லை. கலரிக்கு பேசி படம்காட்ட அதாஉல்லாவுக்கு நேரமில்லை. ஆயுததாரிகளுக்கு கூட பயப்படாமல் இறைவிதிப்பின் பால் அரசியல் செய்யும் எங்களுக்கு புதிதாக வந்த சிலர் படம் காட்டுகிறார்கள். காணியதிகாரத்தை கேட்டு சண்டைபிடிக்கும் தமிழர்களிடமிருந்து முஸ்லிம்களின் காணிகள் விகிதாசாரப்படி கிடைத்துள்ளதா? இல்லை. சிங்கள மக்களிடமிருந்து கிடைத்துள்ளதா என்றால் அதுவும் இல்லை. அதனால்தான் நீண்டகால அனுபவத்தை கொண்டு பாலமுனை பிரகடனத்தில் தீர்வை முன்வைத்தோம். மாகாண சபை முறை வேண்டாம் என்கிறோம். எந்த இன மக்கள் எந்த பிரதேசத்தில் வாழ்கிறார்களோ அவர்களை அங்கு முன்னிலைப்படுத்துங்கள் என்றோம்.

**கேள்வி : மு.கா. - தமிழ்க் கட்சிகளின் உறவு பற்றி?**

கல்முனையில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பிரச்சினை என்றால் படம் காட்ட முடியாது. பேசித்தீர்க்க வேண்டும். தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றோர்களுடன் ரவூப் ஹக்கீம் நெருங்கிய நீண்டகால உறவை கொண்டுள்ளார். அந்த நல்ல உறவை கொண்டு கல்முனை பிரச்சினை, மூதூர், தோப்பூரின் பிரச்சினைகளை தீர்க்க முடியாதா? அவரது உறவினால் வாழைச்சேனை பிரச்சினைக்கு தீர்வை காணமுடியாதா? நாடகம் நடித்துக்கொண்டு வாக்குகளுக்காக இனவாதத்தை பேசிக்கொண்டு நயவஞ்சக அரசியலை அவர் செய்து கொண்டிருக்கிறார். இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் இவர்களை பற்றி நன்றாக தெரியும். அரசியலை சீராக்க தலைவர் அஷ்ரப்பின் தலைமையில் ஒன்று சேர்ந்த கூட்டம் நாங்கள். அதில் ஒருவராக இருந்து அடுத்தகட்டங்கள் தொடர்பில் கடும் தெளிவுடன் இருக்கிறோம்.

**கேள்வி : புதிதாக மலர்ந்துள்ள புத்தாண்டு பிரார்த்தனை?**

இந்த ஆண்டில் நிறைய வடுக்கள் இருந்தது. புதிய ஆண்டில் வடுக்கள் இல்லாமல் நம்மை வாழவைக்கும் ஆண்டாக மலரவுள்ள புத்தாண்டு இருக்க வேண்டும். நாட்டில் பஞ்சமில்லாத நிலை உருவாகி சிங்கள, தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் ஒருதாய் பிள்ளைகள்போல இனவாதம் இல்லாமல் ஒற்றுமையாக வாழ இந்த ஆண்டு பிறக்கவேண்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

**கேள்வி : தற்போதைய அம்பாறையின் நிலை தொடர்பில்?**

ஆட்சி அதிகாரம் என்பது சில காலங்கள் மட்டுமே இருக்கும் அந்த காலப்பகுதியில் மக்களுக்கு எதைசெய்தோம் என்பதை மனச்சாட்சியுடன் செய்ய வேண்டும். இன்றைய சூழ்நிலையில் விவசாயிகளும் மீனவர்களும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். பிரதேச மீனவர்களின் அவசர தேவையாக உள்ள பின்பிடித் துறைமுகம் என்பது புரிந்துணர்வில்லாத அரசியல்வாதிகளினால் சாத்தியப்படாமல் தள்ளி நிற்கிறது. இதனால் மீனவர்கள் கடுமையாக கஷ்டப்படுகிறார்கள். ஊருக்கே சோறுபோடும் விவசாயிகள் கடுமையான இன்னல்களை சந்தித்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை அதினிலிருந்து விடுபடச்செய்வது தொடர்பில் சிந்திப்போம். எமது பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி தொடர்பில் அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டுமின்றி கல்வியதிகாரிகள், உள்ளூர் அரசியல்வாதிகள், பெற்றோர்கள் என பலரும் ஒன்றிணைந்து சரியாக திட்டமிடுவதன் மூலம் கல்வி முன்னேற்றத்தில் வெற்றியடையலாம் என்றார்.

• உரையாடல் - நூருல் ஹுதா உமர்

## நக்கல் நமசிவாயம்

நம்பிக்கையா இந்த வருஷத்த ஓட்டலாமெண்டு பார்த்தாலும் உந்த ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின்ர பேச்சுகள கேக்க விசர் வருகுது பாருங்கோ...



# இன்றைய நாளில்...

- 1592 – முதலாவது ஆங்கிலேயக் கப்பல் எட்வேர்ட் பொனவென்ச்சர் இலங்கைத் தீவின் காலியை வந்தடைந்தது.
- 1795 – ஜோன் ஜார்விஸ் யாழ்ப்பாணத்தின் ஆட்சியராக நியமிக்கப்பட்டார்.
- 1903– சேர் என்றி பிளேக் பிரித்தானிய இலங்கையின் ஆளுநராக நியமனம் பெற்று கொழும்பு வந்து சேர்ந்தார்.
- 1973 – வியாழனின் முதலாவது மிகக்கிட்டவான படங்களை பயனியர் 10 விண்கலம் பூமிக்கு அனுப்பியது.
- 1984 – இந்திய நகரான போபாலில் யூனியன் கார்பைட் நிறுவனத்தில் இடம்பெற்ற நச்சுவாயு கசிவினால் 3,800 பொது மக்கள் கொல்லப்பட்டனர். 150,000 - 600,000 பேர் வரையில் காயமடைந்தனர். (இவர்களில் 6,000 பேர் வரையில் பின்னர் இறந்தனர்). உலகில் இடம்பெற்ற மிக மோசமான தொழிற்சாலை விபத்து இதுவாகும்.
- 1992 – உலகின் முதலாவது குறுஞ்செய்தி தனி மேசைக் கணினியில் இருந்து வொடபோன் தொலைபேசி ஒன்றுக்கு அனுப்பப்பட்டது.
- 1997 – நிலக் கண்ணிவெடிகளைத் தயாரிப்பது மற்றும் பயன்படுத்துவதைத் தடை செய்யும் ஒப்பந்தத்தில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா தவிர்ந்த 121 நாடுகள் ஒட்டாவாவில் கையெழுத்திட்டன.
- 2007 – இலங்கைத் துடுப்பாட்ட அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் தேர்வுத் துடுப்பாட்டத்தில் 709 இலக்குகளை வீழ்த்தி புதிய உலக சாதனை படைத்தார்.

# சுற்றுலாத்துறை பெப்ரவரிக்குள் இயல்பு நிலைக்குத் திரும்பிவிடும்

## அமைச்சர் பிரசன்ன நம்பிக்கை



ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களுக்குள் சுற்றுலாத்துறை இயல்பு நிலைக்குத் திரும்பும் என எதிர்பார்க்கின்றோம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

ஜனவரி மாதத்தில் சுமார் ஒரு இலட்சத்திலிருந்து ஒரு இலட்சத்து 25 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். எவ்வாறாயினும், நாடு வழமைக்குத் திரும்பியவுடன் குறைந்தது 2 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்ப்பதாகவும், மத்திய கிழக்கு மற்றும் இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைத்து நாட்டை முன்னைய நிலைக்குக் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் கூறினார்.

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் வரை சுமார் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்தனர் எனவும், அதில் 86 ஆயிரம் பேர் டிசம்பர் மாதத்தில் மட்டும் வருகை தந்திருக்கின்றமை சிறந்த போக்கை பிரதிபலிக்கின்றது எனவும் அவர் தெரிவித்தார்.

# பிரதமர் பதவியிலிருந்து விலக விரும்பவில்லை

## மஹிந்த தெரிவிப்பு



பிரதமர் பதவியிலிருந்து விலகவிரும்பவில்லை என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சிலர் நாட்டில் காணப்படும் ஜனநாயக சுதந்திரத்தைப் பயன்படுத்தி பல வதந்திகளை பரப்பிவருகின்றனர் என தெரிவித்துள்ள அவர், நாட்டின் புத்திஜீவிகள் இதனை ஏற்றுக்கொள்வதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனநாயக சுதந்திரத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்துவது நியாயமில்லை என பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

# அரசியல் தலையீடுகளுக்கு அனுமதிக்கமாட்டோம்

## வவுனியாவில் பதாகைகள்




*(வவுனியா நிருபர்)*

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வளாகத்தில் வைத்தியர்களின் நியமனங்களில் அரசியல் தலையீடுகளை அனுமதிக்க மாட்டோம் எனும் வசனத்தைத் தாங்கிய பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பதாகைகள் தமிழ் மற்றும் சிங்கள மொழியில் காணப்படுவதுடன், பாதாகையின் கீழ்ப்பகுதியில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் என உரிமை கோரப்பட்டுள்ளது. குறித்த பதாகைகள் வைத்தியசாலை நுழைவாயில்கள், சுவர்கள் என்பவற்றில் காணப்படுகின்றன.

# பொரளை நகைக்கடை கொள்ளை; மேலதிக தகவல்கள் வெளியாகின

பொரளையிலுள்ள நகைக்கடையொன்றில் கொள்ளையடிக்கப்பட்ட 32 பவுண் நகைகளில், 18 பவுண் நகைகள் திருகோணமலை, இரத்தினபுரி, மாத்தளை உள்ளிட்ட பல பகுதிகளில் அடகு வைக்கப்பட்டு, விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொள்ளைக்கு உதவிய குற்றச்சாட்டில் திருமணமான ஜோடியொன்றும், மேலும் 3 பெண்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் பொமிரிய, கடுவெல, மாலபே மற்றும் இரத்தினபுரி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

இந்தக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்கள் இருவரும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை எனவும், இவர்கள் கம்பஹாவிலுள்ள நிதி நிறுவனமொன்றில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்கள் உட்பட பல கொள்ளைச் சம்பவங்களின் சந்தேகநபர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 11ஆம் திகதி பொரளையிலுள்ள



நகைக்கடை ஒன்றிற்குள் புகுந்த கொள்ளையர்கள் இருவர், ஊழியர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டு 3 மில்லியன் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மேல் மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் மேற்பார்வையில் பொரளை பொலிஸார், மேல் மற்றும் தெற்குப் பிரதேச குற்றத்தடுப்புப் பிரிவினர் மற்றும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 2021 ஆம் ஆண்டு ரூ.1600 கோடி பெறுமதியான போதைப்பொருளை பறிமுதல் செய்த கடற்படை

*(ரஸீன் ரஸ்மின்)*

கடந்த 2021 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 1600 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, ஹெரோயின் 1268 கிலோ கிராம், கேரள கஞ்சா 7095 கிலோ கிராம், ஐஸ் போதைப்பொருள் 158 கிலோ கிராம் என்பன பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

நாட்டில் 74 தடவைகள் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது 1268 கிலோ கிராம் ஹெராயின் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கையைச் சேர்ந்த 119 பேரும், வெளிநாட்டவர்கள் 22 பேரும் இதன்போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளாதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன், 151 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளின்போது 7095 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதுடன், இலங்கையைச் சேர்ந்த 186 பேரும், வெளிநாட்டவர்கள் 07 பேரும் இதன்போது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று 73 தடவைகள் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது 158 கிலோ கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் 98 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கைக் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

# ஓமானில் சிக்கித் தவித்த இலங்கை பணிப்பெண்கள் 16 பேர் நாடு திரும்பினர்

தொழில் வாய்ப்புக்காக ஓமானுக்குச் சென்றிருந்த நிலையில், சிரமங்களுக்கு உள்ளாகிய நிலையிலும் இலங்கைக்குத் திரும்ப முடியாமல் சிக்கித் தவித்த இலங்கைப் பணிப்பெண்கள் 16 பேர் நேற்று தாயகம் திரும்பியுள்ளனர்.

மட்டக்களப்பு, திருகோணமலை, இரத்தினபுரி, பதுளை, கண்டி, குருநாகல், சிலாபம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

அவர்கள் தங்கள் முதலாளிகளால் பாலியல் துன்புறுத்தல், தாக்குதல் மற்றும் ஊதியம் வழங்கப்படாமை உள்ளிட்ட பல்வேறு வகையான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

பின்னர் அவர்கள் இலங்கைத் தூதரகத்தின் 'சுரக்ஷா' தடுப்பு மையத்தில் தடுத்து வைக்கப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமானிலுள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் ஆகியவற்றின் அதிகாரிகள் இணைந்து இந்த பணிப்பெண்களை நாட்டுக்கு அழைத்து வரும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# நீர்கொழும்பு கடலில் அடித்துச் செல்லப்பட்ட ஐந்து இளைஞர்கள் - இருவர் உயிரிழப்பு

நீர்கொழும்பு, துன்கலபிட்டிய கெபுன்கொட கடலில் நீராடச் சென்ற ஐந்து இளைஞர்கள், கடலலையில் அடித்துச்செல்லப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (01) இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அடித்துச் செல்லப்பட்ட இளைஞர்களில் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

எஞ்சிய நால்வரும் காப்பாற்றப்பட்டு, நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர்களில் இருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர்.

17 மற்றும் 23 வயதான இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், காப்பாற்றப்பட்ட எஞ்சிய இருவரும் சிகிச்சைகளின் பின்னர், வீடு திரும்பியுள்ளனர்.

அம்பேவல பகுதியைச் சேர்ந்த 21 வயதான இளைஞர் ஒருவரே இச்சம்பவத்தில் காணாமல் போயுள்ளதுடன், அவரைத் தேடும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

# இலங்கைக் கடலில் மூழ்கிய கப்பல்கள் தொடர்பான தரவுகள் பதிவேற்றம்

இலங்கை கடற்பரப்பில் மூழ்கிய கப்பல்கள் மற்றும் விமானங்கள் தொடர்பான அனைத்து தரவுகளையும் பதிவேற்றம் செய்ய மத்திய கலாசார நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இவை தொடர்பான தகவல்களை WWW.CCF.GOV.LK இணையத்தளத்திற்கு சென்று பெற்றுக்கொள்ள முடியுமென அதன் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இலங்கை கடற்பரப்பிற்குள் மூழ்கிய 101 கப்பல்கள் மற்றும் 6 விமானங்கள் தொடர்பான விரிவான தகவல்களை பொதுமக்கள் பெற முடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பேராசிரியர் காமினி ரணசிங்க தெரிவித்துள்ளார்.

# அரச துறையின் சிறந்த ஆண்டறிக்கை கணக்கறிக்கைகளின் வெள்ளி விருது

## இலங்கை விமானப்படைக்குக் கிடைத்தது





அரச துறைகளில் 2019 ஆம் ஆண்டின் நிதியாண்டிற்கான 'ஆண்டறிக்கை மற்றும் கணக்கறிக்கைகளுக்கான' வெள்ளி விருது விமானப்படைக்கு வழங்கப்பட்டது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது விமானப்படையின் சார்பாக கட்டளையக உள் கணக்காய்வாளர், விங் கொமாண்டர் ஆர்.ஆர்.சோமதிலக்க இந்த விருதைப் பெற்றுக்கொண்டார்.

2019 ஆம் ஆண்டின் நிதியாண்டிற்கான விருது வழங்கும் இவ்விழாவில் நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல கலந்துகொண்டு சிறப்பித்ததாக விமானப்படை தெரிவித்துள்ளது.

'இலங்கையின் அரச நிதிக் கணக்காளர்களின் சங்கம்' நிதி அமைச்சுடன் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

பின்னர், விமானப்படைத் தலைமையகத்தில் விங் கொமாண்டர் சோமதிலக்கவினால் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரணவிடம் இந்த விருது கையளிக்கப்பட்டது.

5 ஆவது முறையாக இந்த ஆண்டுக்கான போட்டி நடத்தப்பட்டதாக விமானப்படை மேலும் தெரிவித்துள்ளது.

# பயிலுனர் பட்டதாரிகளுக்கு இன்று முதல் நிரந்தர நியமனம்



அரச சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்ட பயிலுனர் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கை இன்று ஆரம்பமாகவுள்ளது.

இதற்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்திருப்பதாக அமைச்சரவை உபகுழுவின் தலைவரான அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

இலவசக் கல்வியின் பிரதிபலனாக உயர்கல்வி கற்றவர்களுக்கு தொழில்வாய்ப்பு வழங்கும் அரசின் கொள்கைத் திட்டத்திற்கு அமைவாக இந்த நிரந்தர நியமனம் வழங்கப்படுகின்றது.

53 ஆயிரம் பயிலுனர் பட்டதாரிகள் தற்போது அரச நிறுவனங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகக் கடமையாற்றுகின்றனர். இவர்களில் ஒரு வருடப் பயிற்சிக் காலத்தை நிறைவு செய்த 42 ஆயிரத்து 500 பேருக்கு இன்று முதல் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.

அத்துடன் கடந்த வருடம் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் பயிலுனர் பட்டதாரிகளாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்படும்.



புதுவருடத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் களனி விகாரையில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றபோது...

# ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் 2021 இல் வேலைதேடி வெளிநாடு பயணம்

## அதிகமானோர் சென்றது கட்டாருக்கு

2021 ஆம் ஆண்டில் மொத்தமாக 120,000 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில், கட்டாருக்கே அதிகளவானவர்கள் வேலை தேடிச்சென்றுள்ளனர்.

உத்தியோகபூர்வ புள்ளிவிபரங்களின்படி கடந்த வருடம் சுமார் 30,000 இலங்கையர்கள் கட்டாருக்கு வேலைக்காக சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்களில் 27,000 பேர் சவூதி அரேபியாவுக்குச் சென்றுள்ளனர். கிட்டத்தட்ட 20,000 பேர் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கு வேலைக்காகச் சென்றுள்ளனர். 1,600 நபர்கள் சைப்ரஸுக்குச் சென்றுள்ளதாகவும், 1,400 பேர் தென் கொரியாவிற்குச் சென்றுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

# கும்பாபிஷேகம் நடக்கவிருந்த விநாயகர் ஆலயத்தின் விக்கிரகங்கள், சிலைகள் இனந்தெரியாதோரால் உடைப்பு

## அக்கரப்பத்தனையில் பதற்றம் : கடைகளுக்கு பூட்டு






(க.கிஷாந்தன்)

அக்கரப்பத்தனையில் உள்ள ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் விக்கிரகங்கள் மற்றும் சிலைகள் இனந்தெரியாதோரால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளன. இதனால் அந்த பகுதியில் பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று (02) அதிகாலை இடம்பெற்றிருக்கலாம் என நகரவாசிகள் தெரிவிக்கின்றனர்.

அக்கரப்பத்தனை நகரத்தில் இதுவரை காலமாக ஆலயம் ஒன்று இல்லாத நிலையில், புதிதாக புனரமைக்கப்பட்ட குறித்த ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்திலேயே இவ்வாறு சிலைகள் மற்றும் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டுள்ளன.

குறித்த ஆலயத்தில் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 23ஆம் திகதி வரை கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. இந் நிலையிலேயே இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறித்த பகுதியில் பெரும் பதற்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது.

அக்கரப்பத்தனை நகர வர்த்தகர்களும் அனைத்து கடைகளையும் மூடி ஆலயத்துக்கு முன்பாக ஒன்றுகூடி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி வருகின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் அக்கரப்பத்தனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மத்திய மாகாணத்தில் 4,545 பட்டதாரிகளுக்கு நியமனம்




(கண்டி நிருபர்)

58 ஆயிரத்து 116 பட்டதாரிகளுக்கு தொழில் வழங்கும் திட்டத்தின் கீழ் மத்திய மாகாணத்தில் 4 ஆயிரத்து 545 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

பல்லேகலையிலுள்ள மத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில், மத்திய மாகாண ஆளுநர் லலித் யூகமகே தலைமையில் இந் நியமனம் வழங்கப்பட்டது.

மத்திய மாகாணத்தில் வழங்கப்பட்ட நியமனங்களில் கண்டி மாவட்டத்துக்கு 2 ஆயிரத்து 642 நியமனங்களும், மாத்தளை மாவட்டத்துக்கு 959 நியமனங்களும், நுவரெலியா மாவட்டத்துக்கு 944 நியமனங்களும் வழங்கப்பட்டன.

பயிற்சியாளர்களாக பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டிருந்த 2 ஆயிரத்து 616 பேரும் உள்ளூராட்சி அமைப்புகளில் நியமிக்கப்பட்டிருந்த 705 பேரும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

இவ்வைபவத்தில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற அங்கத்தவர்களான குணதிலக ராஜபக்ஷ, உதயன கிரிந்திகொட, நாலக்க கோட்டேகொட, கண்டி மாவட்ட பிரதான செயலாளர் காமினி ராஜரட்ண உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# பல்கலைக்கழக மாணவிக்கு மடிக்கணினி வழங்கிவைப்பு




(நோட்டன் பிரிட்ஜ் நிருபர்)

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் மலையக கிளை ஏற்பாட்டில் பல்கலைக்கழக மாணவி ஒருவருக்கு மடிக்கணினி வழங்கப் பட்டது.

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் சுவிஸ் கிளை உறுப்பினர்களின் நிதிப்பங்களிப்பில் தென்கிழக்கு பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் மஸ்கெலியா - எடம்ஸ்பீக் தோட்டத்தை சேர்ந்த கணேசன் அனுஷா என்ற மாணவிக்கே மடிக்கணினி வழங்கப்பட்டது.

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தினால் முன்னெடுத்துவரும் வறுமை கோட்டின்கீழ் வாழும் குடும்பத்தில் கல்வி கற்கும் மலையக பல்கலைக்கழக மாணவர்களை ஊக்குவிக்கும் திட்டத்தில் ஒன்றாக நேற்று (02) தெரிவு செய்யப்பட்ட மேற்படி மாணவிக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது.

கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் மலையக கிளை ஒருங்கிணைப்பாளர் இரா.இராஜேந்திரன் தலைமையில் ஹட்டன் டைன் ரெஸ்ட் விருந்தகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில், முன்னாள் ஆசிரிய ஆலோசகரும் கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனத்தின் ஆலோசகருமான கே.ராஜசேகர், நோர்வூட் பிரதேசசபை உறுப்பினர் எம்.ராமச்சந்திரன் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மேலும் தெரிவு செய்யப்பட்ட 35 பல்கலைக்கழக மாணவர்களுக்கு கற்றல் நடவடிக்கையை ஊக்குவிக்கும் வகையில் அச்சுப்பிரதி பெற்றுக்கொள்ள ஒரு வருடத்துக்கு தலா 06 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. கோரிக்கை



(க.கிஷாந்தன்)

அக்கரப்பத்தனை நகரிலுள்ள கோவிலில் சாமி சிலைகள் உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்பட்டு உண்மை கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணியின் அரசியல் செயற்பாட்டாளர்களுக்கிடையிலான கூட்டமொன்று நேற்று (02) தலவாக்கலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

புதுவருடம் பிறந்தாலும் இன்னமும் வழி பிறக்கவில்லை. இன்று எந்த வரிசையில் நிற்கவேண்டி வருமோ என்ற அச்சத்துடன்தான் பொழுது விடிகின்றது. அரசு வங்குரோத்து நிலைக்கு வந்துள்ளது. நாடு மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எனது 32 வருடகால அரசியல் வாழ்வில் எந்தவொரு அரசும், இப்படியானதொரு வீழ்ச்சியைக் கண்டதில்லை.

ஜனாதிபதி செயலாளரை மாற்றினர். தற்போது மேலும் பல அரச அதிகாரிகளை மாற்ற தயாராகி வருகின்றனர். இதற்கிடையில் அமைச்சரவையும் மாற்றப்படவுள்ளதாம். இப்படி ஆட்சிகளை மாற்றிக்கொண்டிருந்தால் தீர்வு கிட்டுமா?

அக்கரப்பத்தனையில் உள்ள கோவில் உடைக்கப்பட்டுள்ளது. சுமார் 60, 70 சிலைகள் இனந்தெரியாத நபர்களால் தேசமாக்கப்பட்டுள்ளன. இது மிகவும் மோசமான செயலாகும். இதற்கு முன்னர் லிந்துலை பகுதியில் மாதா கோவிலின் சிலை சேதமாக்கப்பட்டது. தற்போது இந்து கோவில் இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

இனங்களுக்கிடையில் முறுகலை ஏற்படுத்தவா இவ்வாறான சம்பவங்கள் திட்டமிட்ட அடிப்படையில் இடம்பெறுகின்றன என்ற சந்தேகமும் எழுகின்றது. யாழ்ப்பாணத்தில் சிலைகள் திருடப்பட்டு, வெளிநாடுகளுக்கு கடத்தப்பட்டுள்ளன. எனவே, இதன் பின்னணியில் குழுவொன்று செயற்படுகின்றதா என்பதும் கண்டறியப்பட வேண்டும்.

அரவிந்தகுமார் நல்லவர்தான். ஆனால் அவர் இருக்கும் இடம்தான் சரியில்லை. 2013 இல் மாகாணசபைத் தேர்தலில் தோற்றார். ஆனால் 2015 நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றார். அதற்கு அவர் அங்கம் வகித்த மலையக மக்கள் முன்னணியும், ஐக்கிய தேசியக் கட்சியுமே காரணம். 2020 இலும் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அதற்கும் அவர் மலையக மக்கள் முன்னணியில் அங்கம் வகித்ததே காரணம்.

செந்தில் தொண்டமானுக்கு செல்வாக்கு இருந்தும், பண பலம் இருந்தும் நாடாளுமன்றம் தெரிவாகவில்லை. ஏனெனில் அவர்கள் கூட்டணி அமைத்து போட்டியிட்ட கட்சி தொடர்பில் மக்கள் மத்தியில் விமர்சனம் இருக்கின்றது. இந்நிலையில் நுவரெலியாவில் வந்து போட்டியிடுவேன் என அரவிந்தகுமார் அறிவித்துள்ளார். வரட்டும் பார்ப்போம்.

தமிழக மீனவர்களுக்கும் யாழ்ப்பாண மீனவர்களுக்கும் இடையில் முறுகல் நிலைமை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்திலிருந்து மீன்பிடிக்க வருபவர்கள் தமிழர்கள். அதேபோல யாழ்ப்பாணத்தில் இருந்து மீன்பிடிக்க செல்பவர்கள் தமிழர்கள். எனவே, தமிழர்கள் மோதிக்கொண்டால் அதன்மூலம் மற்றைய தரப்புக்குதான் நன்மை. இந்த விடயத்தையும் அரசு திட்டமிட்டு செய்கின்றதா என்ற சந்தேகமும் எமக்கு இருக்கின்றது. எனவே, நாம் சிந்தித்து செயற்பட வேண்டும் – என்றார்.

# மடக்கும்புர நீர்த்தேக்கத்தில் பெண் ஒருவரின் சடலம் மீட்பு




(க.கிஷாந்தன்)

தலவாக்கலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தில் உள்ள மீன்வளர்ப்பு நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம் ஒன்று நேற்று (02) காலை மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட வட்டகொடை மடக்கும்புர தோட்டத்தைச் சேர்ந்த 54 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயான கந்தையா ரமணி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குறித்த நீர்த்தேக்கத்தில் பெண் ஒருவரின் சடலம் மிதப்பதைக் கண்ட பிரதேச மக்கள் உடனடியாக பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த தலவாக்கலை பொலிஸார் சடலத்தை பார்வையிட்ட பின் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட பெண் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தாரா அல்லது நீர்த்தேக்கத்தில் தவறி விழுந்து உயிரிழந்தாரா அல்லது எவராவது கொலை செய்து நீர்த்தேக்கத்தில் எறிந்து சென்றார்களா என்பது தொடர்பாக பலகோணங்களில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரண விசாரணைகளின் பின் சடலம் வைத்திய பரிசோதனைக்காக நுவரெலியா ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 197யூரியா உரப்பொதிகள் களவு; மஸ்கெலியா பொலிஸில் முறைப்பாடு

(மஸ்கெலியா நிருபர்)

ஹொரன பிளான்டேசனுக்கு உரித்தான சாமிமலை கவரவிலை தோட்டத்தில் தேயிலை செடிகளுக்காக ஒதுக்கப்பட்டிருந்த யூரியா உரம் 197 பொதிகள் காணாமல் போயுள்ளதாக தோட்ட முகாமையாளரினால் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதாக பொலிஸ் நிலைய உயர் அதிகாரி தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

ஒவ்வொரு மாதமும் தோட்ட நிர்வாகத்தால் களஞ்சியப்படுத்தப்பட்ட உரத்தை கணிப்பீடு செய்யப்பட்டபோது, டிசம்பர் 31ஆம் திகதி கையிருப்பிலுள்ள அனைத்து பொருட்களும் பதிவிட்டபோது இந்த யூரியா உரம் காணாமல் போனது தெரியவந்துள்ளது.

இவ்விடயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் விசாரணை நடத்திய பின்னர் 197 யூரியா உரம் காணவில்லை என புகார் பதிவு செய்துள்ளனர். இது விடயமாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகள் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.




நுவரெலியா பிரதான பஸ்தரிப்பிடத்துக்கு பின் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் மழைக்காலங்களில் நீர் உட்புகுவதால் அரசாங்க அனர்த்த முகாமைத்துவ திணைக்களத்தின் 50 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில், மதில் சுவர் அமைக்கும் வேலைத்திட்டம் நடைபெற்று வருகின்றது. (படம்: செ.திவாகரன்)





ஹேலீஸ் கம்பனியின் கீழ் இயங்கும் கிரேட்வெஸ்டன் கல்கந்தவத்தை தோட்டத்தில் நேற்றுமுன்தினம் (01) தோட்ட அதிகாரி சரத் ரணவீர தலைமையில் தொழிலாளர்கள் சம்பிரதாய பூர்வமாக தங்களது தொழிலை ஆரம்பித்தனர். (தலவாக்கலை நிருபர்)

# கலாநிதி ஸாதியா பௌஸரின் மலையக கவிதைகளும் மக்களும்




## நூல் அறிமுகம்

மலையகக் கவிதை இலக்கிய ஆய்வுத்துறையில் 'மலையகக் கவிதைகளும் மக்களும்' எனும் ஆய்வு நூலை எழுதியதன் மூலம் கலாநிதி ஸாதியா பௌஸர், துறைசார்ந்த சாதனையாளராகவும், தமது புலமைத் தடத்தை ஆழப்பதித்த பெருமைக்குரியவராகவும் திகழ்கின்றார். தான் பிறந்த மலையக மண்ணின் மீது கொண்டுள்ள பாசம் மற்றும் அறிவு அனுபவங்களுடன் மலையகத்தில் துன்பப்படும் மக்கள் மீது பரிவுடன் தமது பார்வையை செலுத்தி அம்மக்கள் பற்றி பாடுபொருளாகக் கொண்டு படைத்த கவிஞர்களின் பாடல் வரிகளையும், வலிகளையும் எடுத்தாய்வு செய்து மலையகக் கவிதை இலக்கியத்திற்கென ஒரு காத்திரமான நூலை வெளிக்கொணர்ந்துள்ளார் கலாநிதி ஸாதியா பௌஸர். இதன் பயனாக இதுவரையிலும் கிடைக்கப்பெறாத மலையகப் படைப்பாளிகளுக்கு முக்கியத்துவமும், அங்கீகாரமும் வழங்கப்படுகின்ற ஆரோக்கியமான சூழல் இன்று எழுந்துள்ளது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறைத் தலைவியாக விளங்கும் கலாநிதி ஸாதியா பௌஸர், மலையகம் பற்றி ஆய்வு மேற்கொண்டு வெளியிட்ட இந்நூலில் மலையகக் கவிஞர்கள் மனிதகுலத்தை நேசிக்கும் பண்பையும், மக்கள் படும் துயரத்தையும், அவர்களது வாழ்க்கை கோலத்தையும் பல கோணங்களில் ஆராய்ந்து மலையக மக்கள் பற்றிய கூர்மையான மதிப்பீடொன்றை திறம்படச் செய்துள்ளார். இதற்கும் மேலாக தமிழ் இலக்கியத்துறையில் பல்வேறு ஆற்றல்கள் படைத்த ஒரு சிறந்த ஆய்வாளர் இவர் என்பது நாமறிந்ததே.

இந்நூலாசிரியர் தமது முன்னுரையில், "தமிழ் இலக்கியத்தை யாழ்ப்பாணத் தமிழ் இலக்கியம், கிழக்கிழங்கைத் தமிழ் இலக்கியம், தென்னிலங்கைத் தமிழ் இலக்கியம் என பிரதேச ரீதியிலான இலக்கியமாக நோக்குவதை விட அடக்கப்பட்ட சமூகத்தின் குரலாக நோக்குவதே பொருந்தும். இவ்வாய்வில் மலையக மக்கள், மலையக இலக்கியம் முதலிய பதங்கள், பிரதேச அடிப்படையிலன்றி, இந்தியாவிலிருந்து பெருந்தோட்டச் செய்கைக்காக அழைத்துவரப்பட்ட மக்களையும் அவர்களது பிரச்சினைகளைப் பிரதிபலிப்பனவாக அமைந்த இலக்கியங்களையுமே குறித்து நிற்கின்றன. மலையகத்தைச் சேர்ந்தவர்களால் அவர்களது பிரச்சினைகள், வாழ்வியல் அம்சங்கள் முதலியவற்றைப் பற்றி எழுதப்பட்ட கவிதைகள், மலையகம் சார்ந்தோரால் மலையகம் தொடர்பாக எழுதப்பட்ட கவிதைகள் ஆகிய இரண்டும் மலையக கவிதைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன" என்று நூல் பற்றி குறிப்பிடுகிறார். இந்த ஆய்வு நூல் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றினதும் உட்பிரிவுகளில் பல உப தலைப்புகளில் நிறைய விடயங்கள் எழுதப்பட்டுள்ளன. முதல் பொருளடக்கத்தில் 1838களில் 'மலையக மக்களின் வரவும் ஆரம்ப காலகட்ட பிரச்சினைகளும்' என்ற தலைப்பில் நூலாசிரியர் கலாநிதி ஸாதியா பௌஸர் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கோப்பி பயிர்ச்செய்கைக்காக அழைத்து வரப்பட்ட ஆரம்ப வரலாற்றை எடுத்துக் கூறி பிழைப்புக்காக தொழில் தேடிவந்த மக்கள் பட்ட துயரத்தையும், அவர்கள் எழுப்புகின்ற அவலக்குரலையும் மலையக கவிஞர்கள் தம் குருதி கலந்து எழுத்துகளால் வடித்துள்ள கவிதைகளை எடுத்தாராய்ந்து நேர்மைத் தன்மையோடு ஆழமான விரிவான வரலாற்றுக் கண்ணோட்டத்தில் தெளிவாக விளக்கியுள்ளார்.

காலங்காலமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இலக்கியம் மறுக்கப்பட்டு வந்துள்ளது. இதுவே ஏடறிந்த இலக்கிய மரபு எனப் பேராசிரியர் கைலாசபதி கூறுவதுபோல் இத்தனை காலமும் துன்பப்பட்ட மலையக மக்களுடைய வாழ்வியல் துயரங்களை கவி வரிகளுக்குள் சிறைபிடித்து வடித்துள்ள மலையகக் கவிஞர்களின் அடையாளத்தை யாரும் சரியாகப் பதிவுசெய்யவில்லை. இந்நூலாசிரியர் செய்நேர்த்தியுடன் மதிப்பீடுசெய்து பதிவுசெய்துள்ளார்.

குறிப்பாக, அல்-அஸுமத், நாவண்ணன், சி.வே.ராமையா சித்திரித்துள்ள கவிதைகளை பல இடங்களில் எடுத்துக்காட்டி தம் ஆய்வு நூலுக்கு வலிமை சேர்த்துள்ளார்.

'மலையகக் கவிதைகளின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற தலைப்பின் உப தலைப்புகளாக ஆரம்ப காலம் (1825-1920) விழிப்புணர்ச்சிக் காலம் (1920 - 1950 களின் இறுதிவரை) எழுச்சிக்காலம் (1960 தொடக்கம் இன்றுவரை) இதில் நூலாசிரியர் "மலையக இலக்கியம் எனும்போது அதனை பிரதேச ரீதியிலான ஓர் இலக்கியமாகவன்றி, அடக்கப்பட்ட ஒரு சமூகத்தின் குரல் அல்லது இந்தியாவிலிருந்து இலங்கை பெருந்தோட்டங்களுக்கு அழைத்து வரப்பட்ட பாட்டாளி மக்களின் குரல்கள் என்றே கொள்ளவேண்டும்" என்று மிகவும் தெளிவுபடக் கூறுகிறார்.

"வாய்மொழிப் பாடல்கள் மூலம் மலையக மக்களின் வரவு, தோட்டங்களில் இடம்பெறும் கொடுமைகள், மலையக தோட்டத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், ஏக்கங்கள், அவலங்கள், தொழில் நிலைமைகள் முதலிய இன்னோரன்ன அம்சங்களையும் அறிந்துகொள்ள முடியும்" என்று நூலாசிரியர் தமது நூலில் சான்றுகளுடன் முன்வைத்துள்ளார். ஆசிரியரின் பார்வைத் தளத்தில் எம்மையும் ஏற்றி அப்பாடல்களைத் தேடிப் படிக்க வேண்டும் என்ற தூண்டுதலைத் தரக்கூடியதாக உள்ளது.

மலையக சமூகவியல் கூறுகளை நாம் முழுமையாக அறிந்துகொள்ள குறித்த காலகட்டத்தில் தோன்றிய கவிஞர்களது படைப்புகள் மலையக மக்களது வாழ்வு பற்றி அறிய உதவுகின்றது. அந்தக் கவிதை வரிகளை சுவைபட எடுத்தியம்புவதில் எதிலும் குறிப்பாக, கண்ணாடிக்குணம் பிரதிபலிக்க வேண்டும் என்ற வகையில் அவரது மிக எளிய எழுத்துநடையும் அவர் கவிதைகள் குறித்து பொருள் விளக்கமளிக்கும் நயமும் நூலெங்கும் விரவிக் கிடக்கிறது.

மலைக மக்கள் மீது போலித்தனங்களையும், கபட நாடகங்களையும் ஆடுகின்ற கங்காணிமாரையும், துரைமாரையும் துகிலுரித்துக்காட்டி மலையக சமூகத்தை விழிப்புறச் செய்த மக்கள் கவிஞர்களாக கணிப்பிடப்படுபவர்களில் முதன்மையாளர்களாக விளங்குபவர்களை பெயர்ப்பட்டியலிட்டு நூலாசிரியர் அறிமுகம் செய்துள்ளார். அந்தவகையில் சி.வி.வேலுப்பிள்ளை, சக்தி பாலையா, வி.எஸ்.பாலு (குறிஞ்சித்தென்னவன்) அல்-அஸுமத், சி.வே.ராமையா, க.ப.லிங்கதாசன், தமிழோவியன், வெலிமடை குமரன், பூண்டுலோயா தர்மு, அரு.சிவானந்தன், முத்து சம்மந்தர், வீரா. பாலச்சந்திரன் ஆகியோரையும், 1980களிலிருந்து இன்றுவரையிலும் சு.முரளிதரன், இரா.நித்தியானந்தன், சி.சிவசேகரம், சிவ.இராஜேந்திரன், மை.பன்னீர்செல்வம், இ.தம்பையா, நாவண்ணன், ம.சண்முகநாதன், க.வெள்ளைச்சாமி, பெனி, இக்பால் அலி, றசீனா புகார், மல்லிகை சி.குமார், இராகலை பன்னீர், குறிஞ்சி இளந்தென்றல், க.ஆதவன், வ.ஐ.ச.ஜயபாலன், சி.ஏ.எலியாசன், தவசஜிதரன், சந்தனம், சத்தியானந்தன், மை.பன்னீர்ச்செல்வம், புசல்லாவ கணபதி, எல்.ஏ.செல்வராஜ், நாகபூஷணி, மாரிமுத்து சிவக்குமார், பொ.புண்ணியமூர்த்தி மடவளை சியாம், பொகவந்தலாவ சோ.ஸ்ரீதரன் கலகெதர உனைஸ் ஆரிப், வீ.கே.பெரியசாமி, கண்டி ராமச்சந்திரன் என ஒரு நீண்ட பெயர்ப்பட்டியலை நூலாசிரியர் தந்திருக்கிறார். இதில் அதிகப்படியான கவிஞர்களை அடையாளப்படுத்தியிருந்தாலும் முன்னணிமிக்க கவிஞர்களின் கவிதைகளைத் தொட்டுக் காட்டி தனது இரசனையை - தனது உளக்கிளர்வை வாசகர்களுடன் பகிர்ந்துகொள்கிறார் நூலாசிரியர் கலாநிதி சாதியா பௌஸர்.

இந்நூலில் மக்கள் கவிஞர்களை பல வண்ணங்களில் கோர்வை செய்துள்ளார் நூலாசிரியர். நமது பார்வையில் படாத - நாம் கண்டுகொள்ளாத கவிஞர்களின் படைப்புகள், நமது செவிக்கு எட்டியும் அதை கவனத்தில் கொள்ளாமல் இருட்டிடப்புச் செய்யப்பட்ட கவிஞர்களின் படைப்புகள், புதுமுகக் கவிஞர்கள் இப்படி பற்பல. அவற்றை எல்லாம் தேடிப்பிடித்து அறிமுகம் செய்துள்ளார் நூலாசிரியர் கலாநிதி சாதியா பௌஸர். இது மிகவும் கடிமான ஒரு முயற்சியாகும். ஒரு வாய்ப்பாட்டுடன் திறனாய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வு முயற்சியாளர்களிலிருந்து சற்று வேறுபட்டவையோ என்று சொல்லுமளவுக்கு இந்நூலுக்கு ஒரு தனித்துவம் இருக்கிறது. அதுமட்டுமல்ல, நூலின் தரவு நிலைப்படுத்தலில் யாரையும் விட்டுவிடாமல் கணிசமானளவு நிறைவுசெய்வதற்கு அதிக அக்கறையை நூலாசிரியர் காண்பித்துள்ளார் என்று கூறலாம். ஆனாலும், 1990களில் மாவனல்லை பிரதேசத்தில் நூராணியா ஹசன், ரிஷ்கி ஷரீப், ரீசா யூசுப், பாரா தாஹிர் , கண்டியில் இஸ்லாமியச் செல்வி அரபா ஆகியோர் தேசிய பத்திரிகைகளில் கவிதைகள் எழுதினார்கள். ஆனால், இவர்கள் எவரும் நூல்களை பிரசுரிக்கவில்லை. இவர்களைப் பற்றியும் எதிர்காலங்களில் நூலாசிரியர் தேடிப் பார்க்கலாம் என்பது எனது பணிவான கருத்தாகும்

'மலையக மக்களின் அரசியல் பிரச்சினைகள்' என்ற தலைப்பின்கீழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட சட்டதிட்டங்களும், ஒப்பந்தங்களும், இனக்கலவரங்களும், அவற்றினால் ஏற்பட்ட விளைவுகளும், அரசியல் தலைவர்களின் நிலை முதலிய உப தலைப்புகளில் மக்கள் கவிஞர்கள் வடித்துள்ள மலையகத்தில் நிலவும் அரசியல் கொந்தளிப்பை தம் படைப்பின் ஊடாக சித்திரிக்கும் கவிதைகளை அடையாளப்படுத்தி மலையகத்தில் ஏற்படும் மாறுதல்களையும், சரித்திரத்தையும் அடையாளப்படுத்தி நூலுக்கு வலிமைபெறச் செய்துள்ளார்.

"மலையக மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் அரசியல் ரீதியாக பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். அவர்கள் அடக்கப்பட்ட சமூகமாகவே அதிக காலம் வாழ்ந்து வாழ்ந்துள்ளனர்" என்று நூலாசிரியர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். மலையக மக்கள பாடுபொருளாகக் கொண்டு பாடிய ஒவ்வொரு மக்கள் கவிஞருக்குள் ஒவ்வொரு விதமாக இருப்புக்கொண்டிருந்த கவி வரிகளை நூலில் தொடர்ச்சியாக கவிஞர்களின் அனுபவங்களையும், உணர்வுகளையும் வெளிக்காட்டி நிற்கின்ற கவி வரிகளை நூலாசிரியர் வெளிக்கொணர்ந்துள்ளார்.

அந்தக் கவிஞர்கள் வரிசையில் குமரன், முரளிதரன், அல்-அஸுமத், சக்தி பாலை ஐயா, சந்தனம் சத்தியானந்தன், தமிழோவியன், பெனி, சி.சிவசேகரம், இ.இராஜேந்திரன், அரு.சிவானந்தன், சண்முகநாதன், பன்னீர்செல்வம், குறிஞ்சி நாடன், தர்மு, இக்பால் அலி, குறிஞ்சித் தென்னவன், றசீனா, இராகலை பன்னீர், மல்லிகை சி. குமார் முதலிய கவிஞர்களின் படைப்புகளிலிருந்து செழிப்பான கூறுகளைத் தேடி மேல் நோக்கிய இலக்கிய உயரத்தைத் தொடவைத்துள்ளார் நூலாசிரியர்.

இறுதியாக, 'மலையகக் கவிதைகளும் மலையக தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளும்' என்ற தலைப்பின் கீழ், உணவுப் பிரச்சினை, உடை பிரச்சினை, வறுமை, வதிவிடப் பிரச்சினை, போதியளவு மருத்துவ, சுகாதார, போக்குவரத்து வசதியின்மை முதலிய உப தலைப்பின் கீழ் மக்கள் கவிஞர்களின் படைப்பாக்கம் தான் வாழ்ந்த சூழலில் எந்த நிலைமைகளில் எவ்வாறு பேசுகிறது. கவிஞர்களின் கவி வரிகளிலுள்ள மௌனப் பண்பாட்டுக் கவிதைகளையும், வெளிப்புறமாகப் பேசுகின்ற கவிதைகளையும் சரியாகப் பார்த்து நூலாசிரியர் ஆழமான மனப்பான்மையோடு மலையகத்தை இன்னுமொருபடி எப்படி மென்மேலும் மீட்டெடுக்கலாம் என்ற முக்கியமான கேள்வி ஒன்றையும் அவர் தம் ஆய்வின் மூலம் இயல்பாகவே காட்ட முனைந்துள்ளார் நூலாசிரியர்.

மலையக மக்களின் சாதாரண வாழ்க்கையைப் படம் பிடித்து அம்மக்கள் மீது அதீத அக்கறையுடன் பாடுபொருளாகக்கொண்டு காலம் நினைவில் வைத்திருக்கக்கூடிய கவி வரிகளைத் தந்த கவிஞர்களான பன்னீர்செல்வம், தர்மு, சந்தனம் சத்தியானந்தன், இராகலை பன்னீர், குறிஞ்சித் தென்னவன், பொகவந்தலாவ ஸ்ரீதரன், கலதெகர உனைஸ் ஆரீப், தமிழோவியன், றசீனா, இக்பால் அலி, சி.சிவசேகரம், இ.தம்பையா. இ.இராஜேந்திரன், பன்னீர்செல்வம் சி. வி. வேலுப்பிள்ளை, புண்ணிய மூர்த்தி, வெள்ளைச்சாமி, மாரிமுத்து சிவகுமார், குறிஞ்சி இளந்தென்றல், அல்-அஸுமத், றசீனா ஆகியோரின் பொருத்தமான கவி வரிகளை நூலில் இடங்களில் பதிவுசெய்துள்ளார்.

உண்மையில் இந்நூலைப் பார்க்கும் போது விருப்பு வெறுப்பின்றி, வெளிப்படையான நிதர்சன தன்மையோடு வெளிக்கொணரப்பட்ட மிகவும் காத்திரமான ஆய்வு நூலாகும்.

போராட்டத்தில் நம்பிக்கையில்லை. போராடினால் தங்களிடமிருக்கும் வாழ்க்கையும் இல்லாமல் போய்விடுமோ எனும் அச்சத்தில் வாழ்ந்த மலையக மக்களின் வாழ்க்கைக்கு தீர்ப்பளிக்க வேண்டிய பொறுப்பு மலையகக் கவிஞர்களுக்கு இருக்கின்றது. இதனை நுட்பமாக கவிஞர்கள் தங்களுடைய காலங்களில் அந்நியமாகாமல் திறம்பட செய்துள்ளார்கள். எனவே, இந்நூலிலிருந்து மலையக மக்களின் உண்மை நிலைவரங்களையும் அவர்கள் மீள் எழுச்சிபெறவேண்டிய இரகசியங்களையும் வெளியுலகுக்கு நூலாசிரியர் கலாநிதி ஸாதியா பௌஸர் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்நூல் பற்றி யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அணிந்துரையில் குறிப்பிடும்போது, "நூலாசிரியர் கலாநிதி ஸாதியா பௌஸர் மலையக இலக்கியங்களை உணர்வுடனும், புலமைத்துவ நெறியுடனும் நீண்ட காலமாக படித்துவருபவர். அவற்றுள் மலையகக் கவிதைகளிலேயே நிறைய ஈடுபாடுகொண்டவர். அந்த ஈடுபாடு ஆய்வுநெறிப்பட்டதாக அமைந்துவிட்டது. அதன் விளைவாக முதலில் ஓர் உயர்பட்ட ஆய்வேடாகப் பாராட்டப் பெற்றது'' என சுட்டிக்காட்டியுள்ளார். மலையகத்தைப் பின்புலமாகக் கொண்டவர். இவ்வாய்வு முயற்சியை மேற்கொண்டுள்ளார் என்பது உன்னிப்பாக நோக்கத்தக்கதாகும்.

கலாநிதி ஸாதியா பௌஸர் தனது தமிழ் சிறப்புக் கலைமாணி, முதுகலைமாணி, முதுதத்துவமாணி, கலாநிதிப் பட்டங்களை பேராதனைப் கல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்டவர். பல்வேறு நூல்களினதும், சஞ்சிகைகளினதும் ஆசிரியரான இவர், தமிழ் இலக்கியம், மலையகத் தமிழ் இலக்கியம், தொடர்பான பல்வேறு கட்டுரைகள் அவ்வப்போது எழுதி வருகிறார். இவர் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முதுநிலை விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார்.

மலையக கவிஞர்களின் எதிர்கால எழுத்துத்துறைக்கு இந்நூல் பயனுள்ளதாக அமையும். மலையக மக்களின் சமூக, அரசியல், அன்றாட வாழ்க்கை, தொழில், கல்வி, சுகாதாரம் போன்ற எல்லா விடயங்களையும் அலசி ஆராய்வது மகிழ்ச்சியளிக்கிறது. அவரது முயற்சி பாராட்டத்தக்கது.

**இக்பால் அலி**

# மக்கள் வங்கி LankaPay தேசிய அட்டைத் திட்டத்தை வழங்குபவர்களாகவும் தம்மகத்தே வைத்திருப்பவர்களாகவும் திகழும் முதலாவது வங்கியாக விளங்குகின்றது

மக்கள் வங்கி LankaPay National Card Scheme உடன் இணைந்ததன் மூலம் இத்திட்டத்தை வழங்குபவர்களாகவும், வைத்திருப்பவர்களாகவும் திகழும் முதலாவது வங்கியாக விளங்குகின்றது. மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு மற்றும் LankaClear இன் பொது முகாமையாளர்/ பிரதம நிறைவேற்று அதிகாரியான சன்ன டி சில்வா ஆகியோருக்கிடையில் இக்கூட்டிணைவுக்கான ஒப்பந்தம் அண்மையில் மக்கள் வங்கியின் தலைமைக் காரியாலயத்தில் கைச்சாத்திடப்பட்டது.




மக்கள் வங்கியின் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளர் (கொடுப்பனவுகள் மற்றும் டிஜிட்டல்) கே.பீ. ராஜபக்ஷ மற்றும் அட்டைகள் பிரிவுத் தலைவர் ஜயனாத் டயஸ், LankaClear இன் பிரதி பொது முகாமையாளர் - நிதிப்பிரிவு – ரசிக கலப்பத்தி மற்றும் முகாமையாளர் - வணிக அபிவிருத்தி – சஷிகா கௌஷல்யா மற்றும் இலங்கைக்கான JCB International இன் ஆலோசகர் - லக்ஷ்மன் லியனகே ஆகியோரும் இவ்வொப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

LankaPay National Card Scheme எனும் இத்திட்டம் சர்வதேச தரத்தை கடைப்பிடிக்கும் இலங்கையின் உள்நாட்டு அட்டை திட்டமாகும். இத்திட்டமானது மத்திய வங்கியின் வழிகாட்டுதல் மற்றும் அங்கிகாரத்தின் கீழ் JCB International உடன் இணைந்து அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், ஜப்பானை தலைமையிடமாகக் கொண்ட ஆறு முன்னணி சர்வதேச அட்டைத் திட்டங்களில் ஒன்றாகவும் இது விளங்குகிறது.

மக்கள் வங்கியானது பிரீமியம் உரிமம் பெற்ற வணிக வங்கியாகவும், நாடளாவிய ரீதியில் 741 கிளைகளையும் மற்றும் சேவை நிலையங்களையும் உள்ளடக்கிய மிகப் பெரிய வங்கியாகவும் தடம் பதித்துள்ளது. மேலும், நாட்டில் 14 மில்லியனுக்கும் அதிகமான மிகப்பெரிய வாடிக்கையாளர் தளத்தையும் கொண்டுள்ளது. 1962ஆம் ஆண்டு மக்கள் வங்கிச் சட்டம் இல. 29 இன் கீழ் நிறுவப்பட்ட வங்கியானது Fitch Ratings Lanka Ltd இனால் வழங்கப்பட்ட "AA - (lka/ Stable)" என்ற தேசிய நீண்ட கால மதிப்பீட்டை தம்மகத்தே தக்கவைத்துக் கொண்டுள்ளது.

திகதி 01.01.2022
சனிக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4634
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 10,009,200.00
ஆங்கில எழுத்து: G
வெற்றி இலக்கங்கள்: 0 2 4 6 0 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 17,060,236.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் : 2929
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,007,660.00
ஆங்கில எழுத்து: A
வெற்றி இலக்கங்கள்: 08 50 66 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 63,099,868.40

Mega POWER மெகா பவர் 10
சீட்டிழுப்பு இலக்கம் 982
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,737,420.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 164,482,858.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து: D
சுப்பர் இலக்கம்: 26
வெற்றி இலக்கங்கள்: 22 46 58 60

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 664
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,959,520.00
ஆங்கில எழுத்து: I
வெற்றி இலக்கங்கள்: 19 61 68 77
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 91,021,745.60

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 1192
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,840,580.00
வெற்றி இலக்கம்: மகரம்
வெற்றி இலக்கங்கள்: 4 3 2 5 0 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 11,467,875.60

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு இலக்கம் :1654
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,196,900.00
சுப்பர் இலக்கம்: 01
வெற்றி இலக்கங்கள்: 01 06 52 61
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 2,327,720.40

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த ரூ. 40 இலட்சம் மதிப்புள்ள சுறா இறகு, கடல் அட்டை, மஞ்சள் பறிமுதல்





(மன்னார் நகர் நிருபர்)

இலங்கைக்குக் கடத்துவதற்காக மண்டபம் அருகே வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுறா இறகு, கடல் அட்டைகள் மற்றும் மஞ்சள் கட்டி மூடைகள் உள்ளிட்ட சுமார் 40 இலட்சம் ரூபா மதிப்பிலான பொருட்களை பொலிஸார் நேற்று முன்தினம் (01) இரவு பறிமுதல் செய்துள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் அருகே வேதாளை கடற்கரையிலிருந்து இலங்கைக்கு கடல் அட்டை, சுறா இறகு , மஞ்சள் உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்படவிருப்பதாக கியூ பிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, வேதாளை கடற்கரைப் பகுதியில் கியூ பிரிவு, மண்டபம் பொலிஸார் மற்றும் மண்டபம் வனத்துறையினர் இணைந்து அதிரடி சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதன்போது வேதாளை தெற்கு தெருவில் சதாம் என்பவருக்கு சொந்தமான வீட்டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 34 மூடைகளில் 1,700 கிலோ மஞ்சள், 13 மூடைகளில் 400 கிலோ சுறா இறகு, பதப்படுத்திய கடல் அட்டை 100 கிலோ ஆகிய பொருட்களை அவர்கள் பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக சதாமை பொலிஸார் தேடி வருகின்றனர்.

சுமார் 40 இலட்சம் ரூபா மதிப்புள்ள இப்பொருட்களை வேதாளை கடற்பகுதியில் இருந்து மர்மப்படகு மூலம் இலங்கைக்கு நேற்று முன்தினம் (01) இரவு நடத்த திட்டமிடப்பட்டிருந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளதாக கியூ பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மன்னார் மாவட்டத்தில் வருடத்தின் முதலாவது கொரோனா மரணம் பதிவு



(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் (01) கொரோனா மரணமொன்று பதிவாகியுள்ள நிலையில், மன்னார் மாவட்டத்தில் தற்போது வரை 35 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (01) இவ்வருடத்தின் முதலாவது கொரோனா தொற்று மரணம் பதிவாகியுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 70 வயதுடைய முதியவர் ஒருவர் கடந்த 30 ஆம் திகதி மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின்போது கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டது. இந்த நிலையில் அவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொரோனா தொற்றின் காரணமாக ஏற்பட்ட நிமோனியா காய்ச்சல் காரணமாக நேற்று முன்தினம் (01) சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.


இது இவ்வருடத்திற்கான முதலாவது கொரோனா மரணமாக நேற்று முன்தினம் (01) பதிவாகியுள்ளது. தற்போதுவரை மன்னார் மாவட்டத்தில் 35 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 3,183 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் கடந்த வருடம் 2021 ஆம் ஆண்டு 3,166 கொரோனா தொற்றுக்குள்ளானோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி பரந்தனில் இளைஞரொருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொடூரக்கொலை

## மற்றுமொருவர் காயம்





(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் நேற்று முன்தினம் (01) கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு இளைஞரொருவர் கொலை செய்யப்பட்டுள்ளதோடு, மற்றொரு இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.


இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு (01) சுமார் 7.30 மணியளவில் பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் பரந்தன் சந்திக்கருகில் இடம்பெற்றுள்ளது. இதன்போது பரந்தன் பகுதியைச் சேர்ந்த கார்த்திக் (வயது 24) என்பவர் உயிரிழந்துள்ளதோடு, அவரது அக்காவின் மகன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கார்த்திக்கை நான்கு பேர் கொண்ட குழுவினர் தலைக்கவசத்தினால் தாக்கிக் கொண்டிருந்தபோது, தான் அதனை தடுக்கச் சென்றதாகவும், இதன்போது தன்னை அவர்கள் கூரிய ஆயுதத்தால் வெட்டியதனால் தான் காயமடைந்தாகவும், பின்னர் அவர்கள் கார்த்திக்கை வெட்டிக்கொலை செய்ததாகவும் காயமடைந்து சிகிச்சைபெற்று வரும் இளைஞர் தெரிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு நேற்று (02) கிளிநொச்சி பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளதோடு, கிளிநொச்சி நீதவான் நீதிமன்றின் பதில் நீதவானும் சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# கசூரினா கடலில் நீராடச்சென்ற மாணவன் நீரில் மூழ்கிப் பலி



(யாழ். நிருபர்)

காரைநகர் கசூரினா கடலில் குளித்தபோது, அலையில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்போன மாணவன் சுமார் 4 மணிநேர தேடுதலின் பின்னர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். கோண்டாவில் தில்லையம்பதி பகுதியைச் சேர்ந்த யாழ். இந்துக் கல்லூரி மாணவனான யோகராசா யோகீசன் (வயது 18) எனும் மாணவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோண்டாவிலிலிருந்து, புத்தாண்டு தினமான கடந்த சனிக்கிழமை 20 பேர் காரைநகர் கசூரினா உல்லாசக் கடற்கரைக்குச் சென்றுள்ளனர். அவர்கள் குளித்துக்கொண்டிருந்த நிலையில், இருவர் அலையில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். அதனைக் கண்ணுற்ற ஏனையோர் அவலக்குரல் எழுப்பியதையடுத்து அங்கிருந்தவர்கள் ஒருவரை மீட்டனர்.

மற்றையவர் கடலில் அடித்துச் செல்லப்பட்ட நிலையில், அவரைத்தேடும் பணியில் கடற்படை மற்றும் உள்ளூர் மீனவர்கள் ஈடுபட்டிருந்தனர். அந்நிலையில், சுமார் 4 மணிநேர தேடுதலின் பின்னர் மாணவன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

# யாழில் அலைபேசி விற்பனை நிலையத்தை உடைத்து கைவரிசை

## வாழைச்சேனையில் மூவர் கைது

(யாழ் நிருபர்)

வாழைச்சேனையிலிருந்து யாழ்ப்பாணம் நகருக்கு வந்து அலைபேசி விற்பனை நிலையத்தை உடைத்துத் திருடியவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் திருடிய அலைபேசிகளை விற்பனைக்குக் கொடுத்த குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் – கே.கே.எஸ்.வீதியில் சத்திரச் சந்தியிலுள்ள அலைபேசி விற்பனை நிலையத்தில் கடந்த டிசம்பர் 22ஆம் திகதி இரவு திருட்டு சம்பவமொன்று இடம்பெற்றது.

அது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சம்பவம் தொடர்பில் விற்பனை நிலையத்தில் பெறப்பட்ட சி.சி.ரி.வி. பதிவுகளில் அடிப்படையில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் நில்ரோக் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் வாழைச்சேனை சென்று சந்தேக நபரைக் கைதுசெய்தனர். சந்தேக நபரிடமிருந்த திருடப்பட்ட அலைபேசிகளை விற்பனைசெய்து கொடுத்த இருவர் கைதுசெய்யப்பட்டதுடன், 6 அலைபேசிகளும் கைப்பற்றப்பட்டன.

சந்தேக நபர்கள் மூவரும் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

# கிளிநொச்சி கட்டடபொருள் விற்பனை நிலையத்தில் பாரிய தீ விபத்து

## கோடிக்கணக்கான பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசம்



(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி சேவியர் கடைச் சந்திக்கருகில் இயங்கிவந்த அமுத கடல் கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையத்தில் நேற்று (02) காலை 9.30 மணியளவில் இடம்பெற்ற பாரிய தீ விபத்தில் கோடிக்கணக்கான பெறுமதியான பொருட்கள் எரிந்து அழிந்துள்ளன.

மின்சார ஒழுக்கு காரணமாக குறித்த தீ ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதுடன், சம்பவ இடத்திற்கு கரைச்சி பிரதேச சபையின் தீயணைப்புப் பிரிவினர் சென்று தீயினை முற்பகல் 11 மணியளவில் முழுமையாகக் கட்டுப்படுத்தினார்கள். கிளிநொச்சியிலுள்ள பாரிய கட்டடப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் ஒன்றாக இயங்கிவந்த மேற்படி நிறுவனத்தில் ஏற்பட்ட தீயினால் கோடிக்கணக்கான பெறுமதியான கட்டடப் பொருட்கள் எரிந்து முற்றாகவும், பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன.

# வவுனியாவில் கப்ரக வாகனமும் முச்சக்கரவண்டியும் மோதி விபத்து

## ஒருவர் பலி





(வவுனியா நிருபர்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (01) இரவு 7.40 மணியளவில் கப்ரக வாகனமும், முச்சக்கரவண்டியும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியாவூடாக யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனமும், எதிர்த்திசையில் வந்த முச்சக்கரவண்டியும் தாண்டிக்குளம் இராணுவ சிற்றுண்டிச் சாலைக்கு அண்மித்த பகுதியில் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டியின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்துச் சம்பவத்தில் முச்சக்கரவண்டி முற்றுமுழுதாக சேதமடைந்துள்ளதுடன், கப்ரக வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. விபத்தில் முச்சக்கரவண்டி சாரதியான 32 வயது மதிக்கத்தக்க ரஜீவன் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்துப் பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# முல்லைத்தீவு மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் பலி

## ஒருவர் படுகாயம்

(கே.குமணன்)

முல்லைத்தீவு, கேப்பாபிலவு பகுதியில் நேற்று முன்தினம் (01) மாலை இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ரிப்பர் வாகனம் ஒன்றும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ரிப்பர் வாகனத்தில் மோதுண்ட மோட்டார் சைக்கிளில் மூன்று இளைஞர்கள் பயணித்துள்ளனர். இவர்களில் இரண்டுபேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதுடன், ஒருவர் ஆபத்தான நிலையில் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த விபத்து சம்பவத்தையடுத்து அப்பகுதியில் பதற்றநிலை தோன்றியுள்ளது. கிராம மக்கள் விபத்து இடம்பெற்ற வீதியில் ஒன்றுகூடி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இவ்விபத்து தொடர்பில் முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# எனது நம்பிக்கையைப் பெற்றவராக பிரதி முதல்வர் இருக்க வேண்டும்

## யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் தெரிவிப்பு

(யாழ். நிருபர்)

பிரதி முதல்வர் என்பவர் எனது நம்பிக்கையைப் பெற்றவராக இருக்கவேண்டும். அந்த நம்பிக்கையை கேள்விக்குட்படுத்துபவராக இருக்க முடியாதென யாழ். மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற ஊடக சந்திப்பில், யாழ். மாநகர சபை முன்பாக அண்மையில் சபை உறுப்பினர்கள் சிலரால் மேற்கொள்ளப்பட்ட போராட்டம் தொடர்பில் ஊடகவியலாளரொருவர் கேள்வியெழுப்பிய நிலையிலேயே யாழ். மாநகர முதல்வர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொய்யைக் கூறி போராட்டங்களை மேற்கொள்வது உண்மையில் கவலைக்குரியது. பிரதி முதல்வர் பற்றி நான் எதுவும் கூறவில்லை.

அண்மையில் நடந்த சபை அமர்வின்போது, நான் ஒருசில மணிநேரம் பங்குபற்றி விட்டு ஆரியகுள புனரமைப்பு நிகழ்வுக்கான அழைப்பிதழ்களை வழங்குவதற்காக வெளியேறிவிட்டேன். அந்த நேரத்தில் பிரதி முதல்வரை சபைக்குத் தலைமை தாங்குமாறு



கூறிவிட்டே சென்றேன்.

நிகழ்ச்சி நிரலின்படி சபையை நடத்துங்கள். நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை மேற்கொள்ள வேண்டாம் என்றே கூறியிருந்தேன். துரதிர்ஷ்டவசமாக நான் சென்ற பின்னர் என்னுடைய அனுமதியின்றி நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை அவர் கையாண்டிருந்தார்.

மாநகர சட்ட ஏற்பாட்டின்படி நிகழ்ச்சி நிரலில் இல்லாத விடயங்களை சபையில் பேச முடியாது. திடீரென ஒரு விடயத்தைப்பேச வேண்டுமாக இருந்தால் அதனை மாநகர செயலாளர் மற்றும் முதல்வரின் அனுமதிபெற்றே செய்யவேண்டும். ஆனால், அந்த நடைமுறைகள் எவையும் பின்பற்றப்படவில்லை. அதனால் நான் சம்பந்தப்படாத விடயங்களில் என்னுடைய கையொப்பத்தை இடமுடியாதென தெரிவித்தேன். இதனை நான் கூறியதால் எதிர்ப்புத் தெரிவித்தனர்.


ஆனால், அதே விடயத்தை இன்று சபையில் பேசுங்கள், நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது என்று உறுப்பினர்களிடம் நான் தெரிவித்தேன். ஆனால், அவர்கள் அதற்கு மறுப்பு தெரிவித்துவிட்டு சென்று விட்டனர்.

நான், மாநகர ஆணையாளர் மற்றும் எமது கட்சியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் இல்லாத நிலையைப் பயன்படுத்தி முன்னர் எடுத்த தீர்மானங்களைக் கூட இரத்து செய்வதற்கு முயற்சித்திருக்கிறார்கள். ஆகவே, இவ்வாறான சிறுபிள்ளைத்தனமான செயற்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது.

பிரதி முதல்வர் என்பவர் எனது நம்பிக்கையைப் பெற்றவராக இருக்கவேண்டும். அந்த நம்பிக்கையை கேள்விக்குட்படுத்துபவராக இருக்கமுடியாது என்றார்.

# இலங்கையில் சடுதியாக தீவிரமடைந்த ஒமிக்ரொன்

## பூஸ்டரை விரைவுபடுத்தக் கோரிக்கை



நாட்டில் ஒமிக்ரொன் திரிபு பரவல் திடீரென அதிகரித்துள்ள நிலையில், வேகமாக பூஸ்டர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவ நிபுணர்கள் பொதுமக்களை வலியுறுத்தியுள்ளனர்.

கொவிட்-19 பூஸ்டர் தடுப்பூசி தொற்று நோயிலிருந்து மிகச் சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது.

குறிப்பாக கடுமையாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் தேவையை தவிர்ப்பதில் பூஸ்டர் தடுப்பூசி பங்களிப்புச் செய்கிறது.

கொரோனா தொற்றால் பாதிக்கப்படுவோர் ஆபத்தான அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய தேவையை தவிர்ப்பதில் பூஸ்டர் தடுப்பூசி 88 வீதம் பயனுள்ளதாக இங்கிலாந்து சுகாதார பாதுகாப்பு அமைப்பின் புதிய தரவுகள் தெரிவிக்கின்றன.

முதல் கொவிட் தடுப்பூசி மருத்துவமனையில் சிகிச்சை தேவைப்படும் அபாயத்தை 52 வீதம் குறைக்கிறது. இரண்டாவது தடுப்பூசி 72 வீத பாதுகாப்பை அதிகரிக்கிறது. எனினும் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட 25 வாரங்களுக்குப் பின்னர் அதன் பாதுகாப்பு செயல்திறன் 52 வீதமாக குறைந்துள்ளமையும் ஆய்வில் தெரியவந்துள்ளது.

எனினும், 3ஆவது பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டாலும் கூட 88 வீதமானோருக்கு மருத்துவமனை அனுமதி தேவைப்படவில்லை எனவும் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றதாக ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூறு மருத்துவ பிரிவின் பணிப்பாளரும் வைத்திய நிபுணருமான சந்திம ஜீவந்தர நேற்று தெரிவித்தார். இதற்கிடையில் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வகத்தால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில் நாட்டில் கொரோனா தொற்று உறுதியானவர்களில் நூற்றுக்கு 12 சதவீதமானோருக்கு ஒமிக்ரொன் தொற்று இருக்கலாம் என்று எதிர்வு கூற முடியும் என சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ரஞ்சித் பட்டுவந்தாவ தெரிவித்துள்ளார்.

இது ஒமிக்ரொன் வேகமாக பரவத் தொடங்கியுள்ளது என்பதற்கான சிறந்த சான்றாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் முன்னெடுக்கப்பட்ட பரிசோதனைகளில் அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரொன் நோயாளர்களின் எண்ணிக்கை 48 ஆக அதிகரித்துள்ளது. வெளிநாடுகளில் இருந்து வருகை தந்தவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்பு உள்ளவர்களுக்கே ஒமிக்ரொன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறினார். ஒமிக்ரொன் தொற்றுக்குள்ளான 48 பேரில் 7 பேர் வெளிநாட்டு பிரஜைகளாவர். கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளினூடாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போதே ஒமிக்ரொன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் குறிப்பிட்டார். இவ்வாறான நிலையிலேயே ஆய்வு முடிவுகளின்படி இலங்கையில் கொரோனா தொற்றாளர்களில் 12 வீதமானவர்கள் ஒமிக்ரொன் தொற்றாளர்களாக இருப்பதற்கான சாத்தியங்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றுநோய் பாதிப்பைத் தடுக்க பூஸ்டர் தடுப்பூசிகளை விரைவாகப் பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# மரணித்த இளைஞனுக்கு நீதிகோரி ஏ9 வீதியை மறித்து போராட்டம்!

## நிலைமையை கட்டுப்படுத்தக் களமிறங்கிய விசேட அதிரடிப்படை

(வவுனியா நிருபர்)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் மரணித்த இளைஞனுக்கு நீதி கேட்டு ஏ9 வீதியை மறித்து போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மரணித்த முச்சக்கர வண்டி சாரதியான இளைஞனின் உறவினர்கள், நண்பர்கள் இணைந்து நேற்று முன்தினம்(01) இரவு 10.30 மணியளவில் குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

வவுனியா, ஏ9 வீதி தாண்டிக்குளத்தில் பிக்கப் ரக வாகனமும் முச்சக்கர வண்டியும் மோதியதில் வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த ரஜீபன் (வயது 32) என்ற இளைஞன் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்.

விபத்துக்குள்ளாகிய வாகனத்தை ஏற்ற விடாது வாகனத்தை முற்றுகையிட்டும், ஏ9 வீதியை மறித்தும் மரணித்த இளைஞரின் உறவினர்கள், நண்பர்கள் இரவு 10 மணிக்கு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் ஏ9 வீதியூடான போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் பாதிக்கப்பட்டது.

பொலிஸாரால் நிலைமையை கட்டுப்படுத்த முடியாமல்போக சம்பவ இடத்துக்கு விசேட அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டனர். ஏ9 வீதியை மறித்து போராடியவர்களை அகற்றிய விசேட அதிரடிப்படையினர் குழப்பம் விளைவித்ததாக பலரை கைது செய்து எச்சரிக்கையின் பின் அங்கிருந்து வெளியேற்றினர்.

அத்துடன், நிலைமையை கட்டுப்படுத்த இராணுவத்தினரும் அவ்விடத்துக்கு பிரசன்னமாகியிருந்தனர். மக்களது போராட்டத்தை கட்டுப்படுத்த பொலிஸார், விசேட அதிரடிப்படையினர், இராணுவத்தினர் இணைந்து நடவடிக்கை எடுத்ததையடுத்து அப் பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டதுடன், முறுகல் நிலை தீவிரமடைந்தது.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான திலீபன், மரணித்த இளைஞனுக்கு நீதி கிடைக்கும். சரியான முறையில் விசாரணை இடம்பெறும் என குறித்த இளைஞனின் தாயார் மற்றும் உறவினர்களுக்கு வாக்குறுதி அளித்ததுடன், போராட்டத்தில் ஈடுபட்ட உறவினர்களை போராட்டத்தை கைவிடுமாறு கோரினார்.



இரவு 11.50 மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டதையடுத்து விபத்துக்குள்ளாகிய வாகனம் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டது. விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பொலிஸ் உத்தியோகத்தர் யாழில் சடலமாக மீட்பு

(யாழ். நிருபர் )

தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கீரிமலை, கோவில் வீதியில் உள்ள வாடகை வீட்டில் நேற்று காலை அவர் சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். மட்டக்களப்பைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ரமணன் (வயது -47) என்ற பொலிஸ் உத்தியோகத்தரே உயிரிழந்துள்ளார்.

அவரது குடும்பத்தினர் புத்தாண்டை முன்னிட்டு மட்டக்களப்பு சென்றிருந்த நிலையில், பொலிஸ் உத்தியோகத்தர் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறினர். அவரது உயிரிழப்புக்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

# முந்தலில் கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(ரஸீன் ரஸ்மின்)

முந்தல் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பெருக்குவட்டான் மற்றும் கொத்தாந்தீவு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (01) இடம்பெற்றது.

முந்தல் பிரதேச செயலாளர் விஜானி வசந்திகாவின் ஆலோசனையில், குறித்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களின் பெயர் விபரங்கள் கிராம சேவகர் ஊடாக சேகரிக்கப்பட்டன.

இதன்போது பெருக்குவட்டான் கிராம சேவகர் ஆர்.பிரியந்தி மற்றும் மங்கள எளிய சமுர்த்தி வங்கி கள உதவியாளரும் பெருக்குவற்றான் கிராம சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருமான எஸ்.கீர்த்தி லதா உட்பட சிலர் கலந்துகொண்டு குறித்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

# பிரதிப் பொலிஸ்மா அதிபர் அரசரட்ணம் மறைவு பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளது

## தந்தை செல்வா நற்பணி மன்றம் அனுதாபம்

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபரும் நகைச்சுவை பேச்சாளருமான அரசரட்ணத்தின் மறைவு பெரும் துயரை ஏற்படுத்தியுள்ளதாக தந்தை செல்வா நற்பணி மன்றம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளது.

மன்றத்தின் செயலாளர் எஸ்.கே. தளையரட்ணம் விடுத்துள்ள செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் நகைச்சுவை பேச்சாளருமான கே. அரசரட்ணம் (70 வயது) கடந்த வாரம் புதன்கிழமை காலமானார்.

நீண்டகாலமாக பொலிஸ்துறையில் சிறந்த சேவையினை வழங்கி வந்த இவர், ஈழத்து தமிழ் செயற்பாட்டுத்துறையில் முக்கிய பங்கினையும் வகித்திருந்தார்.

பல மேடைகளில் தன்னுடைய நகைச்சுவை பேச்சால் அனைவரையும் தன்வசப்படுத்தி வந்த அரசரட்ணம், அனைவருடனும் அன்பாக பழகும் வழக்கத்தை தன்னுடைய வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்திருந்தார். அத்துடன், எந்நேரமும் புன்சிரிப்புடன் காட்சியளிக்கும் அவருடைய தோற்றம் அவருடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தை இலகுபடுத்தியிருந்தது என்பதை அவருடன் பழகியவர்கள் நன்கறிவர்.

ஒரு சிறந்த பண்பாளனை, சிறந்த மனித நேயம் கொண்ட மனிதனை, ஒழுக்கமுள்ள, கடமை தவறா அதிகாரியை இழந்து நிற்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் அவருடைய நெருங்கிப் பழகிய ஆயிரக்கணக்கான இதயங்களின் சார்பில் எங்களுடைய ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அவருடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

# நகர்ப்புற பாடசாலைகள், வைத்தியசாலைகளின் பிரவேச வீதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ அறிவிப்பு





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகளுக்கான அனைத்து பிரவேச வீதிகளையும் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என ஆளுந் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாடசாலை மற்றும் வைத்தியசாலை வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் முதலாவதாக குருநாகல் சேர் ஜோன் கொத்தலாவல பாடசாலைக்கு அருகில் நிர்மாணிக்கப்படவுள்ள வீதிக்கான அடிக்கல் நாட்டு விழாவில் நேற்று (02) கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய கிராமிய பாடசாலைகளுக்கான பிரவேச வீதிகள் மற்றும் கிராமிய வைத்தியசாலை பிரவேச வீதிகள் பற்றிய விபரங்களை துரிதமாக வழங்குமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யூ.ஆர்.பிரேமசிறிக்கு பணிப்புரை விடுத்தார்.

அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய பிரவேச வீதிகளை அடையாளம் காணுமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய அலுவலக அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்குமாறும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளுக்கான பிரவேச வீதிகளை அபிவிருத்தி செய்யுமாறு கோரி பொதுமக்களிடம் இருந்து கடிதங்கள் கிடைத்து வருவதாகவும் முன்னுரிமை அடிப்படையில் அந்த வீதிகளின் அபிவிருத்தி பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேலும் கூறியதாவது,

பால் பொங்க வைத்து பாற்சோறு மேசைக்கு செல்லாமல் பால் பொங்கவைத்து பணிகளை ஆரம்பிக்க வேண்டும். 2022 புதுவருடத்தில் சவால்களை வெற்றி கொள்ளும் வருடமாக கருதி சவால்களை வெல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அபிவிருத்திக்கு அதிகாரிகள் உதவ வேண்டும். தேவையான போது வேலை செய்ய வேண்டும்.

அரசியல்வாதிகளை மாத்திரம் குறை கூறுவதில் அர்த்தமில்லை. முதலில் கொள்கை ரீதியான முடிவு எடுத்து அதன் பின்னர் பணியாற்ற வேண்டும். அதனால் மக்கள் சார்பாக உங்களின் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எதிர்க்கட்சிகள் ஆட்சியை கவிழ்க்க மட்டுமே செயல்படுகின்றன.மக்கள் நலமாக இருந்தால் தான் ஆட்சியை பிடிக்க முடியும். அதிகாரத்துக்கு வருவது பற்றி சிந்திப்பதற்கு முன்னர் கொவிட் நெருக்கடியை துரிதமாக முடிவு காண்பது எப்படி என்று பார்க்க வேண்டும். அரசாங்கத்தை விமர்சிப்பதால் பயனில்லை. நாட்டைக் கட்டியெழுப்ப எதிர்க்கட்சிகளுக்குத் திட்டம் இருந்தால் 24 மணி நேரத்தில் முன்வைக்குமாறு சவால் விட்டேன். இதுவரை அந்த சவால் ஏற்கப்படவில்லை.

2022இல் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என எதிர்க்கட்சிகளும் கூறுகின்றன. எதிர்க்கட்சிக்கு கனவு காண உரிமை உண்டு. ஆனால் நனவாக்க முடியாத பகல் கனவுகளை எதிர்க்கட்சிகள் காண்கின்றன. இன்னும் பல ஆண்டுகள் நாம் தான் ஆட்சியில் இருப்போம். அதிகாரத்துக்கு வரத் துடிப்பதை விடுத்து பொறுப்புள்ள எதிரணியாக இருந்தால் கொவிட் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஒத்துழைக்க வேண்டும் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.







**இளம் பெண்கள் மாதர் அமைப்பினால் மூவினங்களையும் சேர்ந்த வறிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல், புலமைப்பரிசில் கொடுப்பனவு, தொழிற்பயிற்சி பெறும் மாணவிக்கு பண உதவி மற்றும் விசேட தேவையுடையவர்களுக்கு சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள் என்பன வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் தெமட்டகொட வை.எம்.எம்.ஏ. தலைமைக் காரியாலயத்தில் வை.டபிள்யூ. எம். ஏயின் தலைவி தேசமான்ய பவாஸா தாஹா தலைமையில் வழங்கி வைக்கப்பட்டது. விசேட அதிதியாக கனடாவின் இலங்கைக்கான முஸ்லிம் பெண்கள் அமைப்பின் தலைவி பைரூஸா காசிம் மற்றும் நஸீரா ஹூஸைன் பவுண்டேசனின் தலைவர் கலாநிதி காலித் பாறுக் மற்றும் அமைப்பின் அங்கத்தவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.**

(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# மீண்டும் உருவான சந்தர்ப்பத்தை தலைவர்கள் நழுவ விடக்கூடாது!

## சிவசக்தி ஆனந்தன் பகிரங்க வேண்டுகோள்



தமிழின விடுதலைக்கான போராட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்கள் எமக்கு ஏற்பட்டுள்ள போதும் அவை நழுவவிட்டமை தான் கடந்த கால வரலாறாக உள்ள நிலையில் தற்போது மீண்டுமொரு சந்தர்ப்பம் உருவாகியுள்ள நிலையில், அதனை நழுவ விட்டுவிடக்கூடாது என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் பகிரங்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடகங்களுக்கான அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசாங்கமானது தற்போது பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டுள்ளது. அதேநேரம், ஆட்சியாளர்களின் பங்காளிகளுடனும் அரசியல் ரீதியான முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. சிங்கள, பௌத்த கோட்பாட்டின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 69இலட்சம் தென்னிலங்கை மக்களே ஆட்சியாளர்களை திட்டித்தீர்க்கின்ற அளவுக்கு வெறுப்பை காறி உமிழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஆட்சியாளர்கள் இந்தியா, சீனா, அமெரிக்கா என்று தமக்காக திறக்கப்படும் என்ற நம்பிக்கையில் உள்ள அனைத்துக் கதவுகளையும் தட்ட ஆரம்பித்துள்ளார்கள். ஆனால் இலங்கையை மையப்படுத்தி ஏற்பட்டிருக்கும் பூகோளப்போட்டியின் பங்குதாரர்களான இந்தியா, சீனா, அமெரிக்கா ஆகியன தன்னலன்களை மையப்படுத்தி காய்களை நகர்த்த ஆரம்பித்துள்ளன.

இதில் அமெரிக்கா, இந்தியாவை முன்னிலைப்படுத்திய நகர்வினை இலங்கை விடயத்தில் கையாள்கின்றது. அதேபோன்றே ஏனைய மேற்குலக நாடுகளும் அவ்விதமான நகர்வினையே பின்பற்றுகின்றன. இந்நிலையில் இந்தியாவிடமிருந்து இலங்கை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான கடன்களை பெறுவதற்கு தயாராகியுள்ளது.

மறுபக்கத்தில் சீனாவிடத்திலும் கடன்களை, நன்கொடைகளை பெறுவதற்கு தயாராகி வருகின்றது.

இந்தப் பின்னணியில், எதிர்வரும் 8ஆம், 9ஆம் திகதிகளில் சீன வெளிவிவகாரங்களுக்கான அமைச்சர் வாங் யி இலங்கைக்கு வருகின்றார். அவர் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 65ஆவது ஆண்டு கொண்டாட்டத்தில் பங்கேற்பதையே பிரதான விடயமாக கொண்டிருக்கின்றார்.

அதேநேரம், நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஒன்பதாம் திகதி இந்தியாவுக்குச் செல்வதற்கு தயாராகி வருகின்றார். குஜராத்தில் நடைபெறும் மாநாட்டில் பங்கேற்பது காரணமாக கூறப்பட்டாலும், பிரதமர் மோடியைச் சந்திப்பது, இந்தியாவிடமிருந்து பெறக்கூடிய டொலர்களை விரைவுபடுத்துவது என்பன அந்தப் பயணத்தின் பின்னணிகளாக உள்ளன.

இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தில் தமிழ்த் தேசியப் பரப்பில் உள்ள கட்சிகளும் ஏனைய முஸ்லிம், மலையகக் கட்சிகளும் இணைந்து தமிழ்ப் பேசும் கட்சிகளாக பிரதமர் மோடிக்கு அனுப்பவுள்ள ஆவணத்தினை விரைவுபடுத்த வேண்டியுள்ளது.

குறித்த ஆவணத்தினை அனுப்புவதன் ஊடாக, இந்தியா இலங்கை மீதான தனது பிடியை உறுதிப்படுத்தும் அதேநேரம், அதன் பயனாக ஆகக்குறைந்தது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினையாவது முழுமையாக நடைமுறைப்படுத்த முடியும். அதிகாரப் பகிர்வுக்கான முதற்படியாக அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தினை பாதுகாப்பதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் இயலுமானதாக இருக்கும்.

ஆட்சியில் உள்ள தரப்பினர் புதிய அரசியலமைப்பினை முன்னகர்த்துவதற்குரிய நடவடிக்கைகளை கையிலெடுத்துள்ள நிலையில் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அகற்றப்படும் அபாயமுள்ளது.

ஆகவே, தமிழர்களின் அபிலாஷைகளை 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்றாலும் கூட முதலில் இருப்பதைப் பாதுகாக்க வேண்டியுள்ளது.

ஆகவே 34 ஆண்டுகளுக்கு முன்னதாக 1987இல் தமிழ்த் தலைவர்கள் விட்ட தவறினால் ஏற்பட்ட விளைவுகள் (உயிரிழப்பு, சொத்தளிவு) அந்தநிலை மீண்டும் இழைத்துவிடக் கூடாது. தமிழின விடுதலைப் போராட்டத்தில் சமர்களமாடிய தரப்புகளே முதலில் 13ஐ பாதுகாப்போம் என்ற நிலைப்பாட்டுக்கு வந்துள்ள நிலையில், அறவழியில் வந்த தலைமைகள் அதனை புறமொதுக்காது சிந்தித்துப் பார்க்க வேண்டியது கட்டாயமாகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள பூகோள, பிராந்திய அரசியல், இராஜதந்திர மூலோபாயச் சூழலை உணர்ந்து கொள்ளாது வாய்ப்பினை நழுவவிட்டால் தமிழினத்தின் எதிர்காலம் மேலும் மோசமடைவதற்கான வாய்ப்புகளே அதிகமுள்ளன.

எனவே குறிப்பறிந்து, தீர்க்கமான தீர்மானத்தினை எடுக்கும் அதேநேரம், தொடர் தாமதங்களை தவிர்த்து மிகமிக விரைவாக கூட்டு ஆவணத்தினை ஏகோபித்து பிரதமர் மோடிக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன் என்றுள்ளது.

# நிர்ணய விலைக்கு அதிகமாக இறைச்சி விற்பனை செய்தால் தெரியப்படுத்துக

## புத்தளம் நகர பிதா அறிவித்தல்



(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் மாட்டிறைச்சிக் கடைகளில் நிர்ணய விலையைவிட அதிகமாக மாட்டிறைச்சியை விற்பனை செய்தால் அதுதொடர்பில் தனக்கு தெரியப்படுத்துமாறு புத்தளம் நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக் பொதுமக்களை கேட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

புத்தளம் நகர பிதாவினால் கடந்த வருடம் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட மக்களுக்கான சலுகைகள் மற்றும் மானியங்கள் நேற்றுமுன்தினம் (1) முதல் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

அதனடிப்படையில், புத்தளம் நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் காணப்படும் மாட்டிறைச்சிக் கடை உரிமையாளர்கள் தனி மாட்டிறைச்சி நிர்ணய விலையான 1000 ரூபாவாகவும் கலவன் ஈரல் 1200 ரூபாவாகவும் விற்கப்பட வேண்டும்.

எவரேனும் நிர்ணயிக்கப்பட்ட விலைப்பட்டியலை மீறி அதிகரித்த விலையில் விற்பனை செய்வார்களாயின், அதுதொடர்பில் எனக்கோ அல்லது நகரசபை நிர்வாகத்தினருக்கோ தெரியப்படுத்தவும்.

இதேவேளை, நடப்பு வருடத்துக்கு வரவு - செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட பல சலுகைகள் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் புத்தளம் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக் மேலும் தெரிவித்தார்.

# புகைப்படம் எடுக்க முயன்றபோது விபரீதம்: நீர்வீழ்ச்சியில் விழுந்த தந்தை, மகன் பலி

தெனியாய பல்லேகம சத்மலை நீர்வீழ்ச்சியில் நீராட வந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெனியாய பொலிஸார் தெரிவித்துள்ளனர். காலி, கிந்தோட்டை, மஹா ஹபுகல பகுதியைச் சேர்ந்த மொஹமட் தாஹிர் மொஹமட் மன்சார் (வயது 48) மற்றும் அவரது மகன் மொஹமட் மன்சார் மொஹமட் மொஹீர் (வயது 16) ஆகியோர் உயிரிழந்துள்ளனர்.

மகனை புகைப்படம் எடுக்க தயாராகி கொண்டிருந்தபோது மகன் தவறி நீர்வீழ்ச்சியில் விழுந்ததாகவும், அவரை காப்பாற்ற தந்தை நீர்வீழ்ச்சியில் குதித்ததாகவும், அதன் பின்னர் இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தெனியாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சமூகத்துக்கான பணியை பல்கலை முஸ்லிம் மஜ்லிஸ் செய்ய வேண்டும்


## முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவிப்பு











(இக்பால் அலி)

முஸ்லிம் சமூகத்தின் பல சவால்களை வெற்றிக் கொள்ள ஆண்மார்கள் கட்டாயம் படித்து பல்கலைக்கழகம் செல்ல வேண்டும் என்று முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன் தெரிவித்தார்.

அனைத்து பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் ஒன்றியத்தின் பொதுக் கூட்டமும் சமூக செயற்பாட்டாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கொலன்னாவ நாஸ் மண்டபத்தில் இடம்பெற்றது.

அந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என். எம். அமீன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் விசேட அதிதிகளாகக் கலந்து கொண்ட சான்றோர் கௌரவிப்பில் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவர் சஹீட். எம். ரிஸ்மி, முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம்.அமீன், சூரா கவுன்சிலின் தலைவர் டி. கே. அசூர், ஜம்மிய்யதுல் உலமா சபையின் பொதுச் செயலாளர் அஷ்ஷெய்க் அர்கம் நூருல் அமீட் மற்றும் விசேட அதிதியாக இலங்கை வானொலி முஸ்லிம் சேவைப் பிரிவின் பணிப்பாளர் ரினோஷியா உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களுக்கான விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

உண்மையிலேயே நாங்கள் அண்மைக்காலமாக மிக நெருக்கடியான ஒரு கால கட்டத்திலேயே வாழ்கிறோம். பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் உங்களுடைய ஒவ்வொரு செயலும் அவதானிக்கப்படும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு நீங்கள் ஒவ்வொரு செயலையும் விமர்சனத்துக்கு உட்படுத்தப்படாமல் முஸ்லிம் பிள்ளைகள் இப்படித்தான் நடப்பார்களா என்ற கேள்வி எழுப்பப்படாத வகையில் உங்களுடைய பல்கலைக்கழக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப்பழக வேண்டும்.

நாங்கள் படிக்கும் சூழலைவிட இன்று எமது சமூகத்தை கேள்விக்குறியோடு பார்க்கின்ற ஓர் சூழலிலேயே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உங்களது இளமைப் பருவம், அருமையான சந்தர்ப்பம் இது. உலகைக்காண்பதற்கான சந்தர்ப்பம்.

இலட்சக்கணக்கானவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியாமல் உள்ள சூழ்நிலையில் நீங்கள் பல்கலைக்கழகம் சென்றிருக்கின்றீர்கள். இலங்கையில் 35ஆயிரம் பேருக்குத் தான் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு கிடைக்கிறது. சிறந்த பெறுபேறுகளைப் பெற்றவர்கள் தான் பல்கலைக்கழகம் நுழைய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அந்தவகையில், உண்மையிலேயே உங்களுக்கு மகத்தான பொறுப்பு இருக்கிறது. உங்கள் தனி வாழ்க்கையில் மட்டுமல்ல நீங்கள் இந்த சமூகத்தின் தலைவர்கள். எதிர்கால சமூகத்துக்கு நாங்கள் யாரை நம்புவது. எங்களுடைய தலைவர்களாக நீங்கள் தான் வர வேண்டியவர்கள். அதற்கான தகுதியைப் பெற்றுக் கொள்ளும் இடமாக பல்கலைக்கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உண்மையில் நாங்கள் ஆரம்பத்தில் பல்கலைக்கழகத்தில் படிக்கும்போது எங்களுக்கு உதவி செய்வதற்கு அமைப்புகள் இருக்கவில்லை. நீங்கள் செய்யவேண்டி அத்தனை வேலைகளுக்கும் பொது அமைப்புகள், தனவந்தர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் அவற்றை பயன்படுத்த வேண்டும்.

நான் விசேடமாக கேட்பது நீங்கள் பேசுகின்ற, எழுதுகின்ற, நீங்கள் சொல்லுகின்ற விடயங்களையும் மிகப் பெறுமதியாக நோக்குகின்றது. ஏதாவது ஓர் பணியை பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் செய்தாக வேண்டும். எமது சமூகத்தின் அதிகளவிலான பிரச்சினைகள் இருக்கின்றன. நீங்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் ஆலோசனையைப் பெற்று இதுதான் இந்த சமூகத்தினுடைய நிலைப்பாடு என்று முன் வைக்க வேண்டும்.

இன்று ஆகக் கூடுதலான சகோதரிகள் பல்கலைக்கழகம் செல்கின்றனர். முன்னர் ஒரு கிராமத்தில் பெண்களின் பல்கலைக்கழக நுழைவு 3 அல்லது 4 பேர் செல்வார்கள். இன்று ஒரு கிராமத்தில் பெண்கள் நூற்றுக்கணக்கில் செல்கின்றனர். நூற்றுக்கு 68 சதவிகிதமான பெண்கள் பல்கலைக்கழகம் செல்கின்றார்கள். அதிலே 72 சதவிகிதமான முஸ்லிம் பெண்களாக இருக்கின்றார்கள்.

அதில் மறுபக்கம் ஆண் சகோதரர்கள் எங்கே போய் விட்டார்கள். உண்மையிலேயே வேறு நாடுகளில் பல்கலைக்கழகங்களுக்குப் போய் படிக்கிறார்களா? ஏனைய இடங்களில் சிறு சிறு இடங்களில் தொழில்களை செய்து தங்களுடைய பொருளாதாரச் சுமையை நிறைவேற்றிக்கொண்டு இருக்கின்றார்களா? என்ற கேள்வி இருக்கிறது.

இந்தக் காலட்டத்தில் எல்லா விடயங்களுக்கும் பெண் சகோதரிகளால் ஒரு தலைமை தாங்க முடியாது. எங்களுடைய ஆண் சகோதரர்களிடத்தில் அறிவாற்றல் இல்லா விட்டால், நாங்கள் எப்படி எதிர்காலச் சவால்களை எதிர்கொள்வோம். எமது சமூகம் பல சவால்களை எதிர்நோக்கிக் கொண்டு இருக்கிறது. நீங்கள் ஒவ்வொருவரும் இந்த சவாலை வெற்றி கொள்ளக் கூடிய வகையில் கல்வித்துறையில் நாட்டம் கொள்வது கட்டாயமாகும்.

நீங்கள் படித்து விட்டு வெளியே வந்தால் உலகில் உங்களுக்கான பல நாடுகள் திறந்து இருக்கின்றன. இன்று சிங்களம் இல்லாமல் எம்மால் இந்த நாட்டில் வாழ முடியாது. இலகுவாக எங்களுடைய விடயங்களை வென்றெடுக்க வேண்டுமாயின், நாங்கள் சிங்களத்தையும் கட்டாயம் படிக்க வேண்டும். சர்வதேசத்தை வென்றெடுப்பதற்கு ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும். நாங்கள் அரபு மொழியையும் ஓரளவு பொருள் விளங்க கற்க வேண்டும் என்பது முக்கியம்.

எங்களை நாங்கள் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் தனித்து இருந்து விட வேண்டாம். மாற்று மத சகோதரர்களுடன் நல்ல உறவைப் பேணுங்கள். அது உங்களுக்கு மிகப் பிரயோசனமாக அமையும் என்று அவர் மேலும் தெரிவித்தார். நாட்டின் பல பாகங்களிலுள்ள பல்கலைக்கழக முஸ்லிம் மஜ்லிஸ் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# அதிகாலை விபத்தில் காதல் ஜோடி மரணம்







பண்டாரகம, கெஸ்பேவ வீதியில் வெல்மில்ல பிரதேசத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் காதல் ஜோடியொன்று உயிரிழந்துள்ளதாக பண்டாரகம பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரகம, வல்கம பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞனும், கண்டியைச் சேர்ந்த 19 வயதுடைய யுவதியுமே உயிரிழந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இருவரும் கெஸ்பேவயில் இருந்து பண்டாரகம நோக்கி சென்று கொண்டிருந்த போது வெல்மில்ல சந்தியை கடக்கும் போது மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி பாதுகாப்பு வேலியில் மோதி விபத்துக்குள்ளானது.







கல்கிசை படோவிட்ட ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய அபிவிருத்திப் பணிகளை மனோகணேசன் எம்.பி. பார்வையிட்டார். தமிழ்க் கூட்டணியின் தெஹிவளை, இரத்மலானை அமைப்பாளர்கள் நவாஸ், செல்வம், ஆலய அறங்காவலர் குழுவினர் சுரேஷ், கணேசன் ஆகியோரும் உடனிருந்தனர்.

# கல்முனை கடற்கரை பள்ளிவாசல் கொடியேற்ற விழா நாளை ஆரம்பம்



(பாறுக் ஷிஹான்)

கல்முனை கடற்கரைப் பள்ளிவாசல் நாஹூர் ஆண்டகையின் 200ஆவது கொடியேற்ற விழா நாளை 04ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

200ஆவது கொடியேற்ற விழாவினை இம்முறை சிறப்பாக நடத்துவதற்கு பள்ளிவாசல் நிர்வாகம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதற்கமைய கொரோனா சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொதுமக்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணனின் வழிகாட்டலில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி வழிகாட்டல்களை வழங்கியுள்ளார்.

இந்நிலையில் குறித்த பள்ளிவாசல் நிர்வாகத்தினர் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் புணானை கிழக்கை இணைப்பதற்கு எதிர்ப்பு

## பிரதேச மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்







(வாழைச்சேனை நிருபர்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன், வாகரை பிரதேச செயலாளர் பிரிவின் நிர்வாகத்துக்குட்பட்ட புணானை கிழக்கு கிராமசேவகர் பிரிவினை இணைப்பது தொடர்பான விடயத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, நேற்று (02) பிரதேச மக்கள் வீதியில் இறங்கி கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ், சிங்களம் என இரு தரப்பும் இணைந்து இவ் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

தாங்கள் வழக்கமாக கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலகத்தின் நிர்வாகத்தின் கீழ் தங்களது அரச நிர்வாக நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதாகவும் தற்போது கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்தின் நிர்வாக நடவடிக்கைக்குள் திடீரென தங்கள் கிராமம் உள்வாங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவது தங்களுக்கு கவலையளிப்பதாக தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். நேற்று (02) காலை மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திணைக்களத்தில் இருந்து காணி தொடர்பான எல்லை நிர்ணயக் குழு புணானை பிரதேசத்துக்கு சென்று எல்லை நிர்ணயம் தொடர்பான நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்விடயம் தொடர்பாக அறிந்த பிரதேச மக்கள் அவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் கவனத்துக்கு குறித்த விடயம் தொடர்பாக கொண்டு வந்தமையினையிட்டு அமைச்சர் சம்பவ இடத்துக்கு நேரடியாக சென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

இதன்போது மக்கள் தாங்கள் வாகரை பிரதேச செயலகத்துடன் இணைந்தே வாழப்போவதாகவும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகத்துடன் இணைந்து வாழ விருப்பமில்லை எனவும் இதனைத் தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர். குறித்த விடயம் தொடர்பாக அமைச்சர் தன்னால் இயன்ற உதவிகளை மேற்கொள்வதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் தெரிவிக்கும் காணி தொடர்பான புள்ளிவிபர நடவடிக்கைகளை தாம் ஏற்றுக்கொள்ளமுடியாது எனவும் வாகரை பிரதேச செயலகம், கிரான் பிரதேச செயலகம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வாழ்ந்து வருவதாகவும் மக்களுக்கிடையில் இன முரண்பாட்டை ஏற்படுத்தும் நடவடிக்கையில் எவரும் ஈடுபடக்கூடாது எனவும் அமைச்சர் இதன்போது கருத்து தெரிவித்தார்.

# திருக்கோவிலில் முதலை கடித்து உயிரிழந்த நிலையில் ஒருவர் மீட்பு

(கனகராசா சரவணன்)

திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள சாகாமம் தாலிபோட்டாற்றில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவரை நேற்று முன்தினம் சனிக்கிழமை (01) முதலை இழுத்துச்சென்று கடித்ததையடுத்து, உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக திருக்கோவில் பொலிஸார் தெரிவித்தனர்.

மண்டானை திருக்கோவில் 4ஆம் பிரிவைச் சேர்ந்த 55 வயதுடைய இராசநாயகம் விநாயகமூர்த்தி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான விசாரணைகளை திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காத்தான்குடியில் வீடுடைத்து 12 பவுண் தங்க நகைகள், ஒரு இலட்சம் ரூபா பணம் கொள்ளை

## இருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு காத்தான்குடி பகுதியில் வீடு உடைத்து 12 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்ற கொள்ளையர்கள், தங்க ஆபரணங்களை அக்கரைப்பற்று நகைக்கடையில் விற்பனைசெய்ய முற்பட்ட காத்தான்குடியை சேர்ந்த இரு கொள்ளையர்களை நேற்று (02) கைதுசெய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த டிசம்பர் 12ஆம் திகதி இரவு காத்தான்குடி மீன்பிடி இலாகா வீதியிலுள்ள வீடு ஒன்றின் மலசலக்கூட கூரையை உடைத்து உள்நுழைந்து அலுமாரியில் இருந்த 12 இலட்சத்து 90ஆயிரம் ரூபா பெறுமதியான 12 பவுண் தங்க ஆபரணங்கள் மற்றும் ஒரு இலட்சம் ரூபா பணத்தை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, குறித்த வீட்டின் உரிமையாளர் அவரது உறவினர் ஒருவரின் மகன் ஒருவன் போதைபொருளுக்கு அடிமையாகியிருந்தவர் மீது சந்தேகம் கொண்டு, அவர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டினையடுத்து அவர்கள் தங்கள் மகனுக்கும் இந்த கொள்ளைக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என தெரிவித்து வாக்குவாதத்தில் ஈடுபட்டு கடந்த வெள்ளிக்கிழமை பள்ளிவாசலில் சத்தியம் செய்வதாக பள்ளியில் சத்தியம் செய்தனர்.

இதனையடுத்து, தங்க ஆபரணங்களை கொள்ளை கொடுத்தவர் நேற்று முன்தினம் சனிக்கிழமை (01) பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவித்ததையடுத்து பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் வை.விஜயராஜா தலைமையிலான பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர்.

இந் நிலையில் அக்கரைப்பற்றில் திருமணம் முடித்துள்ள காத்தான்குடியைச் சேர்ந்த ஒருவர் அக்கரைப்பற்று நகைக்கடை ஒன்றில் டொலர் எனப்படும் தங்க ஆபரணம் ஒன்றை விற்பனை செய்ய சென்றுள்ள நிலையில், நகைக்கடை உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் ஒன்றை வழங்கியதையடுத்து, பொலிஸார் குறித்த தங்க ஆபரணத்தை விற்பனை செய்ய சென்றவரை மடக்கிப்பிடித்து கைதுசெய்து விசாரணை செய்ததில் காத்தான்குடியில் உள்ள வீடொன்றில் கொள்ளையிட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்டவருடன் கொள்ளையில் ஈடுபட்ட 25 வயதுடைய ஒருவரை காத்தான்குடியில் வைத்து கைதுசெய்ததையடுத்து கொள்ளையடிக்கப்பட்ட இருவரிடமிருந்து 6 பவுண் தங்க ஆபரணங்களை இதுவரை மீட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் கைதுசெய்யப்பட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. ஏறாவூரில் மூன்று பெண்களிடமிருந்து ஆறு பவுண் தங்கச் சங்கிலி கொள்ளை

## சம்பவத்தில் கைதுசெய்யப்பட்டவருக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள ஆறுமுகத்தான் குடியிருப்பு, கொம்மாந்துறை மற்றும் 10ஆம் கட்டை வீதியில் சென்ற பெண்களின் தங்க ஆபரணங்களை கொள்ளையிட்டுவந்த நிலையில், கைதுசெய்யப்பட்ட செங்கலடியைச் சேர்ந்த 29 வயதுடைய நபர் ஒருவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் நேற்று முன்தினம் சனிக்கிழமை (01) உத்தரவிட்டார்.

கடந்த டிசம்பர் மாதம் ஆறுமுகத்தான்குடியிருப்பு, 10ஆம் கட்டை வீதி, கொம்மாந்துறை பஸ்தரிப்பு நிலையம் ஆகிய பகுதிகளில் தனியாக வீதியில் சென்ற பெண்களை பின்தொடர்ந்து அவர்களின் கழுத்தில் இருந்த தலா ஒவ்வொன்றும் 2 பவுண் நிறை கொண்ட 6 பவுண் தங்கச் சங்கிலிகளை கழுத்தில் இருந்து அறுத்து கொள்ளையிட்டுச்சென்ற 3 சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை (31) செங்கலடியில் உள்ள நகைக்கடை ஒன்றில் அறுந்த தங்கச்சங்கிலி ஒன்றை விற்பதற்கு ஒருவர் சென்றிருந்தார். அப்போது அங்கு நின்ற இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த ஒருவர் அவர் மீது சந்தேகம் கொண்டு பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

இதனையடுத்து அங்கு பொலிஸார் சென்றதைக் கண்டு நகையை விற்கச்சென்றவர் தப்பியோடிய நிலையில், அவரை இராணுவ புலனாய்வாளர் துரத்திச்சென்று மடக்கி பிடித்ததையடுத்து பொலிஸார் கைதுசெய்தனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர் செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த 29 வயதுடையவர் எனவும் அவரை நேற்று முன்தினம் (01) ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# மூன்று இடங்களில் விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச்செல்ல முயன்ற முச்சக்கரவண்டி சாரதி கைது

(திருகோணமலை நிருபர்)

திருகோணமலையில் ஒரே முச்சக்கரவண்டி மூன்று இடங்களில் விபத்தை ஏற்படுத்தி தப்பிச்செல்ல முயற்சித்த வேளையில் மின்கம்பம் ஒன்றுடன் மோதியதில் அறுவர் படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நகர பகுதியில் நேற்று முன்தினம் (01) இரவு இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் தெரியவருவதாவது,

திருகோணமலை டொக்யார்ட் வீதியில் விளையாட்டு மைதானத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நடந்துசென்ற ஒருவருடன் மோதி அங்கிருந்து தப்பிச்சென்று மீண்டும் திருகோணமலை பிரதான பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவருடன் மோதியதில் முச்சக்கரவண்டி கவிழ்ந்துள்ளது. பின்னர் பொதுமக்களினால் முச்சக்கரவண்டி நிமிர்த்தப்பட்டு அதன் பிறகு அங்கிருந்து தப்பிச்சென்ற முச்சக்கரவண்டியின் சாரதி திருகோணமலை பிரதான வீதியில் மின் கம்பம் ஒன்றுடன் மோதிய நிலையில் பொதுமக்களினால் மடக்கிப்பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இவ்விபத்தில் ஆறு பேர் படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ் விபத்தின்போது வீதியால் நடந்து சென்ற அன்புவலிபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 56வயதுடைய வயோதிபர் ஒருவர் காயமடைந்துள்ளதுடன் பிரதான பஸ் நிலையத்துக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் படுகாயமடைந்துள்ளதுடன், முச்சக்கரவண்டியின் சாரதியான பாலமுருகன் (24 வயது) என்பவரும் படுகாயமடைந்துள்ளார். இவ்வாறு விபத்துக்குள்ளானவர்கள் (06, 29, 26 மற்றும் 18 வயதுடையவர்கள் எனவும் இவ்வாறு படுகாயமடைந்த அறுவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்து தொடர்பில் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# பாலமீன்மடு பகுதியில் மதுபோதையில் தகராறு

## ஒருவர் காயம் - வீடொன்று தீக்கிரை




(கனகராசா சரவணன்)


மட்டக்களப்பு கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பாலமீன்மடு 50 வீட்டுத் திட்டத்தில் இரு குழுக்களுக்கிடையில் மதுபோதையில் ஏற்பட்ட சண்டையில் ஒருவர் படுகாயமடைந்ததுடன் வீடொன்று தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) அதிகாலையில் இடம்பெற்றுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியிலுள்ள மீன்பிடியில் ஈடுபட்டுவரும் இரு குழுவினரும் நேற்று முன்தினம் (01) ஒன்றாக மதுபானம் அருந்தியுள்ள நிலையில், ஏற்பட்ட வாய்த்தர்க்கம் சண்டையாக மாறியதையடுத்து, 119 பொலிஸ் அவசர சேவை இலக்கத்துக்கு கிடைத்த தகவலுக்கமைய பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்றதையடுத்து, இரு குழுவினரும் சமாதானமாகினர். இதில் காயமடைந்த ஒருவரை வைத்தியசாலையில் அனுமதித்ததுடன், இருகுழுக்களையும் பொலிஸார் சண்டை போடக்கூடாது என எச்சரித்துச் சென்றனர்.

இந்நிலையில், இந்த குழு ஒன்றுடன் தொடர்புபட்ட நாகநாதன் நவநீதனின் குடும்பத்தினர் பயத்தில் அருகிலுள்ள வீட்டில் நேற்று முன்தினம் இரவு சென்று தங்கியிருந்த நிலையில், அவரது வீட்டை நேற்று அதிகாலையில் இனம் தெரியாத ஒருவர் தீயிட்டுள்ளதையடுத்து வீடு முற்றாக எரிந்து சாம்பலாகியுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் வழமைக்கு திரும்பிய பொதுமக்கள் சேவை





(ஏ.எல்.எம்.ஷினாஸ், பி.எம்.எம்.ஏ.காதர், றாசிக் நபாயிஸ்)

மருதமுனை பிரதேச வைத்தியசாலையில் மீள பொது மக்களுக்கான சேவையை ஆரம்பிக்கும் நடவடிக்கை நேற்று முன்தினம் (01) உத்தியோகபூர்வமாக இடம்பெற்றது.

வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எல்.எம்.மிஹ்லார் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர்.எம்.தௌபீக் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வைத்தியசாலையை திறந்துவைத்தார்.

கடந்த 2020ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நாட்டில் ஏற்பட்ட கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை தீவிரமாக அதிகரித்ததை அடுத்து கல்முனைப் பிராந்தியத்தின் சில வைத்தியசாலைகள் கொரோனா நோயாளர்களை பராமரிக்கும் நிலையங்களாக மாற்றப்பட்டன.

மருதமுனை பிரதேச வைத்தியசாலையும் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் மத்திய நிலையமாக மாற்றப்பட்டது. குறித்த இடத்தில் இருந்த பிரதேச வைத்தியசாலை கிழக்கு பக்கமாக இருக்கின்ற சுகாதார பராமரிப்பு நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.

எனினும், தற்போது கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடைந்து சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் சேவைகளை மீள ஆரம்பித்து வைக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் குணசிங்கம் சுகுணன், பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி. அப்துல் வாஜித், கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாக்கத் அலி, கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ. ஆர். எம்.அஸ்மி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் வைத்திய பொறுப்பதிகாரிகள், வைத்தியசாலையின் அபிவிருத்தி குழுவினர், பொதுமக்கள், ஊர் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள் என பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# கந்தளாயில் சுயதொழிலுக்கான உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் "கிராமத்துக்கு ஒரு தொழில் முனைவோர்" வேலைத்திட்டத்தின் கீழ் சுயதொழிலுக்கான உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (01) மாலை நடைபெற்றது.

கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி தலைமையில் நடைபெற்ற அந்நிகழ்வு கந்தளாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்போது 25 தொழில் முனைவோர் குடும்பங்களுக்கு தலா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான சுயதொழில் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.



இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அபிவிருத்திக்குழுவின் தலைவருமான கபில அத்துகோரள மற்றும் கந்தளாய் பிரதேச செயலாளர் உபேக்சா குமாரி மற்றும் அதிகாரிகள், பயனாளிகள் என பலரும் கலந்துகொண்டார்கள்.

# 50 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சம்மாந்துறை உள்ளக வீதிகள் அபிவிருத்தி




(மாளிகைக்காடு, கல்முனை நிருபர்)

கிராமிய வீதி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதியொதுக்கீட்டில் புனரமைப்பு செய்யப்படவுள்ள சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட மல்கம்பிட்டி 02, மல்கம்பிட்டி 03 ஏ, மல்கம்பிட்டி 07, மல்கம்பிட்டி 09, மதினாஉம்மா சந்தி ஆகிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் உத்தியோகபூர்வ அங்குரார்ப்பண வைபவம் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தருமான அஸ்பர் உதுமாலெப்பையினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுமார் 50 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் நடைபெறவுள்ள இந்த அபிவிருத்தித்திட்ட ஆரம்ப நிகழ்வில் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனீபா, சம்மாந்துறை பிரதேச சபை செயலாளர் எம்.ஏ.கிதுர் முஹம்மட், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர்களான திருமதி கே.குலமணி, கே.கோவிந்தசாமி, எஸ். நளீம் மற்றும் பொதுமக்கள் எனப்பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

2.5 கிலோமீற்றர் நீளமுள்ள வீதிகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ள இத்திட்டத்தை சம்மாந்துறை பிரதேசத்தில் செயற்படுத்த முழுமையாக ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோருக்கும் இந்த திட்டத்தை நிறைவேற்ற காரணமாக அமைந்த நீதியமைச்சரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான அலி சப்ரி, வீதி அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா உட்பட அதிகாரிகளுக்கு நன்றிகளை தெரிவித்து கொள்வதாக இங்கு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினரும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முக்கியஸ்தருமான அஸ்பர் உதுமாலெப்பை தெரிவித்தார்.

# 2021 இல் 132 டெங்கு நோயாளர்கள் அடையாளம்; தோப்பூர் - அல்லை நகர் வீடுகளில் பரிசோதனை





(மூதூர் நிருபர்)

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள தோப்பூர், அல்லைநகர் மேற்கு, அல்லைநகர் கிழக்கு பகுதிகளில் நேற்று முன்தினம் (01) வீடுகளில் டெங்கு பரிசோதனையும், சிரமதானமும் முன்னெடுக்கப்பட்டன.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹிஷ்மி முகைதீன் தலைமையில் நடைபெற்ற இச்செயற்பாட்டில் மூதூர் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பிரதேச சபையின் தோப்பூர் உப அலுவலகம், தோப்பூர் பிரதேச சமூக அமைப்புக்கள் உள்ளிட்டவை தங்களது பங்களிப்புகளை வழங்கியிருந்தன.

இதன்போது டெங்கு பரவும் வகையில் சுற்றுச் சூழலை வைத்திருந்தோருக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டதோடு, ஆலோசனைகளும் வழங்கப்பட்டிருந்தன.

மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 2021 ஆம் ஆண்டு 132 டெங்கு நோயாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். இதில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் மாத்திரம் 111 டெங்கு நோயாளர்கள் இனங்காணப் பட்டுள்ளதாகவும் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முகைதீன் தெரிவித்தார்.

தற்போது மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் டெங்கு நோயாளர்கள் அதிகளவில் இனங்காணப்படுவதால் பொதுமக்கள் தங்களது வீட்டு சூழலை டெங்குநோய் பரவாத வகையில் துப்புரவுசெய்து வைத்துக்கொள்ளுமாறும் அவர் பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

# முதுநிலை ஊடகர் பாக்கியராசாவின் வளம்மிகு மண்டூர் நூல் வெளியீடு



(மட்டக்களப்பு நிருபர்)

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வெளியீடான முதுநிலை ஊடகவியலாளர் இ.பாக்கியராசாவின் வளம்மிகு மண்டூர் நூல் அரங்கேற்றம் ஞாயிற்றுக்கிழமை (02) மட்டக்களப்பு கல்லடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக மண்டபத்தில் இடம்பெற்றது.

மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் செ.யோகராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா ஆன்மீக அதிதியாக கலந்துகொண்டு சிறப்பித்ததுடன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய நிபுணர் வே.விவேகானந்தராசா பிரதம விருந்தினராகவும், போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் செல்வி இ.இராகுலநாயகி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டிருந்தனர்.

மேலும், இந்நிகழ்வில் வைத்தியர்கள், எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலதரப்பட்டோர் கலந்துகொண்டிருந்தனர்.

மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், அக வணக்கம், சுவாமியின் ஆசியுரை, மட்டக்களப்பு காந்திசேவா சங்க பொதுச்செயலாளர் கதிர் பாரதிதாசனின் வரவேற்புரை, கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இ.தேவஅதிரனின் வெளியீட்டுரை, கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.அ.நவரெத்தினம் அடிகளின் ஆய்வுரை, விருந்தினர்களின் உரை, நூலாசிரியரின் ஏற்புரை என்பன இடம்பெற்றன.

இதன்போது ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா நூலின் முதற்பிரதியை அவுஸ்திரேலிய வைத்திய கலாநிதி தி.சிவசீலனுக்கு வழங்கி நூலை வெளியிட்டு வைத்தார். இதன்போது கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தினரால், 50 வருடங்களுக்கு மேலாக மட்டு.விலிருந்து ஊடகப் பணியாற்றிவரும் சிரேஷ்ட ஊடகவியலாளர், எழுத்தாளர் இ.பாக்கியராசாவிற்கு வாழ்த்துப்பா வழங்கி, பொன்னாடை போர்த்தி, மலர் மாலை அணிவித்து கௌரவித்தனர்.

# இலுப்படிச்சேனை விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இலுப்படிச்சேனை வீதியில் இடம்பெற்ற விபத்தின்போது கரடியனாறு பிரதேசத்தைச் சேர்ந்த தேவராஜா நிதுசன் (வயது 19) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே பலியான சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை (31) மாலை இடம்பெற்றதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞரும், அவரின் நண்பரும் புத்தாண்டுக்கான புத்தாடைகளைக் கொள்வனவு செய்ய தமது வீட்டிலிருந்து செங்கலடிப் பிரதேசத்திலுள்ள வர்த்தக நிலையத்துக்கு தனது மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும்போது இலுப்படிச்சேனை வீதியில் மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டையிழந்து, வீதியில் அமைக்கப்பட்டிருந்த தடுப்புக் கல்லில் மோதியதில் சம்பவ இடத்திலேயே குறித்த இளைஞர் பலியானதாகவும், அவரது நண்பர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற பதில் நீதவான் எம்.யூ.என்.ஏ.எஸ்.முனாஸின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்திற்குச் சென்ற ஏறாவூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நசீர் சடலத்தைப் பார்வையிட்டதுடன், அதனை பிரேத பரிசோதனைக்குட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பாடசாலைகள் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக ஆரம்பம்

(கல்லடி நிருபர்)

நாட்டிலுள்ள அரசாங்கப் பாடசாலைகள் அனைத்தும் 2021 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணைக் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று (03) மீண்டும் ஆரம்பமாகின்றன.

இதற்கமைவாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மட்டக்களப்பு கல்வி வலயம், பட்டிருப்பு கல்வி வலயம், கல்குடா கல்வி வலயம், மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயம் மற்றும் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் ஆகியவற்றிலுள்ள பாடசாலைகளை துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்று, இன்று பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்விதம் ஆரம்பிக்கப்படும் பாடசாலைகளுக்கான 2021 ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை விடுமுறை 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08 ஆம் திகதி வழங்கப்படுமென கல்வியமைச்சு சுற்றறிக்கை வாயிலாக சகல பாடசாலை அதிபர்களுக்கும் அறிவித்துள்ளது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளிவாசலின் 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு



(மருதமுனை நிருபர்)

மூன்று வருடங்களுக்கொரு முறை நடைபெறும் மருதமுனை மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளிவாசலின் (பெரிய பள்ளிவாசல்) 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு பள்ளிவாசல் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இந்நிர்வாகத் தெரிவுகள் அனைத்தும் 103 மரைக்கார்மாரைக் கொண்டு இயங்கும் இப்பள்ளிவாசல் குடிவழி முறைமூலம் இடம்பெறுகின்றமை வழமையாகும்.

அதனடிப்படையில் 2022ஆம் ஆண்டுக்காக நடைபெற்ற நிர்வாகத் தெரிவில் 103 பேர்களிலிருந்து தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜ.எல்.எம்.மாஹிர் கபீர் ஜும்மா பள்ளிவாசலின் புதிய தலைவராகவும், ஓய்வுநிலை கல்முனை காணி மாவட்டப் பதிவாளர் முஸத்திக் ஜே.முஹம்மத் உப தலைவராகவும், சிரேஷ்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அல்-ஹாஜ் நியாஸ் எம். அப்பாஸ் பொதுச் செயலாளராகவும், வர்த்தகர் ஏ.எல்.எம்.சித்தீக் உப செயலாளராகவும், வர்த்தகர் அல்-ஹாஜ் எம்.ஜ.ஏ.ரஊப் பொருளாளராகவும் நிர்வாக உறுப்பினர்களாக 28 பேரும் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

# கேரள கஞ்சாவுடன் சம்பூரில் ஒருவர் கைது



(மூதூர் நிருபர்)

திருகோணமலை - சம்பூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அரபா நகர் பகுதியிலுள்ள சந்தியில் வைத்து கேரளா கஞ்சாவுடன் ஒருவரை சம்பூர் பொலிஸார் நேற்று முன்தினம் (01) மாலை கைதுசெய்துள்ளனர்.


இவரிடமிருந்து பொதியிடப்பட்ட நிலையில் காணப்பட்ட 130 கிராம் கேரள கஞ்சாவை சம்பூர் பொலிஸார் மீட்டுள்ளதுடன், குறித்த நபரையும் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் மூதூர் - பாலநகர் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபராவார்.

குறித்த நபர் கேரள கஞ்சாவுடன் வீதியில் நடமாடுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனையடுத்து இராணுவப் புலனாய்வாளர்கள் சம்பூர் பொலிஸாருக்கு தகவலை வழங்கியுள்ளனர். இதனையடுத்து விரைந்து சென்ற சம்பூர் பொலிஸார் சந்தேகநபரை கேரள கஞ்சாவுடன் கைதுசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரை சம்பூர் பொலிஸாரால் தடுத்து வைத்துள்ளதுடன், இவரை மூதூர் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளையும் அவர்கள் முன்னெடுத்துள்ளனர். சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் மட்டு. பொலிஸாருக்கு மொழிப் பயிற்சிகள்





(மட்டக்களப்பு நிருபர்)

பொலிஸ் உத்தியோகத்தர்களின் மொழி அறிவை மேம்படுத்தும் நோக்கில் சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ் மொழிப் பயிற்சியும், தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு சிங்கள மொழிப் பயிற்சியும் வழங்கும் நடவடிக்கைகள் மட்டக்களப்பில் நேற்று (02) ஆரம்பமாகின.

மட்டக்களப்பு பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் கல்லூரியின் பொறுப்பதிகாரி எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் இடம்பெற்ற பயிற்சிக்கான பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக் கொள்ளும் வைபவத்தில் பொலிஸ் பயிற்சிக் கல்லூரி உதவிப் பணிப்பாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.அப்துர் ரஹீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

ஆறு மாதங்களைக் கொண்ட இப்பயிற்சி நெறியில் நாடளாவிய ரீதியில் கடமை புரியும் 250 பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுள் சிங்கள, தமிழ், முஸ்லிம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்குகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் விபத்தில் பெண்ணொருவர் படுகாயம்




(பாறுக் ஷிஹான்)

முச்சக்கரவண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் பெண்ணொருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (01) இரவு அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெட்டு வாய்க்கால் காரைதீவு எல்லையில் இடம்பெற்றது.

இதன்போது அக்கரைபற்று - கல்முனை பிரதான வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் ஆகியவை ஒன்றுக்கொன்று மோதி விபத்துக்குள்ளாகின. இந்தச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

இவ்விபத்தானது கல்முனை நோக்கி பயணித்த முச்சக்கரவண்டியானது, அக்கரைப்பற்று பகுதியை நோக்கி வந்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியே இடம்பெற்றுள்ளதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் நிந்தவூர் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மண்டூரில் கஞ்சா கடத்த முற்பட்டவர் விசேட அதிரடிப்படையினரால் கைது



(பெரியநீலாவணை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் மத்திய முகாம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மண்டூர் பகுதியிலிருந்து இலுப்பைக்குளம் நோக்கி கஞ்சா கடத்திச்சென்றவர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் மாலை இலுப்பை குளம் சந்தியில் வைத்து கைதுசெய்யப்பட்டார்.

பெரியநீலாவணை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, குறித்த பகுதிக்கு விரைந்த அதிரடிப்படையினர் சூட்சுமமான முறையில் குறித்த நபருடன் உரையாடி, சிவில் உடையில் சென்று இவரைக் கைதுசெய்தனர்.

விற்பனைக்காக கொண்டுசெல்ல முற்பட்ட ஒரு கிலோ 200 கிராம் கஞ்சா இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இதற்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டுள்ளது. மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த 1993 ஆம் ஆண்டு பிறந்த குறித்த இளைஞன் நீண்டகாலமாக கஞ்சா கடத்திச்சென்று விற்பனையில் ஈடுபட்டு வரும் ஒருவர் எனப் படையினர் தெரிவிக்கின்றனர்.

அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.ஆர்.சேனாதீரவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட கட்டளை அதிகாரி டி.சி.வேவிட விதானவின் வழிகாட்டலில், பெரியநீலாவணை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி ஆர்.ஏ.சி.டி.ஏ ரத்நாயக்க, எஸ்.எம்.பி.பி.எம்.டயஸ் (ஐ.பி.) தலைமையிலான விசேட அதிரடிப்படையினர் இச்சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மேலதிக விசாரணைகளை அம்பாறை மத்திய முகாம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஹாபிஸ் நசீர் எம்.பியின் நிர்வாக பயங்கரவாதம் என்ற குற்றச்சாட்டுக்கு மட்டு. நிர்வாகசேவை சங்கம் கண்டனம்

(கனகராசா சரவணன்)

மட்டு. நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அகமட் மாவட்ட நிர்வாக பயங்கரவாதம் என ஆதாரமற்ற பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைக்கப்பட்ட கருத்தை வன்மையாக கண்டிப்பதாக மட்டக்களப்பு நிர்வாகசேவை சங்கத் தலைவரும் மேலதிக அரசாங்க அதிபருமான சுதர்ஷினி சிறிகாந்த் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ.மண்டபத்தில் மட்டக்களப்பு நிர்வாகசேவை சங்கம் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 29-12-2021 இல் தனியார் தொலைக்காட்சியொன்றில் நடைபெற்ற விவாதத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அகமட், மட்டக்களப்பு மாவட்ட நிர்வாக சேவைகள் உத்தியோத்தர்களின் பெயர்களை பகிரங்கமாகக் கூறி அவர்களது இடமாற்றம் தொடர்பாக விவாதித்துள்ளார்.

குறிப்பாக பொதுச்சேவை ஆணைக்குழுவின் பிரதேச நிர்வாகத்திற்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் பொறுப்பான பிரதேச செயலாளர்கள் மற்றும் மாவட்டத்தில் இருக்கின்ற நிர்வாகசேவையினரது இடமாற்றம் பற்றி மக்கள் பிரதிநிதி விவாதித்ததோடு குறித்த உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயர்களை நேரடியாக ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியில் காட்டி ஆதாரமற்ற முறையில் பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார்.



மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்வாக பயங்கரவாதம் இடம்பெறுகின்றது என்று கூறியதை வன்மையாகக் கண்டிப்பதோடு மாவட்டத்தில் மாவட்ட நிர்வாக கட்டமைப்பில் பல்வேறு உத்தியோகத்தர்கள் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். இவ்வாறான வார்த்தைப் பிரயோகம் அவர்களின் மனங்களை வேதனைப்படுத்தியுள்ளது.

அதேவேளை மாவட்ட அபிவிருத்தியில் அக்கறையோடு செயற்படுகின்ற உத்தியோகத்தர்களை மிகவும் மனக்கவலையடைந்துள்ளனர். எனவே, எதிர்காலத்தில் பொது விவாதத்தில் இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறக்கூடாது என்பதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் அகமட் இந்த மாவட்ட அரச பயங்கரவாதம் என்று கூறுயதை வன்மையாகக் கண்டிப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த ஊடக மாநாட்டில் நிர்வாகசேவை சங்க மட்டக்களப்பு கிளைச் செயலாளரும், மண்முனை வடக்கு பிரதேச செயலாளருமான வி.வாசுதேவன் மற்றும் பிரதேச செயலாளர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# மட்டு. மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு 85 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவிப்பு





எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் வறிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மாத்திரம் 85 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி எமது அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை (31) இடம்பெற்ற நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

சுபீட்சத்தின்பால் நாட்டைக் கட்டியெழுப்பும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு, சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறுபட்ட வாழ்வாதார உதவித் திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டம் பூராகவும் வழங்கப்பட்டுவரும் நிலையில், மண்முனை மேற்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மக்களுக்கான பல்வேறுபட்ட உதவித்திட்டங்களை வழங்கும் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பிரதம அதிதியாக பங்கேற்றிருந்ததுடன், உதவித்திட்டங்களையும் வழங்கிவைத்துள்ளார்.

இதன்போது தனிநபர் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் ஆடுகள் வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்ட 59 பயனாளிகளுள் இரண்டாம் கட்டமாக 30 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆடுகள் உள்ளிட்ட மருந்து வகைகள் 17 பயனாளிகளுக்கும், வீடுகளைத் திருத்தம் செய்வதற்காக தெரிவுசெய்யப்பட்ட 12 பயனாளிகளுக்கு 24 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலைகளும், மலசலகூட வசதியற்ற 18 பயனாளிகளுக்காக 1,260,000 ரூபா பெறுமதியான காசோலைகளும் இதன்போது இராஜாங்க அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டதுடன், மின் இணைப்பற்ற வறிய குடும்பங்களுக்கு மின் இணைப்பை பெற்றுக்கொள்வதற்காக 18 பயனாளிகளுக்கு 4,20,000 ரூபா பெறுமதியான காசோலைகளும், 3 மைதானங்களின் புனரமைப்பிற்காக 15 இலட்சத்து இருபதாயிரம் ரூபா பெறுமதியான காசோலைகளும் இதன்போது இராஜாங்க அமைச்சரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கடந்த தேர்தலில் ஆளும் தரப்பு சார்பில் போட்டியிட்ட நான் உட்பட எமது மாவட்டத்தில் இரண்டுபேரை எமது மக்கள் தேர்ந்தெடுத்து ஆளும் தரப்பு சார்பில் நாடாளுமன்றத்திற்கு அனுப்பியதன் பயனாலேயே இன்று எமது மக்களுக்காக இந்த அரசாங்கத்தின் ஊடாக பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை நாம் ஆற்றிவருகின்றோம், எதிர்காலத்திலும் வாழ்வாதார உதவித் திட்டங்கள் உள்ளிட்ட எமது மக்களுக்கு தேவையாகவுள்ள அனைத்து விதமான தேவைப்பாடுகளையும் பெற்றுக்கொடுப்பதற்காக முன்னின்று செயற்படுவோமென்றும், இந்த அரசாங்கம் ஒருபோதும் இல்லாதவாறு எதிர்வரும் ஆண்டில் வறிய மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக மாத்திரம் 85 ஆயிரம் மில்லியன் நிதியை ஒதுக்கியுள்ளதெனவும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் இதன்போது தெரிவித்துள்ளார்.

# அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் புதிய சத்திரசிகிச்சைக் கூடம் திறந்துவைப்பு





(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் வாய் முகத் தாடை சத்திரசிகிச்சை மற்றும் கெமரா தொழில்நுட்ப சத்திரசிகிச்சைக்காக தனியான சத்திரசிகிச்சைக் கூடமானது, வைத்திய அத்தியட்சகர் டொக்டர் அசாத் எம்.ஹனீபாவினால் நேற்று முன்தினம் (01) திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மயக்க மருந்து நிபுணர் டொக்டர் எம்.என்.என்.எம்.சஹீர், வாய் முகத் தாடை சத்திரசிகிச்சை நிபுணர் டொக்டர் விராஜ் ஜயசிங்க, பொது சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் றிப்ஷான் ஜமீல், மகப்பேற்று பெண் நோயியல் வைத்திய நிபுணர் டொக்டர் யுரேகா விக்ரமசிங்க, சிறுபிள்ளை நோய் மருத்துவ வைத்திய நிபுணர் டொக்டர் எஸ்.எம்.அஷ்ஹார் உட்பட வைத்தியர்கள், தாதியர்கள் சுகாதார உதவியாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விசேடமாக வைத்திய அத்தியட்சகர் டொக்டர் அசாத்தினால் சத்திரசிகிச்சைக் கூடத்திற்கு தேவையான வீடியோ லாரிங்கோஸ்கோப், சத்திரசிகிச்சையின்போது நோயாளியின் உடல் வெப்பநிலையைப் பேணும் வோமர் மற்றும் என்டஸ்கோப் பிரிவிற்கான இமேஜ் அச்சிடும் அமைப்பு என்பன ஏற்கனவே வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# கிழக்கில் 5000 தென்னைகளை நடும் திட்டம்



(மூதூர் நிருபர்)

கிழக்கு மாகாண பல்நோக்கு திணைக்கள செயலணியின் மாகாண பணிப்பாளரின் அனுசரணையின் கீழ் நேற்று முன்தினம் (01) சனிக்கிழமை தென்னை மற்றும் மாமரங்கள் நடும் நிகழ்வானது தோப்பூர் உப பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. புதிய ஆண்டைக் கொண்டாடும் வகையில், "பலனளிக்கும் மரங்களை நட்டு பசுமையான இயற்கையை உருவாக்குதல்" எனும் தலைப்பில், மூதூர் பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக்கின் தலைமையில் பல்நோக்கு அபிவிருத்தி செயலணி உத்தியோகத்தர் பி. பிரபாகரன் மற்றும் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களின் பங்களிப்புடன தோப்பூர் உப பிரதேச செயலகத்தில் மேற்படி நிகழ்வானது இடம்பெற்றது. இந்நிகழ்வில் தோப்பூர் உப பிரதேச செயலகத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுனர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் புதுவருட பூஜை வழிபாடுகளில் கலந்துகொண்ட மக்கள்





(வி.சுகிர்தகுமார்)


அம்பாறை மாவட்டத்தில் வாழும் மக்கள் நாடும், நாட்டு மக்களும் நலமுடன் வாழ பிரார்த்தனைகளில் ஈடுபட்டதுடன், புத்தாண்டை வரவேற்கும் விசேட பூஜை வழிபாடுகள் மற்றும் கொண்டாட்டங்களிலும் கலந்துகொண்டு மகிழ்ச்சியுடன் புத்தாண்டை வரவேற்றனர்.

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கமைய மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி புத்தாண்டு வழிபாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். அதிகமான தமிழ் மக்கள் நேற்று முன்தினம் (01) அதிகாலை புத்தாடை அணிந்து ஆலயங்களுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபட்டதுடன், பாரம்பரிய நிகழ்வுகளிலும் கலந்துகொண்டனர்.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜை வழிபாடுகளில் பக்தர்கள் கலந்துகொண்டு இறைவழிபாட்டில் ஈடுபட்டனர்.

இதன் பின்னர் ஆலயம் சென்ற அடியவர்கள் அனைவருக்கும் ஆலய பிரதமகுரு புதுவருட கைவிசேடத்தையும் வழங்கி வைத்தார். இதேநேரம் வீதிகள் தோறும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன், பொங்கல் பூஜை வழிபாடுகளையும் பொதுமக்கள் மேற்கொண்டனர்.

# மட்டக்களப்பு வாவியிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டம் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்பு வாவியிருந்து ஆண் ஒருவரின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு வாவியில் தோணியொன்றில் இருவர் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது தோணி கவிழ்ந்ததில் ஆற்றினுள் இருவரும் வீழ்ந்துள்ளனர். அதில் ஒருவர் தெய்வாதீனமாக உயிர் பிழைத்துள்ளார்.

எனினும், மற்றைய நபர் ஆற்றில் காணாமல் போயுள்ளார். பின்னர் அப்பகுதி மக்கள் இணைந்து ஆற்றினுள் தேடியுள்ள நிலையில், காணாமல்போனவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் களுவாஞ்சிக்குடி நாவலடி வீதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான 36 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதி கே.ஜீவராணியின் உத்தரவுக்கமைய சடலத்தைப் பார்வையிட்ட களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம், சடலத்தை பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தி, பிரேத பரிசோதனைக்குட்படுத்தும்படி மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். இந்நிலையில், சம்பவ இடத்திற்கு விரைந்த களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் 2022ஆம் ஆண்டுக்கான கடமைகள் ஆரம்பிப்பு





(மாளிகைக்காடு நிருபர்)

2022 ஆம் ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (01) சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் வைபவ ரீதியாக இடம்பெற்றது. இந்நிகழ்வு சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.கே.சனூஸ் தலைமையில் நடைபெற்றது.

இப்புதிய ஆண்டின் கடமைச் செயற்பாடுகளை வைபவ ரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வில் வைத்திய அதிகாரிகளான டொக்டர் ஜே.சிவசுப்பிரமணியம், டொக்டர் எம்.ஏ.கரீமா சனூஸ், டொக்டர் எஸ்.ஜே.ஜஹான், டொக்டர் ஏ.ஜே.எப்.பர்ஸானா, பல் சத்திர சிகிச்சை நிபுணர் டொக்டர் எம்.ஐ.எம்.நௌசாட், தாதிய மேற்பார்வை உத்தியோகத்தர் பி.எம்.நஸ்ருதீன், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.புஹாது உட்பட அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது தேசியக்கொடி ஏற்றி வைக்கப்பட்டதுடன், இராணுவ வீரர்கள் உள்ளிட்ட நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த அனைவரையும் நினைவுகூர்ந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், அரச சேவைக்கான உறுதிமொழி சத்திய பிரமாணமும் மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது மாவட்ட வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.கே.சனூஸ் கருத்து தெரிவிக்கையில்,

சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் 2022 ஆம் ஆண்டில் சமூகப் பொருளாதார எதிர்பார்ப்புகளை அடைந்து கொள்ளும் பொருட்டு ஒருமித்த எண்ணத்துடன் அனைத்து ஊழியர்களும் செயற்படல் வேண்டும். அரச வளங்களை வினைத்திறன் மிக்கதாக முகாமைத்துவம் செய்து நிகழ்கால மற்றும் எதிர்கால பரம்பரையினரின் நல்வாழ்வுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றும் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தை ஊழியர்கள் ஏற்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

சுபீட்சமான இலங்கையினுள் பயனுள்ள பிரஜைகளை, மகிழ்ச்சியான குடும்பங்களை, பண்பாடான ஒழுக்க ரீதியான சமுதாயத்தை உருவாக்குவதற்காக அரச சேவையின் மகத்தான பங்களிப்பை அர்ப்பணிப்புடன் வழங்கவேண்டியது அவசியம் எனக் கூறினார்.

# இராணுவப் பயிற்சி முகாமிலுள்ள அடுக்கு கட்டிலிருந்து தவறி வீழ்ந்த வீரர் காயம்

(பதுர்தீன் சியானா)

திருகோணமலை - தாவுல்வெவ இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சிபெற்று வந்த இராணுவ சிப்பாய் அடுக்கு கட்டிலில் இருந்து விழுந்து படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் (01) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு படுகாயமடைந்தவர் மாத்தறை - ஹக்மன பகுதியைச் சேர்ந்த எஸ்.எஸ்.மதுசங்க (23 வயது) என்று தெரியவந்துள்ளது.

குறித்த இராணுவ சிப்பாய் தாவுல்வெவ இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சிபெற்று வருகின்ற நிலையில், அடுக்கு கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தபோது கீழே மயக்கமுற்று விழுந்துள்ளதாகவும், தலையில் காயம் ஏற்பட்ட நிலையில், கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலையின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

குறித்த இராணுவ சிப்பாய் கடந்த மூன்று மாதங்களாக பயிற்சி பெற்று வந்த நிலையில், எதிர்வரும் 4 ஆம் திகதி பயிற்சி முடிவடையவுள்ளதாகவும் பயிற்சி முகாமிற்கு பொறுப்பான இராணுவ உயர் அதிகாரி குறிப்பிட்டார்.

# இந்திய செய்திகள்

# டெல்ட்டா வைரஸை ஒடுக்கி இந்தியாவில் ஒமிக்ரொன் ஆதிக்கம்

## மகாராஷ்டிரா - ராஜஸ்தானில் இருவர் உயிரிழப்பு; ஒரேநாளில் 309 பேர் தொற்று; இதுவரை 1,525பேர் பாதிப்பு

ஒமிக்ரொன் தொற்றால் மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தானில் தலா ஒருவர் பலியாகி இருக்கின்றனர். அத்தோடு இந்தியாவில் ஒரேநாளில் 309 பேருக்கு ஓமிக்ரொன் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவில் பரவத் தொடங்கிய ஒமிக்ரொன் தொற்று குறைந்த நாட்களிலேயே 117இற்கும் மேற்பட்ட உலக நாடுகளில் தீவிரமாகப் பரவி வருகின்றது. இந்தியாவிலும் ஒமிக்ரொன் பரவல் வேகமெடுத்துள்ளது. இந்த வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. இதுவரை 23 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் ஒமிக்ரொன் பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஒரேநாளில் புதிதாக 309 பேர் ஒமிக்ரொன் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை இந்தியா முழுவதும் 1,525 பேர் ஒமிக்ரொனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், மகாராஷ்டிரா மாநிலத்திற்கு நைஜீரியாவிலிருந்த வந்த 52 வயது நபர், ஒமிக்ரொன் தொற்றால் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார். அவரது மருத்துவ பரிசோதனை அறிக்கையில்



அவருக்கு ஒமிக்ரொன் பாதிப்பிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதேபோல், ராஜஸ்தான் மாநிலம், உதய்பூரில் ஒமிக்ரொன் பாதிப்பால் 2ஆவது உயிரிழப்பு பதிவாகியுள்ளது. 73 வயது முதியவருக்கு கடந்த 21ஆம் திகதி கொரோனா பரிசோதனையில் தொற்றில்லை என முடிவு வந்தது. ஆனால், 25ஆம் திகதி அவருக்கு ஒமிக்ரொன் பாதிப்பிருப்பது தெரியவந்தது.

இந்நிலையில், அவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். இந்தியாவில் பரவி வரும் ஒமிக்ரொன் வைரஸ் தொற்றால், தற்போதுதான் உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. ஓமிக்ரான் தொற்றால் அதிகப்படியாக மகாராஷ்டிராவில் 450 பேர், டில்லியில் 320 பேர், கேரளாவில் 109 மற்றும் குஜராத்தில் 97 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**மீண்டும் வேகம் எடுக்கும் கொரோனா**

நாடு முழுவதும் கொரோனா தொற்றினால் புதிதாக பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை 64 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் 16 ஆயிரத்தைக் கடந்துள்ளது. நேற்று இந்தியா முழுவதும் 27,553 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்படி இந்தியாவின் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 3.48 கோடியாக உயர்ந்துள்ளது. மேலும், புதிதாக 220 பேர் இறந்துள்ளனர். இதன்மூலம், மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 4.81 இலட்சமாக அதிகரித்துள்ளது.

**டெல்டாவை ஒடுக்கி ஓமிக்ரொன் ஆதிக்கம்**

இந்தியா மட்டுமின்றி உலக நாடுகள் அனைத்திலும் கடந்த ஆண்டு டெல்ட்டா வைரஸால் 2ஆவது அலை ஏற்பட்டது. இதில் பல இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். கோடிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டு மீண்டனர். இந்நிலையில், இந்தியாவில் டெல்ட்டா வைரஸுக்கு பதிலாக தற்போது ஓமிக்ரொன் பரவல் அதிகரிக்க தொடங்கியிருக்கிறது. அடுத்த சில வாரங்களில் டெல்ட்டாவை அடக்கி விட்டு ஓமிக்ரொன் ஆதிக்கம் செலுத்தும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## நாமக்கல் ஆஞ்சநேயருக்கு 1,00,008 வடைமாலை அலங்காரம்



அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு நாமக்கல் ஆஞ்சநேயருக்கு நேற்று அதிகாலை ஒரு இலட்சத்து 8 (1,00,008) வடைமாலை சார்த்தப்பட்டு அலங்காரம் நடைபெற்றது. பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சுவாமி தரிசனம் செய்தனர்.

இதனையடுத்து ஆஞ்சநேயருக்கு மாலையாக சார்த்தப்பட்ட 1,00,008 வடைகள் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டன. விழாவையொட்டி கோயில் வளாகம் முழுவதும் 2 தொன் மலர்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

## ஜம்மு-காஷ்மீர் வைஷ்ணவி தேவி கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 16 பேர் பலி; 20பேர் படுகாயம்



ஜம்முவின் கத்ரா பகுதியில் அமைந்துள்ள வைஷ்ணவி தேவி கோயிலில் தத்தாண்டு பூஜையின்போது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 16 பேர் உயிரிழந்துள்ளதுடன், 20 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

ஜம்முவின் கத்ரா பகுதியில் வைஷ்ணவி தேவி குகைக்கோயில் அமைந்துள்ளது. இந்தக் கோயிலுக்கு ஆண்டுதோறும் சுமார் 80 இலட்சம் பக்தர்கள் வருகை தருகின்றனர். திருப்பதி ஏழுமலையான் கோயிலுக்கு அடுத்து பக்தர்கள் அதிகம் கூடும் புனிததலமாக வைஷ்ணவி தேவி கோயில் விளங்குகிறது.



புத்தாண்டையொட்டி வைஷ்ணவி தேவி கோயிலில் நேற்று முன்தினம் அதிகாலையில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. அதிகாலை 2.30 மணியளவில் கோயில் கருவறைக்கு வெளியே 3ஆவது நுழைவுவாயிலில் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில் 16 பேர் உயிரிழந்தனர். அவர்கள் டில்லி, உத்தர பிரதேசம், ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. சுமார் 20இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். அவர்களில் பலரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்தவர்கள் கத்ராவில் செயற்படும் நாராயணா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்து குறித்து நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கையில்,

"பக்தர்களிடையே ஏற்பட்ட மோதல் காரணமாக கூட்ட நெரிசல் ஏற்பட்டது. புத்தாண்டு என்பதற்காக வழக்கத்துக்கு அதிகமாக பக்தர்களை அனுமதித்தது தவறு" என்றனர்.

## விபின் ராவத் ஹெலிகொப்டர் விபத்துக்குக் காரணம் என்ன?

### வெளியான அதிர்ச்சித் தகவல்



நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் கடந்த டிசம்பர் 8ஆம் திகதி இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில், இந்திய முப்படைத் தலைமைத் தளபதி பிபின் ராவத், அவரின் மனைவி மதுலிகா மற்றும் இராணுவ அதிகாரிகள், வீரர்கள் உட்பட 14 பேர் பேரும் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் குறித்து நடத்தப்பட்ட விசாரணை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. முப்படைத் தலைமை தளபதி பிபின் ராவத் சென்ற ஹெலிகொப்டர் விபத்து குறித்து ஏர் மார்ஷல் மன்வேந்திர சிங் தலைமையில் முப்படை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

ஜனவரியில் விமானப்படைத் தளபதியிடம் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன. இருப்பினும், இதுவரை ஹெலிகொப்டர் விபத்து விசாரணை அறிக்கை குறித்து விமானப்படை சார்பில் எவ்வித அதிகாரப்பூர்வ அறிவிப்பும் வெளியாகவில்லை. இந்த விபத்தானது மனிதத் தவறினாலோ அல்லது தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவோ ஏற்படவில்லை.

கண்ட்ரோல்ட் பிளைட் இன் டூ தேரையின் (சி.ஐ.எஃப்.டி.) காரணமாக, நிலப்பரப்பில் மோதி ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி இருக்கலாம் என விசாரணை அறிக்கையில் தெரியவந்துள்ளதாக கூறப்படுகிறது.

அதாவது, விமானி எந்தத் தவறும் செய்யவில்லை. அதேபோல், தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவும் விபத்து ஏற்படவில்லை. விபத்து நடந்த குன்னூர் பகுதியில் மோசமான வானிலை காரணமாக பார்வைத்திறன் குறைந்ததில் விபத்து நிகழ்ந்திருக்கலாம் என சொல்லப்படுகிறது.

உலகளவில் விமான விபத்துக்களுக்கு சி.ஐ.எஃப்.டி. முக்கிய காரணங்களில் ஒன்றாக உள்ளது. இறுதி அறிக்கையின் மூலம் விபத்து குறித்த விவரங்கள் வெளிச்சத்துக்கு வரும் என விமானப்படை அலுவலர்கள் தெரிவித்தனர்.

விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முன்னர், ஆய்வில் அனைத்து நெறிமுறைகளும் பின்பற்றப்பட்டனவா என்பதை உறுதிப்படுத்த, கண்டுபிடிப்புகள் சட்டபூர்வமாக சரிபார்க்கப்படும். விபத்து நடந்த உடனே ஹெலிகொப்டரின் கறுப்புப்பெட்டி மற்றும் "கொக்பிட் வொய்ஸ் ரெக்கோர்டர்" ஆகியவை கண்டெடுக்கப்பட்டு ஆய்வுசெய்யப்பட்டுள்ளன.

**ஹெலிகொப்டர் விபத்தால் மாற்றங்கள்**

ஜனாதிபதி, துணை ஜனாதிபதி, பிரதமர், உள்துறை அமைச்சர் ஆகியோரின் பாதுகாப்பு விபரங்கள் அடங்கிய ஒரு புத்தகம் உண்டு. இதற்கு 'ப்ளூ புக்' எனப்பெயர். இது மிகவும் இரகசியமான புத்தகமாகும். வி.வி.ஐ.பிக்களுக்கு பாதுகாப்பளிக்கும் அதிகாரிகள், இந்த புத்தகத்திலுள்ள விதிகளின்படி செயற்படுவர்.

இந்நிலையில் முப்படைத் தலைமை தளபதி பிபின் ராவத் குன்னூர் ஹெலிகொப்டர் விபத்தில் வீர மரணமடைந்தார். இது டில்லியில் பாதுகாப்பு விவகாரங்களைக் கவனிக்கும் சீனியர் அதிகாரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இந்த விபத்திற்குப் பின், வி.வி.ஐ.பிக்களின் பாதுகாப்பைக் கவனிக்கும் அனைத்துத்துறை அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து, சில முக்கிய மாற்றங்களை இந்த ப்ளூ புத்தகத்தில் செய்துள்ளனர். முக்கிய பதவியிலிருப்பவர்கள் ஹெலிகொப்டர் பயணத்தை அதிகளவில் மேற்கொள்ளக் கூடாது. ஹெலிகொப்டர் பயணத்தைத் தவிர்க்க வேண்டும். எந்தவொரு நிகழ்ச்சியும் விமான நிலையங்களுக்கு அருகிலேயே இருப்பது நல்லது என, புதிய விதிகள் இந்த புத்தகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், ஒன்றுக்கும் மேற்பட்ட சீனியர் அதிகாரிகள் ஒன்றாகப் பயணம் செய்யக் கூடாது என்றும் பாதுகாப்பு அதிகாரிகள் சொல்கின்றனர். இதனால்தான் பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் எப்போதும் ஒன்றாக, ஒரே விமானத்தில் பயணம் செய்வதில்லை என்பதை அதிகாரிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## முள் படுக்கையில் அமர்ந்து அருள்வாக்கு கூறும் பெண்



சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே கோயில் திருவிழாவில் பெண் சாமியார் ஒருவர் முள் படுக்கையில் அமர்ந்து அருள்வாக்கு கூறி ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளார்.

லாடனேந்தல் கிராமத்திலுள்ள பூங்காவனம் முத்துமாரி அம்மன் கோவிலில், 45 ஆவது மண்டல பூஜை மற்றும் 108 சங்காபிஷேகம் நடைபெற்றது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியாக நாகராணி அம்மையார் என்ற பெண் சாமியார், முள் படுக்கையில் ஏறி ஆடி பக்தர்களுக்கு அருள்வாக்கு கூறினார்.

## கிடா + சேவல் = மெகா கறிவிருந்து; ஆண்களுக்கு மட்டுமே அனுமதி



பொதுவாக திருவிழா என்றாலே மக்களுக்குக் கொண்டாட்டம்தான். அதுவும் கிராமப்புறங்களில் நடக்கும் கோயில் திருவிழாக்கள் களைகட்டும். ஆணும், பெண்ணும் கலந்துகொண்டு சிறப்பிக்கும் திருவிழாக்கள் எப்போதும் சிறப்புத்தான்.

ஆனால், பெண்கள் இல்லாமல் ஆண்கள் மட்டுமே கலந்துகொள்ளும் திருவிழாக்கள் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இப்படியொரு திருவிழா தமிழகத்தில் வருடம்தோறும் நடந்து வருகிறது.

மதுரை மாவட்டம், திருமங்கலம் கரடிக்கல் ஊராட்சிக்குட்பட்ட அனுப்பபட்டி கிராமத்தில் 250 ஆண்டுகள் பழைமை வாய்ந்த கரும்பாறை முத்தையா திருக்கோயிலில் ஆண்கள் மட்டுமே கலந்துகொள்ளும் அசைவத் திருவிழா நடைபெற்றது. இக்கோவிலில் பல ஆண்டுகளாக மார்கழி மாதம் ஆண்கள் மட்டுமே பங்கேற்கும் திருவிழா பாரம்பரியமாக நடந்து வருகிறது.

இத்திருவிழாவில் பிறந்த பெண் குழந்தை முதல் வயதான மூதாட்டி வரையிலான பெண்கள் பங்கேற்க அனுமதி கிடையாது. இந்த ஆண்டு கரும்பாறை முத்தையா கோயில் திருவிழா நேற்றுக் காலை நடைபெற்றது. பொங்கல் வைத்து வழிபாட்டை முடித்த பின்னர் மெகா அசைவ உணவுத் திருவிழா தொடங்கியது. இதற்காக 60இற்கும் மேற்பட்ட கிடாக்கள் பலியிடப்பட்டு உணவு சமைக்கப்பட்டன. இதேபோல் 40இற்கும் மேற்பட்ட சேவல்களும் வெட்டப்பட்டு சமைக்கப்பட்டன.

50இற்கும் மேற்பட்ட மூடை கொண்ட அரிசியில் சாதம் வடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து விருந்து தயாரானது. அங்கு கூடியிருந்த சுமார் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆண்களுக்கு இலை போட்டு ஆட்டுக்கறியும், சேவல் குழம்பும்,சோறும் பரிமாறப்பட்டது. மெகா கறிவிருந்தில் திருமங்கலம், கரடிக்கல், மாவிலிபட்டி, செக்கானூரணி, சோழவந்தான் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆண்கள் கலந்து கொண்டனர். அவர்கள் அனைவரும் வயிறார உணவுண்டனர். ஆண்கள் சாப்பிட்ட பின்னர் இலையை எடுக்காமல் அப்படியே விட்டுச் சென்றனர். இது அங்கு கடைப்பிடிக்கப்படும் பாரம்பரிய வழக்கமாகும். ஆண்கள் சாப்பிடும் இலை காயும் வரை பெண்கள் எவரும் இந்த கோயில் பக்கம் செல்வது கிடையாதாம்.

## ஆந்திர கடற்கரையில் வேர்க்கடலை வாங்கியதற்காக 12 ஆண்டுகளுக்குப் பின்னர் கடனை அடைத்த சிறுவன்



ஆந்திர கடற்கரையில் 25 ரூபாவுக்கு வேர்க்கடலை வாங்கிய கடனை 12 ஆண்டுகளுக்குப் பின்னர் வட்டியுடன் சேர்த்து ரூ.25 ஆயிரம் ரூபாவாக மீள செலுத்திய நெகிழ்ச்சி சம்பவம் காக்கிநாடாவில் இடம்பெற்றுள்ளது.

ஆந்திர மாநிலம் காக்கிநாடாவைச் சேர்ந்தவர் மோகன். இவர் கடந்த 2010ஆம் ஆண்டு, மகன் பிரவீண் மற்றும் குடும்பத்தினருடன் காக்கிநாடா கடற்கரைக்குச் சென்றார். அங்கு வேதசத்தைய்யா என்பவர் சைக்கிளில் வேர்க்கடலை விற்றுள்ளார்.

அப்போது சிறுவன் பிரவீண், அவரிடம் ரூ.25இற்கு வேர்க்கடலை வாங்கினார். ஆனால், பிரவீணின் தந்தை மோகனிடம் பணம் இல்லையென்பதால் வேர்க்கடலை பொட்டலங்களை திருப்பியளித்தபோது, நாளைக்குப் பணம் கொடுங்கள் என்று கூறியுள்ளார் வேதசத்தையா. மறுநாள் மோகனும், பிரவீணும் கடற்கரைக்குச் சென்றபோது வேதசத்தைய்யாவைக் காணவில்லை.

அதன் பின்னர் மோகன் குடும்பத்துடன் அமெரிக்கா சென்றுவிட்டார். பின்னர் அவர் விடுமுறைக்கு காக்கிநாடா வந்தபோது, கடற்கரைக்கு சென்று வேதசத்தைய்யாவைத் தேடினார்.

இதுகுறித்து தனது உறவினரும், காக்கிநாடாவின் தற்போதைய எம்.எல்.ஏவுமான சந்திரசேகரிடம், எடுத்துக்கூறி அப்போது வேதசத்தையாவுடன் பிரவீண் எடுத்த புகைப்படத்தையும் அனுப்பினார். அந்தப் படத்தை அவரது உதவியாளர் சமூக வலைத்தளத்தில் முழு விவரங்களுடன் பதிவிட்டார்.

இதனைப் பார்த்த சிலர், வேதசத்தைய்யா இறந்துவிட்டார் என்று தகவல் தெரிவித்தனர். அதன் பின்னர், அவரது மனைவியை எம்.எல்.ஏ. வீட்டுக்கு வரவழைத்து, பிரவீண் வேர்க்கடலை கடனை திருப்பிச் செலுத்தினார். 12 ஆண்டுகளுக்கு முன்பு பெற்ற ரூ.25 கடனுக்கு, வட்டியுடன் சேர்த்து ரூ.25 ஆயிரத்தை அவர் வழங்கினார்.

# பெண்ணொருவரை துன்புறுத்துவது கடவுளை அவமதிப்பதற்கு சமம்

## போப் பிரான்சிஸ் தெரிவிப்பு



“ஒரு பெண்ணை துன்புறுத்துவது கடவுளை அவமதிப்பதற்கு சமம்” - இவ்வாறு போப் பிரான்சிஸ் தனது புத்தாண்டு உரையில் தெரிவித்துள்ளார்.

ரோம் நகரில் புனித பீட்டர்ஸ் தேவாலயத்தில் சனிக்கிழமை புத்தாண்டு சிறப்புப் பிரார்த்தனை இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், “தாய் தான் நமக்கு உயிர் கொடுக்கிறார். பெண் தான் இந்த உலகை இணைத்து வைத்திருக்கிறார். ஆகையால் நாம் அனைவரும் தாய்மார்களை மேம்படுத்தவும், பெண்களை பாதுகாக்கவும் இணைந்து செயல்படுவோம்.

ஒரு பெண்ணுக்கு எதிராக எவ்வளவு வன்முறையைத் தான் இந்த உலகம் கட்டவிழ்க்கும். ஒரு பெண்ணைக் காயப்படுத்துவது கடவுளை அவமதிப்பதற்கு சமம்” - இவ்வாறு போப் பிரான்சிஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் இத்தாலிய தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பேசிய போப் பிரான்சிஸ், பெண்கள் மீது வன்முறையைக் கடத்துபவர்கள் சாத்தான் போன்றவர்கள் என்றார்.

கொரோனா பெருந்தொற்று தொடங்கிய காலந்தொட்டு போப் பிரான்சிஸ் குடும்ப வன்முறை குறித்துப் பலமுறை பேசியிருக்கிறார். ஏனெனில், கொரோனா பெருந்தொற்று தொடங்கியதிலிருந்து உலகம் முழுவதும் குடும்ப வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலக செய்திகள்

### அமீரகத்தில் புத்தாண்டு கொண்டாட்டம்

## கின்னஸில் இடம்பிடித்த ரஸ் அல் - கைமாவின் வாணவேடிக்கை ட்ரோன் காட்சிகள்



அமீரகத்தில் புத்தாண்டு கொண்டாட்டம் கோலாகலமாக நடந்தது. இதில் அபுதாபி, ரஸ் அல் - கைமா(ras al - khaimah) பகுதிகளில் நடைபெற்ற பிரமாண்ட வாணவேடிக்கை, ட்ரோன் காட்சி நிகழ்ச்சிகளுக்கு 5 கின்னஸ் சாதனை விருதுகள் கிடைத்தன.

அமீரகத்தில் புத்தாண்டு கொண்டாட்டங்கள் பிரமாண்ட வாணவேடிக்கை நிகழ்ச்சிகளுடன் நடைபெறுவது வாடிக்கையாகவுள்ளது. உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் அனைவரும் ரசிக்கும் விதத்தில் வண்ணமயமாக இந்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

அதன்படி நேற்றுமுன்தினம் டுபாய் புர்ஜ் கலீபா பகுதியில் பிரமாண்டமான வாணவேடிக்கை நிகழ்ச்சி நடைபெற்றது. கட்டடம் முழுவதும் பல்வேறு வண்ணங்களில் நடைபெற்ற வாணவேடிக்கை பொதுமக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. அதேபோல் டுபாய் பிரேம், அய்ன் டுபாய், குளோபல் வில்லேஜ் மற்றும் எக்ஸ்போ 2020 பகுதிகளில் நடைபெற்ற பல்வேறு வாணவேடிக்கை நிகழ்ச்சிகளை பல்லாயிரக்கணக்கான மக்கள் பார்வையிட்டனர். சார்ஜாவில் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் நடைபெற்ற வாணவேடிக்கை நிகழ்ச்சிகளை குடும்பத்துடன் பொதுமக்கள் கண்டு ரசித்தனர்.

இதையடுத்து, அபுதாபியில் ஷேக் ஜாயித் திருவிழா வளாகத்தில் நடைபெற்ற கண்கவர் வாணவேடிக்கை மற்றும் டிரோன்கள் மூலம் வானில் நிகழ்த்தப்பட்ட கண்கவர் காட்சிகள் பார்வையாளர்களை பிரமிக்க வைத்தது. இதற்காக அந்த வளாகத்தில் 2,022 ட்ரோன்கள் (ஆளில்லா குட்டி விமானம்) பயன்படுத்தப்பட்டது.



வானில் பறந்து சென்ற அந்த ட்ரோன்கள் வரிசையாக அடுக்கப்பட்டு முன்னாள் அமீரக ஜனாதிபதி மறைந்த ஷேக் ஜாயித், தற்போதைய ஜனாதிபதி ஷேக் கலீபா பின் ஜாயித் அல் நஹ்யான் மற்றும் அபுதாபி பட்டத்து இளவரசர் ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் -நஹ்யான் ஆகியோரின் உருவப்படமாக ஒளிர்ந்து பிரமிக்க வைத்தது.

### 3 முந்தைய சாதனைகள் முறியடிப்பு

அதேபோல் ‘ஹெப்பி நியூ இயர் 2022 என ஆங்கிலத்தில் எழுதப்பட்டதுபோல் தோன்றி அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்து கூறப்பட்டது.

அபுதாபியின் அல் -வாத்பா பகுதியில் நடைபெற்ற கண்கவர் வாணவேடிக்கை நிகழ்ச்சி இடைவிடாமல் தொடர்ந்து 40 நிமிடங்களுக்கு நடத்தப்பட்டது. இதற்காக அந்த நிகழ்ச்சிக்கு அதிக அளவு வாணவேடிக்கை, அதிக நேரம் மற்றும் வடிவம் ஆகியவற்றில் 3 முந்தைய சாதனைகளை முறியடித்து 3 புதிய கின்னஸ் சாதனை விருதுகள் அறிவிக்கப்பட்டன.

### ராசல் கைமாவுக்கு 2 கின்னஸ் விருதுகள்





ஆங்கில புத்தாண்டையொட்டி, ராசல் கைமாவின் அல் -மர்ஜான் தீவு பகுதியில் இடைவிடாது 4.7 கி.மீ. தொலைவுக்கு 12 நிமிட நேர வாண வேடிக்கை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இதன் மூலம் நீண்ட நேரம் வாண வேடிக்கை செய்யப்பட்டதற்கான கின்னஸ் சாதனைக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து 3,463 அடி (1,055.8 மீற்றர்) உயரத்துக்கு 452 ட்ரோன்கள் வானில் மிக உயரமாக பறக்க விடப்பட்டு ஆங்கிலத்தில் ‘ஹேப்பி நியூ இயர்’ என எழுதப்பட்டது போன்ற காட்சி நடத்தப்பட்டது. இந்த உயரம் புர்ஜ் கலீபா கட்டிடத்தை விட 740 அடி கூடுதலாகும். மிக உயரமான இடத்தில் தொலைதூரத்திலிருந்து இயக்கப்பட்ட ட்ரோன் காட்சிக்கு கின்னஸ் சாதனை விருது வழங்கப்பட்டது.

### கொரோனா - டெல்ட்டா - ஒமிக்ரொன் - டெல்மிக்ரொனைத் தொடர்ந்து…

## கொரோனா + ப்ளூவென்சா = ‘ப்ளோரோனா’ இஸ்ரேலில் புதிய வைரஸ் பாதிப்பு கண்டுபிடிப்பு

- கர்ப்பிணி பெண்ணுக்கு இரட்டை வைரஸ் தொற்று
- 29கோடியை அண்மித்த உலக கொரோனா பாதிப்பு







இஸ்ரேலில் ‘ப்ளோரோனா’ என்ற புதிய வகை நோய் பாதிப்பு கண்டறியட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கொரோனா மற்றும் ப்ளூவென்சா ஆகிய இரண்டு வைரஸ்களின் தொற்று சேர்ந்து ‘ப்ளோரோனா’ என்ற புதிய வகை தொற்று ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேலின் பெட்டா டிக்வா நகர வைத்தியசாலையொன்றில் பிரசவத்துக்காக சேர்க்கப்பட்டிருந்த பெண்ணுக்கு இரட்டை வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

அப்பெண்ணுக்கு குளிர் காய்ச்சல் மற்றும் கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டோர் 3ஆவது டோஸ் எனப்படும் பூஸ்டர் டோஸ் போட்டுக்கொண்டுள்ளனர். 80 சதவீதத்துக்கும் அதிகமானோர் 2 டோஸ் செலுத்தியுள்ளனர். அங்கேயே இம்மாதிரியான புதுவிதமான தொற்றுகள் ஏற்படுவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இஸ்ரேலில் தொடர்ந்து கொரோனா பாதிப்பு அதிகரித்து வரும் நிலையில், அங்கு கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதுடன் 4ஆவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட பல நாடுகள் தங்கள் மக்களுக்கு 3ஆவது தடுப்பூசியாக பூஸ்டர் டோஸைச் செலுத்தி வருகின்றன. ஆனால், இஸ்ரேல் அரசு, தங்கள் மக்களில் மிகவும் பலவீனமானவர்களுக்கு 4ஆவது தடுப்பூசியையும் செலுத்தத் தொடங்கிவிட்டது.

உலகம் முழுவதும் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா வைரஸின் அடுத்தடுத்த உருமாற்றங்கள் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன.

சீனாவின் வூஹான் நகரில் கடந்த 2019ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் கண்டறியப்பட்ட கொவிட் -19 வைரஸ்முதல் அலையை ஏற்படுத்தியது என்றால் அதற்கு பின்னரான அல்பா, டெல்ட்டா அடுத்தடுத்து அலைகளை ஏற்படுத்தி இலட்சக்கணக்கான உயிர்களை பலியெடுத்தன.

இந்நிலையில் கடந்த நவம்பர் தென்னாபிரிக்காவில் உருமாற்றமடைந்த ஓமிக்ரொன் கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டபோது, அதைக் கண்டு உலக நாடுகள் அஞ்சின. ஓமிக்ரொன் அச்சமே இன்னும் முடியாத நிலையில், டெல்மிக்ரொன் (Delmicron) என்ற புதிய உருமாறிய கொரோனா குறித்து அண்மையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில், ப்ளூவென்சா எனப்படும் குளிர் காய்ச்சலுடன் கொரோனா பாதிப்பும் சேர்ந்த ப்ளோரொனா என்னும் நோய் இஸ்ரேலில் முதன்முறையாக கண்டறியப்பட்டுள்ளது. இதேவேளை உலகம் முழுவதும் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 29 கோடியை அண்மித்துள்ளது. நேற்றைய நிலைவரப்படி 289,745,765பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 5,458,379பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு கொரோனாவால் பாதிக்கப்பட்டோரில் 30,057,112பேர் உலகம் முழுவதுமுள்ள பல்வேறு வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவருவதுடன் அவர்களில் 89,082பேரின் நிலை கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### பிரித்தானியாவில்…

## 48 மணி நேரத்தில் 18 பேரை கடித்த அணில் கருணைக்கொலை



பிரித்தானியாவில் அணிலொன்று சுமார் 48மணிநேரத்துக்குள் 18 பேரை தாக்கியுள்ளது. இதனால் குறித்த அணிலை வனத்துறையினர் கருணைகொலை செய்துள்ளனர்.

பிளின்ட்ஷயரிலுள்ள பக்லியில் சாம்பல் அணிலொன்று இரண்டு நாட்களாக (சுமார் 48 மணிநேரத்துள்) 18 பேரை கடித்துள்ளது.

உள்ளூர் மக்களால் ‘ஸ்ட்ரைப்’ என்ற பெயரால் அழைக்கப்படும் இந்த அணில் குறித்து பற்றி கொரின் ரெனால்ட்ஸ் என்பவர் தெரிவிக்கையில்,

“இந்த ஸ்ட்ரைப் எனது தோட்டத்துக்கு வந்து தானியங்களை தின்றுவிட்டு செல்லும். முதலில் என்னை எந்த தொந்தரவும் செய்யவில்லை. ஒரு நாள் திடீரென அது என்னை கடித்தது. அதன் கடியால் எனக்கு இரத்தம் வந்தது" என்று கூறினார்.

மேலும் மற்றொருவர் கூறும்போது, “ஸ்ட்ரைப் என்னைக் கடித்ததுடன், என் நண்பனையும் தாக்கியது. மேலும் பலரைத் தாக்கியது. என் வீட்டை விட்டு வெளியே செல்ல பயமாக உள்ளது. தான் ஸ்ட்ரைப் கடித்ததை சமூக வலைதளத்தில் புகைப்படத்துடன் பதிவிட்டுள்ளேன்” என்று அவர் தெரிவித்தார். இந்த அணிலானது அப்பகுதியில் மட்டும் 18 பேரை தாக்கியுள்ளது.

இறுதியில் ஸ்ட்ரைப் கால்நடை மருத்துவரால் பிடிக்கப்பட்டது. இதனை காட்டுக்குள் விடுவது சட்டப்பட்டி குற்றம் என்பதால், கருணைக்கொலை செய்யப்பட்டது.

### 2022இல் மக்களுக்கு…

## “உணவு தான் முக்கியம் அணுஆயுதம் அல்ல”

### வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவிப்பு



“2022இல் பொதுமக்களுக்கு உணவு தான் முக்கியம், அணுஆயுதங்கள் அல்ல” - இவ்வாறு வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன் தெரிவித்துள்ளார்.

தந்தையின் மரணத்திற்கு பின்னர் அந்நாட்டு ஜனாதிபதியாகப் பதவியேற்று 10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள நிலையில், கொரிய தொழிலாளர் கட்சியின் உயர்மட்டக் கூட்டம் இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

“வடகொரிய பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வகையில், ஐந்தாண்டு திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு செயற்படுத்தப்படும் எனவும், அவர் குறிப்பிட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

வழக்கமாக இத்தகைய கூட்டத்தில் அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுக்கு மிரட்டல் விடுக்கும் வகையில் பேசும் கிம் ஜோங் உன், வடகொரியாவில் பஞ்சம் நிலவுவதாக தகவல்கள் வெளியான நிலையில், முதன்முறையாக இவ்வாறு பேசியிருப்பது பலருக்கும் வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

### நடுவானில் உறுதியான கொரோனா பாதிப்பு:

## 3 மணி நேரம் விமான கழிவறையில் தனிமைப்படுத்திக் கொண்ட பெண்



அமெரிக்காவை சேர்ந்த பெண்ணொருவருக்கு நடுவானில் கொரோனா பாதிப்பு உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து, 3 மணி நேரம் கழிவறையில் தன்னை தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து சுவிட்ஸர்லாந்திற்கு செல்வதற்காக சிகாகோவிலிருந்து ஐஸ்லாந்து சென்ற விமானத்தில், மரிசா ஃபோட்டியோ என்ற பெண், குடும்பத்தினருடன் பயணித்துள்ளனர். விமானம் புறப்பட்ட சில மணி நேரத்தில், மரிசாவிற்கு தொண்டை கரகரப்பு போன்ற அறிகுறிகள் ஏற்பட்டுள்ளதால், தான் வைத்திருந்த ‘ரெபிட் கிட்’ மூலம் பரிசோதித்துள்ளார்.

அதில் அவருக்கு தொற்று உறுதியானதையடுத்து, விமான பணிப்பெண்ணிடம் தகவல் தெரிவித்து, தனி இருக்கை கேட்டுள்ளார். இருக்கைகள் நிரம்பியிருந்ததால் பயணிகளின் நலன் கருதி அவர் கழிவறையில் தனிமைப்படுத்திக் கொண்டுள்ளார்.

பயணம் மேற்கொள்ளும் முன் 2 பி.சி.ஆர். பரிசோதனைகளையும், 5 ரெபிட் பரிசோதனைகளையும் மரிசா மேற்கொண்டபோது அவருக்கு கொவிட் நெகட்டிவ் என முடிவு வந்துள்ளது.

## 18இல் பூமியைக் கடக்கும் விண்வெளிப் பாறை



சிறிய விண்வெளிப் பாறை ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி பூமியைக் கடந்து செல்ல இருப்பதாக நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

‘7482’ என்று பெயரிடப்பட்ட இந்த விண்வெளிப் பாறையை கடந்த 1994ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய வானியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். 3,280 அடி விட்டம் கொண்ட இந்தப் பாறை எதிர்வரும் 18ஆம் திகதி பூமியைக் கடந்து செல்லும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூமியிலிருந்து 12 இலட்சம் மைல்கள் தூரத்தில் கடந்து செல்லும் என்றும், இதனால் பூமிக்கு எந்த பாதிப்பும் இல்லை என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு, நடப்பாண்டுக்கு பின் இந்தப் பாறை 2105ஆம் ஆண்டுதான் பூமிக்கு அருகில் வரும் என்றும் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

## அடுத்த 10 ஆண்டுகளில் ஒரு மில்லியன் உயிரினங்கள் அழியும்

### இயற்கைக்கான உலகளாவிய நிதியம்



அடுத்த 10 ஆண்டுகளில் உலகில் மிக அதிகளவிலான உயிரினங்கள் அழிந்துபோகும் என ‘WWF’ எனப்படும் இயற்கைக்கான உலகளாவிய நிதியம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பின் ஆய்வறிக்கையில், அடுத்த பத்தாண்டுகளுக்குள் சுமார் ஒரு மில்லியன் உயிரினங்கள் அழிந்து போகலாம் என்றும் இது டைனோசர் யுகத்தின் முடிவிலிருந்து மிகப்பெரிய வெகுஜன அழிவு நிகழ்வாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யானைகள், பனிக்கரடிகள், சுறாக்கள் என 40 ஆயிரம் இனங்கள் அழிவின் விளிம்பில் இருப்பதாகவும் WWF தெரிவித்துள்ளது. 2035 கோடையில் ஆர்க்டிக் முழுவதுமாக பனி இல்லாமல் இருக்கும் என்று அந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வரலாறு படைக்குமா இந்திய அணி?

## இன்று ஆரம்பமாகிறது இரண்டாவது டெஸ்ட்



தென்னாபிரிக்க அணியின் கோட்டை என வர்ணிக்கப்படும் செஞ்சூரியனில் நடைபெற்ற பொக்ஸிங் டே டெஸ்டில் இந்திய அணி 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்க அணியை வீழ்த்திய நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவது போட்டி இன்று ஜோஹனஸ்பேர்க்கில் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

கடந்த 30 ஆண்டுகளாக தென்னாபிரிக்காவுக்கு சென்று விளையாடிவரும் இந்திய அணிக்கு அங்கு ராசியான ஒரு மைதானம் எதுவென்றால் அது இன்று போட்டி ஆரம்பமாகும் ஜோஹனஸ்பேர்க் மைதானம்தான். இந்த மைதானத்தில் இந்திய அணி ஒருபோதும் தோற்றதில்லை. இந்த மைதானத்தில் தோல்வியே காணாத ஒரே அணி இந்தியாதான்.

குறித்த மைதானத்தில் இதுவரை 5 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள இந்தியா அதில் இரு வெற்றிகளையும், மூன்று சமநிலைகளையும் கண்டுள்ளது. தென்னாபிரிக்க அணி இந்த மைதானத்தில் 42 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 18 வெற்றி, 13 தோல்வி, 11 சமநிலைகளை சந்தித்துள்ளது. இங்கு இறுதியாக நடைபெற்ற 20 டெஸ்ட் போட்டிகளில் 19 போட்டிகளுக்கு முடிவு கிடைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த டெஸ்டில் விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய அணி வென்றால் முதன்முறையாக தென்னாபிரிக்காவில் தொடரை வென்று வரலாறு படைத்துவிடும். மேலும், தென்னாபிரிக்காவுக்கு எதிராக அதிக வெற்றிகளை குவித்த அணித்தலைவர் (9ஆவது வெற்றி) என்ற சிறப்பை விராட் கோஹ்லி பெறுவார். இதேவேளை முதல் டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற இந்திய அணி, செஞ்சூரியனில் வெற்றியை ருசித்த முதல் ஆசிய அணி என்ற பெருமையையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய சதுரங்கப் போட்டியில் சுசல் த சில்வா, தருஷி வெற்றி







(என். ஜெயரட்னம்)

2021ஆம் ஆண்டுக்கான இலங்கை தேசிய சதுரங்க வல்லுனர்களுக்கு இடையிலான போட்டிகளில் கொழும்பு நாளந்தா கல்லூரி மாணவன் சுசல் த சில்வா மற்றும் விசாக்கா வித்தியாலய மாணவி நிக்லேக்ஷா தருஷி ஆகியோர் வெற்றிபெற்றனர்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் கடந்த டிசம்பர் 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை ரவுண்ட் ரொபின் அடிப்படையில், பாரம்பரிய சதுரங்க வடிவமைப்பில், 13 சுற்றுகள் கொண்ட இப்போட்டிகளின்போது தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கையில் தலைசிறந்த 14 வீர, வீராங்கனைகள் மட்டுமே கலந்துகொண்டனர்.

இதன்போது யாழ்ப்பாணம் கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன் எஸ்.சிவதனுஜன், கொழும்பு கேட்வே கல்லூரி மாணவன் நபில் நசார் மொஹமட் ஆகியோர் முறையே 6 ஆவது மற்றும் 13ஆவது இடங்களைப் பெற்றனர்.

இலங்கை சதுரங்க சம்மேளனத்தின் தலைவரும், ஆசிய சதுரங்க சம்மேளனத்தின் உப தலைவருமான லக்ஷ்மன் விஜேசூரிய பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பணப் பரிசில்கள் மற்றும் வெற்றிக்கிண்ணங்களை வழங்கி சிறப்பித்தார்.

# சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வருடாந்த பொதுக்கூட்டமும், கௌரவிப்பும்







(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வருடாந்த பொதுக்கூட்டமும், விளையாட்டு வீரர்கள், பல்துறை சாதனையாளர்கள், சமூக சேவகர்கள், கல்விமான்கள் கௌரவிப்பு நிகழ்வும் பிளாஸ்டர் விளையாட்டுக்கழக நிர்வாகத்தலைவர் ஆர்.எம்.இம்தாத்தின் தலைமையில் வெள்ளிக்கிழமை சாய்ந்தமருது கமு/அல்-ஜலால் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இசைநிகழ்வுகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் பிளாஸ்டர் விளையாட்டுக்கழக நிர்வாகிகள் மற்றும் வீரர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டிருந்ததுடன், இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா கலந்துகொண்டார். மேலும், இந்நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது கமு/அல்-ஜலால் வித்தியாலய அதிபர் எம்.ஐ.எம்.ஸைபுதீன், பிரதியதிபர் ரீ.கே.எம். சிராஜ், சாய்ந்தமருது பலநோக்கு கூட்டுறவு சங்கத்தலைவர் எம்.எம்.உதுமாலெப்பை, டௌன் ரவல்ஸ் முதல்வர் ஏ.எல்.ஜலீல், இஃறா நிறுவன அதிபர் யூ.எல்.சத்தார், அல்-அமானா நற்பணி மன்ற தலைவர் ஏ.எல்.எம்.பரீட், தொழிலதிபர்களான ஐ.எல்.ரிஸ்வான், எம்.என்.எம்.றிம்ஸான் உட்பட கழக நிர்வாகிகள், வீரர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் 2022ஆம் ஆண்டுக்கான நிர்வாக சபையினர் அறிவிக்கப்பட்டதுடன், இருபதுக்கு 20, ஒருநாள் மென்பந்து, கிங் கோர்சஸ் அணிகளுக்கான தலைவர்கள் நியமிக்கப்பட்டனர். அத்துடன் கடந்த வருடம் சிறந்த முறையில் நிர்வாகத்தை மேற்கொண்ட நிர்வாகிகள், திறமையை வெளிக்காட்டிய வீரர்கள் எனப்பலரும் அதிதிகளினால் பதக்கம் அணிவித்து விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதன்போது முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சாய்ந்தமருது, காரைதீவு பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழுள்ள விளையாட்டுக் கழகங்கள் சிலவற்றுக்கு விளையாட்டு உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# 12ஆவது பொதுநலவாய விளையாட்டு விழா

## மகாராணியாரின் கோல் இன்று இலங்கை வருகிறது

1ஆவது பொதுநலவாய விளையாட்டு விழாவானது அடுத்த ஆண்டு ஜூலை 28ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 8ஆம் திகதி வரை இங்கிலாந்தின் பேர்மிங்ஹாம் நகரில் நடைபெறவுள்ள நிலையில், குறித்த பொதுநலவாய விளையாட்டு விழாவை முன்னிட்டு மகாராணியாரின் செய்தியைத் தாங்கிய கோல் இன்று இலங்கைக்கு கொண்டுவரப்படுகிறது.

இந்த வருடம் பொதுநலவாய அமைப்பு நாடுகளுக்கு கொண்டு செல்லப்படும் மகாராணியாரின் செய்தி தாங்கிய கோல், இன்று கட்டுநாயக்கவுக்கு விமானம் மூலம் கொண்டுவரப்படவுள்ளது.



அங்கிருந்து பிரபல மெய்வல்லுநர்கள் சகிதம் சுதந்திர சதுக்கத்துக்குக் கொண்டுசெல்லப்படும் மகாராணியார் கோல், பின்னர் ஒலிம்பிக் இல்லத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

பிரித்தானிய தூதரகம்,பிரித்தானிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு இன்று கொண்டுசெல்லப்படும் மகாராணியாரின் கோல், நாளை கண்டி நோக்கிக் கொண்டு செல்லப்படும். அங்கு பிரித்தானியரால்




நிர்மாணிக்கப்பட்ட விக்டோரியா நீர்த்தேக்கம், ரனபிம ரோயல் கல்லூரி ஆகியவற்றுக்கும், பின்னர் ஹந்தானையிலுள்ள இலங்கை தேயிலை நூதனசாலைக்கும் மகாராணியாரின் கோல் எடுத்துச் செல்லப்படும்.

குறித்த மகாராணியாரின் கோல் நாளை மறுதினம் பொகவந்தலாவை, கேர்க்கஸ்வோல்ட் தோட்டத் தொழிற்சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டு கோலின் முக்கியத்தும் குறித்து தோட்ட அதிகாரிகளுக்கும், ஏனையவர்களுக்கும் விளக்கப்படும். பொதுநலவாய விளையாட்டு விழா வரலாற்றில், மகாராணியாரின் செய்தி தாங்கிய கோல், தோட்டத் தொழிற்சாலைக்குக் கொண்டு செல்லப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

இறுதியாக கேர்க்கஸ்வோல்ட் தோட்டத்திலிருந்து கொழும்புக்குக்கொண்டு வரப்படும் மகாராணியார் கோல் விளையாட்டுத்துறை அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டு 6ஆம் திகதி பங்களாதேஷுக்கு அனுப்பிவைக்கப்படும்.

# வலைப்பந்து போட்டியில் கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவு அணி சம்பியனானது



(வத்துகாமம் நிருபர்)

மத்திய மாகாண விளையாட்டுத் திணைக்களம் கண்டி மாவட்ட அணிகளுக்கிடையே ஒழுங்கு செய்த வலைப்பந்து போட்டித் தொடரின் இறுதிப் போட்டியில் விளையாடிய கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவு அணி, கண்டி பிரதேச செயலாளர் பிரிவு அணியை 41 - 14 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது.

சம்பியன் கேடயத்தை வென்ற கங்கவட்டகோரளை பிரதேச செயலாளர் பிரிவு அணி கேடயத்துடன் ரூ.50 ஆயிரம் ரூபா ரொக்கப் பணப்பரிசையும் வென்றது. இறுதிப் போட்டியில்




தோல்வியடைந்து இரண்டாம் இடத்தைப் பெற்ற கண்டி பிரதேச செயலாளர் அணி கேடயத்துடன் ரூ.25 ஆயிரம் பணப்பரிசையும் வென்றது.

# பாடசாலை றக்பி செவன்ஸ் போட்டி தொடர் வெற்றிகரமாக நிறைவு




டயலொக் நிறுவனத்தின் பூரண அனுசரணையில் பாடசாலை றக்பி அணிகளுக்கிடையிலான அணிக்கு ஏழு பேர் பங்கேற்கும் றக்பி செவன்ஸ் போட்டித்தொடர் வெற்றிகரமாக நிறைவுபெற்றுள்ளது.

50 பாடசாலை றக்பி அணிகள் பங்கேற்கும் பாடசாலை றக்பி செவன்ஸ் போட்டியானது 5 மாகாணங்களுக்கு தனித்தனியாக நடத்தப்பட்டது. முதலில் நடைபெற்ற மேல் மாகாண பாடசாலை அணிகள் பங்கேற்ற போட்டியில் பம்பலப்பிட்டி புனித பேதுருவானவர் கல்லூரி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. அதன் பின்னர் மத்திய மாகாண பாடசாலை அணிகள் பங்கேற்ற போட்டியில் ட்ரினிட்டி கல்லூரி சம்பியனாக தெரிவானது.

அதனைத் தொடர்ந்து வடமேல் மாகாண பாடசாலை அணிகள் பங்கேற்ற போட்டியில் குருநாகல் மலியதேவ கல்லூரி சம்பியனாக தெரிவானது. நான்காவதாக சப்ரகமுவ மாகாண பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டியில் தல்துவ மத்திய கல்லூரி சம்பியன் பட்டத்தை சுவீகரித்தது. இறுதியாக கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தென் மாகாண பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டியில் ரிச்மொன்ட் கல்லூரி சம்பியனானது.

காலி சுதந்திர வர்த்தக வலய மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தென் மாகாண பாடசாலை அணிகளுக்கிடையிலான போட்டியின் இறுதிப்போட்டியில் சென்.அலோய்சியஸ் கல்லூரியை எதிர்த்து விளையாடிய ரிச்மொன்ட் கல்லூரி 21-7 என்ற புள்ளிகள் கணக்கில் சம்பியனானது.

Dialog
SCHOOLS
RUGBY
SEVENS

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7